கல்கி

KALKI
26.1.86
ரூ. 1.50



பாக். அணுகுண்டு நிஜமானதா? அதைச் சந்திக்க நாம் தயாரா?

— பிரதம தளபதி
கிருஷ்ணசாமி சுந்தர்ஜி
பேட்டி

இதோ, எனது கணவர்!



கோத்ரெஜ் வீட்டுக்கு வந்தபோது எடுத்தது இந்த படம்.

பல ஆண்டுகளுக்கு முன்பு.

ஆனல், கோத்ரெஜுடன் தான் வளர்ந்தது மோகனுக்கு—அதாவது என் கணவருக்கு—இன்னும் நினைவிருக்கிறது.

எனவே எங்களுக்குத் திருமணமானதும் கோத்ரெஜ்தான் வாங்கினேம். அதற்குக் காரணமுண்டு. கோதரெஜ் தானே முன்னேடியான ரெ:ப்ரிஜெரேட்டர்! தலைமுறை தலைமுறையாக குடும்பத்தின் முதல் விருப்பமும் அதுவே.



பாரம்பரியமாகவே மிகச் சிறந்தது கோத்ரெஜ் என்பது எல்லார்க்கும் தெரியும்—நீடித்திருக்கும் மதிப்பிலே உயர்ந்த வீட்டு பயோகப் பொருள்களுக்கு நீடித்திருக்கும் அதன் உறவு.

இன்னும் என் கணவர் அன்புடன், உறுதிமிக்கவராக இருக்கிருர். கோத்ரெஜ் கூடத்தான்.

பொற்கோயிலில் ராணுவ நடவடிக்கை— நமது உளவுத்துறை ஏமாந்து போயிற்று?

—ஜெனரல் சுந்தர்ஜியுடன் பேட்டி

விநாடி பிசகாத ராணுவப் பங்க்சுவாலிட்டியுடன் பொது ஜனத் தொடர்பு அதிகாரி என்னை சுந்தர்ஜியிடம் அழைத்துச் சென்றபோது, அவர் இருக்கையிலிருந்து எழுந்து முன்னால் வந்து "நமஸ்காரம்" என்று புன்னகையுடன் கரம் குவித்தார்.

கல்கியின் சார்பாக, அவர் ஏற்கவிருக்கும் உயர் பதவிக்காக நான் வாழ்த்து சொல்லி விட்டு, "ஆங்கிலத்தில் பேசுவோமா? உங்களுக்குத் தமிழ் ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ" என்றேன்.

அவர் சிரித்தார். "தமிழ் ஞாபகமில்லாமல் இல்லை. ஆனால் ஆங்கிலத்தில் பதில் சொல்வது எனக்கு சௌகர்யம்தான்" என்றார் பேட்டி துவங்கியது.

கேள்வி: கடந்த சில வருஷங்களாக நாட்டில் சட்டமும் ஒழுங்கும் தோற்றுப் போன தருணங்களில், ராணுவத்தை உதவிக்குக் கூப்பிடுவது வழக்கமாகி விட்டது. உதாரணமாக தில்லி கலவரங்கள், குஜராத் கலவரங்கள் போன்றவை. இந்த மாதிரி ராணுவத்தின் உதவியை நாடிப் போவதன் காரணம் என்ன? இதற்கு என்ன சமாதானம் கூற முடியும்? இப்படிப்பட்ட நிலை உருவாவது வருந்தத்தக்க விஷயம் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?

சுந்தர்ஜி: சட்டப்படியே, ராணுவத்திற்கு இரண்டு வகைக் கடமைகள் இருக்கின்றன என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். நாட்டை அந்நிய ஆக்ரமிப்பிலிருந்து காப்பது முதன்மையான பணி. இரண்டாவது பணி, உள் நாட்டில் அரசாங்கத்தின் அதிகார பலத்தால் அடங்க முடியாத ஒரு கலவர நிலை உருவாகும்போதோ அல்லது இயற்கையின் விபரீதங்களினால் ஏற்படும் சேதங்களின் போதோ ராணுவம் அழைக்கப்படும். அப்போது உதவிக்குச் செல்லவேண்டும். அதனால் ராணுவம் உதவிக்கு வருவது சரியா என்கிற பிரச்னையே எழவில்லை.

கேள்வி: ஆனால் இப்படி அடிக்கடி அழைக்கப்படுவது கவலை அளிக்கிற விஷயம் இல்லையா?



சுந்தர்ஜி பிப்ரவரி தொடக்கத்தில் இந்திய ராணுவத்தின் பிரதம தளபதியாகப் பொறுப்பேற்கப் போகிறார். அவர் ஒரு தமிழர். அவருடைய பெயருடன் ஒரு 'ஜி' சேர்ந்திருப்பதால் அவர் தமிழர் என்பதே பலருக்குத் தெரியாமல் இருக்கிறது. அவர்தான் பொற்கோயிலில் ராணுவ நடவடிக்கைக்குத் தலைமை தாங்கியவர். அவரை வாஸந்தி சந்தித்த போது......

சுந்தர்ஜி: அரசாங்கத்துக்கு இதைப் பற்றிய முழு பிரக்ஞை இருக்கிறது. செய்திகளிலிருந்தும் பாராளுமன்றத்தில்- மந்திரிகளின் பேச்சிலிருந்தும், அவர்களே இதைப் பற்றின கவலையை வெளிப்படுத்துவதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். ராணுவத்தின் உதவியை நாடிப் போகும் சந்தர்ப்பங்களைக் குறைக்க வேண்டும். ஆயுத போலீஸின், கிட்டத்தட்ட ராணுவம் போன்ற சில துணை அமைப்புக்களின் திறமைகளை அதிகரிக்க வேண்டும் என்கிற தீவிர எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

கேள்வி: போலீஸ் இப்பொழுது திறமையுடன் செயல்படவில்லை என்பது இதன் அர்த்தமல்லவா?

சுந்தர்ஜி: அதுதான் அர்த்தமாக இருக்க வேண்டும்! அதன் காரணங்கள் எதுவாக இருந்தாலும் அதைப் பற்றி அலசவோ விவாதிக்கவோ நான் தயாராக இல்லை. அது என் அதிகாரத்துக்குட்பட்டதில்லை. அவர்களுக்குப் பயிற்சி சரியில்லையா, அல்லது அதிகாரங்கள் குறைவா என்றெல்லாம் எனக்குத் தெரியாது. அவர்கள் இன்னும் கண்டிப்பாகவும் திறமையாகவும் செயல்பட ஆவன செய்யலாம். அவர்களது திறமை அதிகரித்தால் ராணுவத்தை உதவிக்கு அழைக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் நிச்சயம் குறைந்து போகும். எங்கள் வீரர்களின் குடும்ப வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுவது குறையும்.

கேள்வி: அதெப்படி கூறுகிறீர்கள்?

சுந்தர்ஜி: விளக்குகிறேன். சராசரியாய் ஏழு வருஷங்களுக்கு ஒருமுறைதான் போர் அணியில் இருக்கும் சிப்பாய்களுக்கு குடும்பத்துடன் ஓராண்டு இருக்க வசதி கிடைக்கும். அந்த மாதிரி சமயங்களிலும் இரண்டு மாதங்கள் பயிற்சிக்காகக் குடும்பத்தைப் பிரிந்து செல்ல வேண்டியிருக்கும். அதற்கு மேல், அவர்கள் நாட்டுக்குள் நடக்கும் கலவரங்களை அடக்க அழைக்கப்படுவார்களானால் அது அவர்களுக்கு அதிகப்படியான பளுதானே.

கேள்வி: கலவரங்களை அடக்கக் கூப்பிடப்படும் தருணங்களில் ராணுவத்தினர் அத்து மீறி நடப்பதாகக் கருதப்படுகிறதே?

சுந்தர்ஜி: பொதுவாகப் பார்க்கும்போது அத்து மீறி ராணுவம் நடந்து கொண்டதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் நாங்கள் கண்டிப்பானவர்கள்தான்.... மிச்சம் மீதி வைக்க மாட்டோம்! இந்த இரண்டு குணாதிசயங்களும்தான் மக்களுக்குச் சற்றுப் பிடிக்காமல் இருக்கிறதோ என்னவோ? அத்து மீறிய நடத்தை பற்றி எப்பொழுது புகார் வந்தாலும் நாங்கள் உடனே விசாரணை நடத்தி குற்றம் நடந்திருந்தால் தண்டிக்காமல் விட்டதில்லை. ஆனால் பொதுவாக நோக்குமிடத்தில் அபூர்வமாக ஒன்றிரண்டு சம்பவங்களைத் தவிர்த்து ராணுவத்தின் அத்து மீறல் நடந்ததாகக் கருத இடமில்லை.

கேள்வி: இந்திய ராணுவத்தின் பல பிரிவுகள் பிரிட்டிஷ்காரர்கள் ஆரம்பித்து வைத்த சமய, மாநில அடிப்படையிலேயே இன்னமும் இருக்கிறதே? இது சரியல்ல என்ற எண்ணம் பலரிடம் தோன்றி வருகிறதே? இப்படிப்பட்ட மத, மாநில உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய பிரிவுகள் ராணுவத்தில் இருப்பது ஆபத்து இல்லையா?

சுந்தர்ஜி: இப்படிப்பட்ட அமைப்பை ஏற்படுத்தும்போது பிரிட்டிஷ்காரர்களின் குறிக்கோளும் எண்ணமும் எப்படிப்பட்டதாக இருந்தாலும், இந்த ரெஜிமெண்டுகளிடையே ஒரு மரபு வளர்ந்திருக்கிறது. நான் ஒரு இந்தியன், ராணுவ வீரன், தேசிய கொடிக்கும் தேசத்துக்கும் என்னை அர்ப்பணித்துக் கொண்டவன் என்கிற எண்ணங்களுக்கும் மேலாக ஒரு ராணுவ வீரனைத் தன் உயிரைத் துச்சமாக மதித்து முன்னேறத் தூண்டுவது அவனது ரெஜிமெண்டைப் பற்றின பெருமித உணர்வுதான். தனது படைப் பிரிவுக்கு(ரெஜிமெண்டுக்கு) பெருமை சேர்க்க வேண்டும் என்ற ஆவேசமும் போட்டா போட்டியும் ராணுவ வீரனை இயக்குகிறது. மதம் அல்லது பிராந்திய உணர்வு இல்லாத அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்கிற அரசின் எண்ணத்திற்கு நாங்கள் முழு ஆதரவு கொடுப்போம். ஆனால் அந்த மாற்றம் படிப்படியாக வரவேண்டும். ராணுவத்தினரின் திறமையைப் பாதித்து விடும் மாற்றமாக இருந்துவிடக் கூடாது. என்னுடைய கவலை அதுதான். ராணுவத் தலைவனாக இருக்கும் காலத்தில் நான் தீவிரமாகக் கவலைப்பட வேண்டிய விஷயம் இது. ராணுவத்தின் திறமை குறைந்து போனால் என்னை யாரும் மன்னிக்க மாட்டார்கள். இன்னொரு விஷயமும் கவனிக்க வேண்டும்.







மத அல்லது பிராந்திய உணர்வை அடிப்படையாகக் கொண்ட பிரிவுகள் என்று சொல்வது ஓரளவுக்குத்தான் சரி. ஜாட் ரெஜிமெண்ட், கட்வால் ரைஃபில்ஸ், ராஜ் புட்டாளு, கொமானி, ஸீக் ரெஜிமெண்ட் என்றெல்லாம் பெயர்கள் சூடிய பிரிவுகள் உள்ளன. ஆனல், ராஜ் புட்டாளு ரைஃபில்ஸில் எல்லாரும் ராஜ புத்திரர்கள் இல்லே. மற்றவர்களும் இருக்கிறார்கள். கட்வாலில் கொமானியர்களும் இருக்கிறார்கள்....

கேள்வி: சீக்கிய ரெஜிமெண்ட் எப்படி?

சுந்தர்ஜி: சீக்கிய ரெஜிமெண்ட்டில் அநேகமாய்சீக்கியர்கள்மட்டும்தான். இதைத் தவிர வேறு **fixed class** பிரிவுகளும் இருக்கின்றன. **Class**— கவனியுங்கள்; **Caste** இல்லே. வேறு பிரிவுகளில் பலவித மாநிலத்தைச் சேர்ந்த, இனத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். என்னுடைய ரெஜிமெண்ட்டில் நிறைய கலப்படம் இருக்கிறது. என்னுடைய அனுபவத்தில் **class units, mixed class units** இரண்டுமே மிக தீரமாகப் போரிடும் பிரிவுகளே. ஒன்று உசத்தி ஒன்று தாழ்த்தி என்று நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். அது நிஜமில்லே. அந்தந்த ரெஜிமெண்ட்டைக் காக்கும் அதன் மேன்மைக்காகப் பாடுபடும் மரபு ராணுவ வீரனுக்குள் ஆழப் புதைந்து போயிருக்கிறது. அதைத் திடீரென்று அடியோடு மாற்றினல் ஆபத்தாக முடியும். நான் அடிக்கடி ஒரு சின்ன உதாரணத்தை நண்பர்களுக்குச் சொல்வேன். ஒரு குடியானவனின் ஜோடுகளேப் பற்றி. அவை அவனுக்கு மிகவும் விருப்பமானவை. அடிப்பாகம் தேய்ந்து போக ஆரம்பித்தது. அதைப் புதுப்பித்தான். இரண்டு மூன்று முறை. சில நாட்கள் கழித்து மேல் பாகத்தையும் புதுப்பித்தான். ஆனலும் அவனேப் பொருத்தமட்டில் அதே பழைய ஜோடுகள்தான் அவை! அந்த மாதிரிதான் மரபுகளே மாற்ற முடியும். அதன் ஜீவனேக் காப்பாற்றி உபயோகமற்றுப் போனதைச் செப்பனிட வேண்டும். இல்லாவிட்டால் அடிப்படையே ஆட்டம் கண்டுவிடும்.



கேள்வி: சமீபத்தில் ராணுவத்தின் சீக்கியப் பிரிவினர் கிளர்ச்சியில் இறங்கியது தான் என்னுடைய சந்தேகத்துக்கும் கேள்விக்கும் காரணமாகிறது.

சுந்தர்ஜி: அந்தக் கிளர்ச்சிக்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலில் தலைமையின் தோல்வி. **(failure of command.)** இதை மறுக்க முடியாது. என்னுடைய அபிப்ராயப்படி, ஒரு சைன்யம் நன்கு செயல்படுவதும் செயல்படாமல் போவதும் படைத் தலைவனின் திறனேயே பொறுத்தது. இரண்டாவது காரணம் அந்தச் சமயத்தில் சீக்கிய சிப்பாய்கள் மிகப் பெரிய அளவில் மனக்கிலேசம் அடைந்திருந்

தார்கள். அதை நாம் மறக்க முடியாது. இன்னொரு விஷயத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டும். சுமார் ஐம்பது யூனிட்டுகள் — முழுக்க முழுக்க சீக்கியர்களைக் கொண்ட பிரிவுகள் — ராணுவத்தில் இருக்கின்றன. அவற்றில் மூன்றே மூன்றுதான் நீங்கள் குறிப்பிடுகிற கிளர்ச்சியில் பங்கு கொண்டன. சிலர் ராணுவத்தை துறந்து ஓடினார்கள். இந்த ஐம்பது பிரிவுகள் தவிர வேறு ஐம்பது கலப்பட யூனிட்டுகளிலும் ஏராளமான சீக்கியர்கள் இருக்கிறார்கள். அவற்றில் இரண்டே இரண்டில்தான் பிரச்னை ஏற்பட்டது. ஆக, நூறு யூனிட்டுகளில் ஐந்தே இடங்களில்தான் இப்படிப்பட்ட சம்பவம் நடந்தது. இதற்கு அந்தந்த பிரிவின் தலைமை தான் பொறுப்பேற்க வேண்டும். இதை அவர்களுடைய தோல்வியாகத்தான் கருத வேண்டும் என்றாலும் நாம் நமது ஜூனியர் ஆபீஸர்களின் திறனைக் குறைத்து மதிப்பீட்டுக் கடுமையாகக் கண்டனம் தெரிவிக்கவும் கூடாது. பாக்கி யூனிட்டுகளில் அதிக பட்சம் சீக்கியர்கள் இருந்தாலும் கிளர்ச்சி எழாததற்கு அந்தந்தக் கமாண்டரின் திறமை தான் காரணம். அதே சமயத்தில் அவர்களுக்குக் கீழ் பயிற்சி பெற்ற சீக்கிய வீரர்களின் விசுவாசத்தையும், தேச பக்தியையும், மன ஒழுக்கத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களும் அந்தச் சமயத்தில், பெருமளவு மனக்கிலேசம் அடைந்துதான் இருப்பார்கள். ஆனாலும் அவர்கள் சோதனையான சமயத்தில் காண்பித்த மனத்திண்மையையும் கட்டுப்பாட்டையும் நினைத்து நினைத்து நான் ஆச்சரியப்படுகிறேன். எப்பொழுதுமே அவர்களை நான் மிக உயர்வாக மதித்திருக்கிறேன். இப்போது என் மதிப்பில் அவர்கள் மேலும் உயர்ந்திருக்கிறார்கள்.

கேள்வி: இது அவர்களுக்கு மிக அருமையான பாராட்டு.....

சுந்தர்ஜி: (உணர்ச்சி வசப்பட்டு) இது என்னுடைய இதயத்திலிருந்து வருவது! சத்தியமானது. இது எல்லாருக்கும் தெரிய வேண்டிய விஷயம். நம் நாட்டில் பலர் கெடுதல்களையே பார்க்கிறார்கள். பொறுப்பில்லாமல் பேசுகிறார்கள். நல்லதான இன்னொரு பக்கத்தைப் பார்ப்பதே இல்லை. இது சீக்கியர்களை மிகவும் புண்படுத்துகிறது.

கேள்வி: உங்கள் தலைமையின் கீழ்தான் பொற்கோவிலில் ராணுவப் பிரவேசம் நடந்தது. அப்பொழுது எந்த வகை உணர்வுகள் உங்களை பாதித்தன? எந்த அளவுக்கு நமது ராணுவம் அதற்குத் தயாராக இருந்தது? ராணுவத்திற்கு, எதிரியின் பலத்தைப் பற்றிப் போதிய தகவல்கள் கிடைத்திருக்கவில்லை என்று கேள்விப்பட்டேனே. அது, உண்மையா?''

சுந்தர்ஜி: இல்லை. அது உண்மையில்லை. எங்களுக்குப் போதுமான அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது. பொற்கோவிலுக்குள் இருக்கும் தீவிரவாதிகளைப் பற்றி விவரமான தகவல்கள் கிடைத்திருந்தது. முதல் நாள் மாலை கூடப் புகைப்படங்களின் மூலம் விவரம் சேகரித்தோம். விவரம் தெரியாமல் நாங்கள் நுழைந்தோம் என்பது தவறு. ஆனால் பரவலாக அப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணமும் இருக்கிறது. பொற்கோயிலில் இந்த நடவடிக்கைக்குப் பிறகு நான் விமானமேறப்போகும் சமயத்தில் ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையாளர், ''ஒற்றாடலில் தோல்வியா?'' (**Was there a failure of Intelligence?"**) என்று ஒரு கேள்வி கேட்டார். எனக்குப் பதில் சொல்லப் பதினைந்து வினாடிகளே இருந்தன. ''சுருக்கமாகக் கூறுவதானால் 'ஆமாம்' ''என்றேன். அந்த ஒரு வார்த்தைதான் ஏகப்பட்ட சந்தேகங்களைக் கிளப்பிவிட்டது. இரண்டு விஷயங்கள் எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை என்பது உண்மை. பயங்கரவாதிகளின் ஒட்டு மொத்தமான நிர்வாக அமைப்பு எப்படிப்பட்டது என்று தெரியவில்லை. பல ரேடியோ அலை வரிசைகளில் அவர்கள் செய்தி தொடர்பு கொண்டிருப்பதைப் பற்றியும் எங்களுக்குப் பின்னால்தான் தெரிய வந்தது. இந்த ராணுவ நடவடிக்கையின்போது நிறைய ரேடியோ ஸெட்டுகளையும் டெலி பிரிண்டர்களையும் கைப்பற்றினோம். இதைப் பற்றி முன்பே தெரிந்திருந்தால் அந்த அலைவரிசைகளில் ஒட்டுக் கேட்டு பயங்கரவாதிகளின் நிர்வாக அமைப்பைப் பற்றியும் கண்டு பிடித்திருக்கலாம். எவ்வளவு பேர்கள் அதில் இருக்கிறார்கள், எங்கெங்கிருந்து செயல்படுகிறார்கள், யார் மூலம் எதற்காகச் செயல்படுகிறார்கள் அவர்களது தொலை நோக்கம் என்ன...இதையெல்லாம் கண்டு பிடித்திருக்கலாம்.

கேள்வி: இவையெல்லாம் மிக முக்கியமான, தெரிந்திருக்க வேண்டிய விஷயங்களல்லவா?

சுந்தர்ஜி: மிக முக்கியமானவைதாம். ஒப்புக் கொள்கிறேன். எங்களுக்கு அவை கிடைக்கவில்லை. ஆனால் எல்லோரும் நினைப்பது என்னவென்றால் உள்ளே எத்தனை பயங்கரவாதிகள் இருந்தார்கள், அவர்களிடம் எந்த அளவில் என்ன மாதிரி ஆயுதங்கள் இருந்தன, என்பதெல்லாம்கூட ராணுவத்துக்குத் தெரிந்திருக்கவில்லை என்று எண்ணுகிறார்கள். பயங்கரவாதிகளின் கோட்டையாக பொற்கோயில் விளங்கியது என்பதுகூட எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை என்று எண்ணுகிறார்கள். இந்தக் கருத்து தவறானது என்பதைத்தான் வலியுறுத்த விரும்புகிறேன். ராணுவப் பிரவேசம் மேற்கொள்ளும்போது என் மனநிலை எப்படி இருந்தது என்று கேட்டீர்களல்லவா...

(அடுத்த இதழில் முடியும்.)

மேலட்டையில்: சுந்தர்ஜி

வண்ணப்படம்: ரகுபீர்சிங்

புகைப்படங்கள்: தில்லி ராஜு


இந்திய மாதர்களின் மங்கலசின்னம்
ஐடெக்ஸ்
டீலக்ஸ் குங்குமம்
matt finish
ஐடெக்ஸ் 48 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்
EYETEX
EYETEX
அரவிந்த் லாபரடரீஸ் சென்னை 600033
Imageads-2225 Tam



அட்டகாசமான சிறப்பிதழ்

வட்டமேஜை

செருப்பு சிறிதானால் காலை வெட்டு!

• நகைப்பிற்கு இடமான ஒரு கருத்தைக் கூறிய முன்னுள் முதல்வர் பக்தவத்சலம் தமக்குத் தடுமாற்றம் இல்லை என்று வேறு கூறிக் கொள்கிறார்! ஒரு பிரச்னையைத் தீர்க்க நாம் கையாளும் முறை, நன்மைகளைவிட மிகுதியான தீமைகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கக் கூடாது என்பதையும், பிரச்னையின் மூலக் குறைபாட்டை ஆராய்ந்து அறிந்து அதை நீக்குவதே சரியான தீர்வாக இருக்க முடியும் என்பதையும் முதல்வர் பொறுப்பு வகித்த அவர் உணராதது வியப்பாக உள்ளது. "செருப்பு சிறியதாகிப் போய்விட்டால், காலைச் சிறிது வெட்டிவிட்டுச் சரியாக்கிக் கொள்ளலாம்" என்பதைப் போன்றதல்லவா அவருடைய யோசனை!

பட்டுக்கோட்டை, ந. தட்சணாமூர்த்தி.

அட்டகாசமான சிறப்பிதழ்!

• யாருமே திரும்பிப் பார்க்காத பாண்டிச்சேரியை நீங்கள் திரும்பிப் பார்த்து, அட்டகாசமான சிறப்பிதழையே வழங்கியதற்காகப் பிடியுங்கள் ஒரு சபாஷ்!

பெங்களூர்—10, கே.ஜி.எஃப். பழனிச்சாமி.

தகவல் இதழ்!

• புதுவைச் சிறப்பிதழ்-புதுமைச் சிறப்பிதழ் என்று சொல்ல முடியவில்லை. என்றாலும், முதல்வரின் பேட்டி, துணுக்குச் செய்திகளின் தொகுப்பு எல்லாமாகச் சேர்ந்து தகவல் இதழாய் இருந்தது குறித்து மகிழ்கிறேன்.

பெங்களூர், ப. மூர்த்தி.

பொங்கல் விருந்து!

• அடேயப்பா! தங்களை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. சின்னஞ்சிறு யூனியன் பிரதேசமான பாண்டியைப் பற்றி இவ்வளவு விரிவாக எடுத்துரைத்து எங்களுக்கு பொங்கல் திருநாளில் அறுசுவை விருந்தே படைத்துவிட்டீர்கள்.

பண்ருட்டி, ஏ. ஷேக் முஹம்மது.

நினைத்தாலே வருத்தம்தான்!

• கோடிக் கணக்கில் பணம் வழங்கப்படும்போது, அங்கே இங்கே தில்லு முல்லு பண்ணுவது சகஜம் தானே எனக் கூறும் புதுவை முதல்வரை நினைக்கும் போது வருத்தமாகவே உள்ளது! இதற்காகவா முதல்வராகத் தேர்ந்தெடுத்தோம்? இவரை நம்பிப் புதுவையை ஒப்படைத்திருக்கும் மக்களின் சார்பாக வருந்துகிறோம்.

புதுவை—1, இ.எம். கோதண்டம்.

குடைந்தெடுத்து விட்டீரே!

• பாண்டிச்சேரி முதலமைச்சர் ஃபாரூக்குடன் பேட்டி அபாரம். திருபர் குடைந்தெடுத்துவிட்டாரே!

காரைக்குடி, கலைப்ரியன்.

காரைக்கால் அம்மையாரை மறந்துவிட்டீரே!

• பாண்டிச்சேரி சிறப்பிதழில், புதுவை, காரைக்கால், மாஹே, ஏனாம் பகுதிகளை வலம் வந்த கல்கி, 'வரலாற்றுச் சிறப்பு மிக்க காரைக்காலம்மையார் கோவிலையும், அங்கு ஆண்டு தோறும் நடைபெறும் மாங்கனித் திருவிழாவையும் குறிப்பிடாதது ஏன்?

பாண்டிச்சேரி, ப. இராமமூர்த்தி.

அசத்தியது அட்டைப்படம்!

• அட்டைப்படம் வெகு அருமை. பொம்மைகள் போல் இருக்கும் பெண்களைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்போல் இருக்கு. படு சூப்பர்ப்! வாலந்தி தொடரோ அதைவிட அருமை!

தோழுந்தூர், சி. சுப்பு.

ஆரம்பமே சஸ்பென்ஸ்!

• முதல் அத்தியாயத்தின் கடைசி வரியில் ஒரு சஸ்பென்ஸை வைத்து, மனதில் 'திக்திக்' கை ஏற்படுத்தி விட்டார் ராஜேஷ் குமார்.

கோவை—9, கோ. க. சுரேஷ்.

மாமருந்து!

• அன்புக்கு இத்தனை அர்த்தங்களா! 'மனசை லேசா'க்குகிற மாமருந்தின் மறுபெயர்தான் 'அருள்வாக்கோ!'

சிதம்பரம், திருமதி எம். சித்தாமணி.

நெஞ்சில் ஏறிய பாரம்!

• திரும்பத் திரும்ப..... சிறுகதையைப் படித்துக் கொண்டே வந்தபோது, முடிவில் விசாலம் மாமியின் பாரத்தை ஒட்டு மொத்தமாக என் நெஞ்சில் ஏற்றி விட்டார் ஆசிரியர்.

குடியாத்தம், ஸ்ரீபட்டாபிஷேகப்ரியன்.

நிறைவு தந்த தராக!

• ரேவதிப்ரியனின் கேள்விக்குத் தராகவின் பதில் நான்கு பக்கச் சங்கீத விமர்சனம் படித்த மாதிரி இருந்தது. சங்கீத விமரிசகர்கள் கெட்டார்கள் போங்கள்!

துடுப்பதி, மு. மேத்தாப்ரியன்.



உங்கள்
குடும்பத்தின்
திட்டமிட்ட பரிபூரண உணவு
இப்போது
ஃபேமிலி பேக்கிலே

சாக்கலேட் சுவை காம்ப்ளான் இப்போது 1 கிலோ பேக்கிலே!

இரண்டு 500 கிராம் பேக்குக்குப் பதிலாக வாங்குங்கள் புதிய 1 கிலோ காம்ப்ளான் பேக், 4 ரூபாய் மிச்சமாக்கிடுங்கள்.

காம்ப்ளான் ஒன்றுதான் உங்கள் குடும்பத்தின் ஒவ்வொருவருக்கும் அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களைக் கொண்டுள்ளது— கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் மிகச் சிறந்த புரதமான பால்புரதம் (20%)

உங்கள் குடும்பத்தினருக்கு அன்றாடம் அளியுங்கள் இருவேளை காம்ப்ளான்.

ரூ. 4 மிச்சமாக்குங்கள்



காம்ப்ளான்® —திட்டமிட்ட பரிபூரண உணவு

உடல் நலத்தின்
உறைவிடம்
கிளாக்ஸோ

ULKA-GL-K-85 TAM

சரியாய் உட்கார முடியாத ரிக்ஷாக்கள். குறுக்கில் புகுந்து ஓடும் ஆட்டோக்கள். எத்தனை ஹாரனைப் பிரயோகித்தும் கவலைப் படாமல், நிதானமாய்ச் சாலையைக் கடக்கும் மக்கள். ஊரெங்கும் நந்தி சுமந்த வண்ணக் கொடிகள் — ஹைதராபாத்!

புத்தாண்டின் பத்தாம்நாள் இங்கே திரைப் பட விழா. போன தடவை தில்லியில் ஆரம்ப விழாவில் ஏகக் குழப்பம். ஹைதராபாத் மட்டும் என்ன வாழ்ந்து விடப் போகிறது என்று பார்த்தால்...

குறிப்பிட்ட மாலை 6.00க்கு மிகச் சரியாய்த் தொடங்கிவிட்டது.

தெலுங்கு லலித கலா தோரணம்—சினிமாப் பெயர் இல்லை, விழா நடந்த பரந்த புல்வெளி அரங்கம். மரங்கள்தோறும் மின்சாரப் பூக்கள். விருந்தாளிகள் நுழைய நுழைய வாண வேடிக்கைகள். விதவிதமான ராக்கெட்டுகள் விர் விர் என்று மேலேறிப் படார் படார் என்று வெடித்துச் சிதறி — ஆயுளுக்கும் மறக்க முடியாத வண்ணப் பூக்களாய்ச்





சொரிந்தன.

இதயபூர்வமான வரவேற்பு என்று ஒரு பக்கம் பட்டாசு சுழன்று சுழன்று எரிந்தது. ஆகாயமெங்கும் ஒளிதான். ஆகாயமெங்கும் புகைதான். (பட்டாசுத்தினுசுகளுக்குமட்டும் லட்சக்கணக்கில் செலவாம்!)

கிட்டத்தட்ட நாலாயிரத்து ஐநூறு தலைகள் கலந்து கொண்ட இந்த விழாவின் அருமையான ஏற்பாடுகளுக்குப் பொறுப்பு யார் தெரியுமா? அன்றைய சினிமா நாயகர் — இன்றைய ஆந்திர முதல்வர் என். டி. ராமராவ். மனிதருக்குத் திருஷ்டிச் சுற்றிப் போட வேண்டும். விழா முடியும் வரை இந்த வயதிலும் கடைசி வரை உட்காராமல் நின்று கொண்டே இருந்தார். ('நான் தாம்ப்பா ஹோஸ்ட். நான் உக்காரக் கூடாது').

வரவேற்பு நடனம். ராதா, ரம்யா கிருஷ்ணன், அகல்யா, பானுப்பிரியா, மங்களகௌரி என்று நட்சத்திரப் பட்டாளம். ஐந்து பேரும் ஐந்து நதிகளாம். அவர்களின் 'தையத் தக்கா' முடிந்ததும் ஒரு காச்மூச், காச்மூச் லம்பாடி நடனம். அது முடிந்ததும் சிவ தாண்டவம் என்று கிட்டத்தட்டப் பதினைந்து சிவபெருமான்களின் தொம் தொம்.

இத்தனை ஆரவாரங்களுக்கும் அப்புறம் தான் சம்பிரதாயமான குத்து விளக்கேற்றும் நிகழ்ச்சி.

விளக்கேற்றும் படலத்திற்கு முன் என். டி. ஆர். பேசினார். முதலில் தெலுங்கு, அப்புறம் ஹிந்தி. கடைசியில் ஆங்கிலம். "நான் சினிமாவைப்பற்றிப் பேசும்போது உணர்ச்சி வசப்பட்டால் மன்னியுங்கள் (நிறையவே உணர்ச்சி வசப்பட்டார்). ஏனென்றால், சினிமாதான் என்னை இந்த அளவு முன்னேற்றியுள்ளது. சினிமா மட்டுமே ஒரு சமூகத்தை அமைதியான முறையில் முன்னேற்ற முடியும் என்பதில் மிகுந்த நம்பிக்கையுடையவன் நான்...

மேடையேறி மைக் பிடித்த அத்தனை பிரபலங்களும் நாம் பிறந்தது முதல் கேட்டு வரும் அதே "சினிமா ஒரு சக்தி வாய்ந்த மீடியம். நாட்டை முன்னேற்ற அதைப் பயன் படுத்த..." இத்யாதியை வார்த்தைகளை மாற்றி மாற்றிப் பேசினார்கள்.

நம்மூர் ஸ்லிம் லக்ஷ்மிதான் நிகழ்ச்சித் தொகுப்பாளர். "என் இனிய தாத்தா அசோக் குமார் குத்துவிளக்கேற்றுவார். ஆந்திராவின் அழகுப் பொம்மை ஸ்ரீதேவி அவருக்கு உதவுவார்." (என்ன கிண்டல்!) அதன்படியே 'இனிய தாத்தா' குத்து விளக்கேற்ற, 'ஆந்திர அழகு' கூடமாட உதவினார்.

அசோக்குமார் தாம் சினிமா உலகில் நுழைந்து பொன்விழா ஆண்டுகள் நிறைவு பெற்றதை அறிவித்த முதல் மேடை இந்த லலித கலா தோரண மேடைதான்.

அப்புறம் விழாவின் துவக்கப் படம் திரையிடப்பட்டது: **Ninety Days** எனும் அந்தக்

கனடா நாட்டுத் தயாரிப்பைப் பற்றிச் சொல்லு முன் விழாவைப் பற்றி இன்னும் சில துக்கடாக்கள். (மறந்து போய்விடக் கூடாது பாருங்கள்!)

ராமராவ் காரு. காவி ஜிப்பா, காவி வேஷ்டி. ஒவ்வொருவர் வாழ்த்தும் போதும் பெரிய்ய புன்னகை, கைகூப்பல், தலை சாய்த்தல். (எத்தனை திறமையான நடிகர்!). மாலை யணிவிக்க வந்தபோது, 'விருந்து கொடுப்பவனே நான்தான். எனக்கு மாலையா, நோ நோ' என்று மாலை சுமந்து வந்த பெண்ணின் தலையை ஆதுரத்துடன் தடவிக் கொடுத்து, அந்த மாலையை அறிவிப்பாளர் லக்ஷ்மிக்கே அணிவித்த போது — டப் டப் டப் என்று ஒரே அப்ளாஸ்தான்.

வெறும் கல்லும் மண்ணுமாய் இருந்த பப்ளிக் கார்டன்ஸைச் சீர்ப்படுத்தி லலித கலா தோரணமாய் மாற்றியது தொண்ணூறே நாட்களில். சுமார் அறுபதடி உயரச் சுவர்கள், சுவர்களின் மேல் அலங்காரங்கள். 140 எம். எம். திரை. அழகான புல்வெளி. புரொஜெக்டர் அறைக்காகச் சொகுசாய் எழுந்த கட்டிடம். விருந்தாளிகளுக்குத் தேவையான டாய்லெட் வசதி.

"இந்தக் கட்டிடம் கட்டி முடிக்கத் தொண்ணூறு நாட்கள். துவக்கப் படத்தின் பெயரும் தொண்ணூறு நாட்கள்! என்ன ஒற்றுமை பாருங்கள்!" — சொன்னவர் லக்ஷ்மி.

ஒன்பதரை மணிக்குத் திரைப்படம் முடிந்து, முதல்வர் சார்பில் புல்வெளியில் விருந்து. ஓர் உயரமான இடத்தில் நிஜாம் காலத்து ஹிந்துஸ்தானிச் சங்கீதத்தை ஒரு ஆறு பேர் (அவர்கள் தலைப்பாகைதான் எத்தனை வேடிக்கையாய் இருந்தது!) வாசித்து உற்சாகமாய் வரவேற்றார்கள். ராமராவ் தாமே முன்நின்று வடக்கிலிருந்து வந்த பிரபலங்களை, அயல்நாட்டு முக்கியஸ்தர்களைக் கை பிணைத்து அழைத்து வந்தார். மெனு கார்டைப் பார்க்கிறீர்களா? இஞ்சி மீன், கோலா மீன், பிரியாணி, கோழிக் குருமா, இறால் ஃப்ரை, தயிர் வடை, சாம்பார், அப்பளம், தயிர், ஐஸ்க்ரீம், கேக், வெஜிடபிள் உருளைகள்......

"யோவ் சாப்பாட்டு ராமன்களா, சினிமா பத்தி சொல்லுங்கப்பா!" இதோ ஆச்சு, ஆச்சு. சிண்டு முடியும் ஒரே ஒரு கடைசிச் செய்தி:

கர்நாடக, முடிசூடா மன்னர் (ராமராவே சொன்னது) ராஜ்குமார், பம்பாயிலிருந்து ராஜ்கபூர் (வழக்கம் போல் குடும்ப சகிதம்), திலீப்குமார், சாயிராபானு, ரிஷிகேஷ் முகர்ஜி, என். வி. ஸிப்பி, கேரளாவிலிருந்து பிரேம்நஸீர் என்று ஏராள பிரபலங்கள் வருகை தந்த விழாவிற்குத் தமிழ் நாட்டிலிருந்து ஒரு தலை கூடக் காணோம் (கமல் வந்திருக்கிறார் என்றார்கள். ஆனால் எங்கே?). அழைப்பில்லையா, வேறு தகராறு?

ஏ. நாகேஸ்வர ராவ், ஜமுனா, க்ருஷ்ணா என்று தெலுங்கு முகங்கள் கலந்து கொள்ளாததற்குக் காரணம் ஆந்திர முதல்வருடன் இருக்கும் மனஸ்தாபமாம். எப்படி இருக்கிறது?

இனி துவக்கப்படம் பற்றி நாலு வரிகள்:

தொடக்க விழா: ஜோர்; முதல் படம்: போர்!

90 நாட்கள் (கனடா)

மனைவியால் புறக்கணிக்கப்பட்ட அலெக்ஸ், தன் வாழ்க்கையில் இன்னொரு பெண்ணைச் சந்திக்கிறார். காதலை வெளிப்படுத்தச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்குகிறார். ஆனால் நிறையத் தயங்குகிறார். அலெக்ஸின் நண்பர் இடையில்புகுந்து இவர்கள் உறவைக் கிளறி...

அடடா, நாலு வரி ஆகிவிட்டது. ஆனால் பாருங்கள், இந்தத் 'தொண்ணூறு நாட்கள்,' ஒரு தொண்ணூற்று ஒன்பது நிமிட ராவல். ராவல் என்றால் ராவல், அப்படியொரு ராவல். (எல்லாம் ஜெயமன்மதன் ராசி — எந்த ஊருக்குப் போனாலும் துரத்தும் ஊழ்வினை!)

'ஃபெஸ்டிவலாவது, ஃபீஸ்டிவலாவது, எல்லாவற்றையும் தூக்கிப் போட்டுவிட்டு ஒரே ஓட்டமாய் ஊர் பார்க்கப் போய்ச்சேரலாம்' என்ற எண்ணத்தை முதல் நாளிலேயே கிளப்பிவிட்ட இந்த மகத்தான படம் பற்றி மேலே எதுவும் சொல்ல இஷ்டமில்லை!

பிரியுமுன் ஒரு மினி அறிவிப்பு!

திரையிடப்படும் சில படங்களின் கதைகளை அடுத்தவாரத்திலிருந்துவாரமொன்றாய் கல்கியில் எதிர்பாருங்கள். கதையை, சம்பவத்தை, ஏதாவதொரு தமிழ்ப்படத்தில் சீக்கிரமே சந்திக்கத்தான் போகிறோம். படிக்காவிட்டால் என்ன? என்று எண்ணாதீர்கள். இதைப் படித்தால்தானே அதை அடையாளம் கண்டுகொள்ள முடியும்! இப்போதைக்கு டாட்டா... சீரியோ. அடுத்த வாரம் சந்திப்போம்.

—ஜெயமன்மதன்



கல்கி

1986 ஜனவரி 26
மலர் 44 இதழ் 26
குரோதன தை 13



தமிழகத்தில் தொழில் புரட்சி!

சென்ற வாரம் தலையங்கத்தில், 'தமிழக அரசின் எத்தனை நிறுவனங்கள் எத்தனை கோடி நஷ்டமடைந்து வருகின்றன என்று பார்த்தால் திகைப்பாய் இருக்கும்' என்று குறிப்பிட்டிருந்தோம். அந்தத் தலையங்கம் எழுதப்பட்ட ஜனவரி 10ம் தேதியன்றே இந்திய அரசுத் தணிக்கை அதிகாரியின் அறிக்கை (1983—84) தமிழக சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.


இந்த அறிக்கை 1983—84ல் தமிழக அரசின் 12 நிறுவனங்கள் மொத்தத்தில் 13 கோடி ரூபாய் நஷ்டமடைந்திருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது!

'அடேயப்பா எப்பேற்பட்ட சாதனை!' என்று நாம் மலைக்கும்போதே அந்த அறிக்கை, தமிழக அரசின் 22 நிறுவனங்கள் தங்கள் 83—84ம் ஆண்டுக் கணக்குகளையே பூர்த்தி செய்யவில்லை என்று சுட்டிக்காட்டுகிறது! இவற்றில் சில 80—81, 81—82, 82—83ப் ஆண்டு கணக்குகளையும் பூர்த்தி செய்யாமல் இமாலய சாதனை புரிந்துள்ளன!


இதைக் கண்டு நாம் நெஞ்சு நிமிரப் பூரிப்படைகையில், அதே தணிக்கை அறிக்கையானது இதுவரை தமிழக அரசின் 21 நிறுவனங்கள் போட்ட மூலதனத்தைவிடவும் அதிகமாக நஷ்டமடைந்திருக்கின்றன என்று சுட்டிக்காட்டி நம்மைப் பெருமிதத்தில் திக்குமுக்காட வைத்து விடுகிறது! தமிழக அரசின் ஆற்றலுக்கும் செய் நேர்த்திக்கும் சுறுசுறுப்புக்கும் இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்!

இதன் பிறகும் தமிழக அரசின் சாதனைத் திறனில் நம்பிக்கையற்றவர்கள் இந்தத் தணிக்கை அறிக்கையை முழுமையாகப் படிக்க முடிந்தால் எந்தெந்த நிறுவனங்கள் எப்படி எப்படியெல்லாம் மூடத்தனமாக நடந்து கொள்வதில் முன் நிற்கின்றன என்று புரிந்து கொள்ளலாம். உதாரணத்திற்கு எல்காட் என்ற நிறுவனத்தை மட்டும் எடுத்துக் கொள்வோம். 1977ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் 1978ல் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 1·15 லட்சம் தந்து ஐந்து அம்சங்களைக் குறிப்பிட்டு, அவற்றைச் செய்வது காரிய சாத்தியமா? என்று விளக்குமாறு கேட்டது. அந்த நிறுவனம், 'தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், தனியார் துறையும் இணைந்து (கூட்டுத் துறையில்) சில அம்சங்களை வெற்றிகரமாகச் செய்யலாம்' என்று யோசனை தெரிவித்தது. ஆனால் தமிழக அரசோ 1980 பிப்ரவரியில் எல்காட்டே இந்தக் காரியங்களைச் செய்யட்டும்' என்று கூறி 25 லட்சம் மூலதனமும் ஒதுக்கிற்று! மே மாதத்தில் எல்காட், 'இந்த அம்சங்களைத் தயாரித்து வெற்றி காண்பது சாத்தியமில்லை' என்று முடிவெடுத்து ஆலோசனை கூறிய தனியார் நிறுவனத்துக்குத் தரப்பட்ட 1.15 லட்சத்தைத் தண்டக் கணக்கில் எழுதியது!

இதன்பிறகு டீ.வி. தயாரிக்கலாம் என்று முடிவெடுத்தது எல்காட். இந்திய (மத்திய) அரசின் ஈ.ஸி. டீ.வி.யுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள முன்வந்தது. அப்போது ஈ.ஸி. டீ.வி.க்காரர்கள், 'லைசென்ஸ் இருக்கிறதா?' என்று கேட்கவும், 'ஓகோ அப்படி ஒன்று இருக்கிறதா?' என்று அப்போதுதான் ஞானோதயம் பெற்று, தில்லிக்குக் காவடி தூக்கியது எல்காட்.·ஆண்டுக்கு 10,000 டீ.வி. தயாரிக்க மத்திய அரசிடம் அனுமதி பெற்றது.







இதிலேயே இரண்டு ஆண்டுகள் ஓடிப் போய்விட்டன! இதன் பிறகு, டீ.வி. தயாரிக்கும் யோசனையைக் கிடப்பில் போட்டது எல்காட்!

அடுத்து, 'எலெக்ட்ரானிக் கடிகாரங்கள்தான் தயாரிக்க வேண்டும்; அதற்குத்தான் மார்க்கெட்டில் ஏக டிமாண்ட் இருக்கிறது. தமிழகத்தில் மட்டும் ஆண்டொன்றுக்கு 24000 கடிகாரங்கள் விற்கலாம்' என்று திட்டம் போட்டது எல்காட். ஆண்டு ஒன்றுக்கு இரண்டு லட்சம் கடிகாரங்கள் தயாரிக்க மத்திய அரசிடம் அனுமதி பெற்றது. ஆனால் தயாரித்தது எவ்வளவு தெரியுமா? 82—83ல் 1006! 83—84ல் 6915! இவற்றில் விற்றவை முறையே 603! 2750! இத்தனைக்கும் உதிரி பாகங்களை வரவழைத்து இங்கே இணை சேர்த்துக் கடிகாரங்களாக உருவாக்கும் பணிதான் இது!

எல்காட்டின் சாதனைப் பட்டியல் இத்துடன் முடிந்துவிடவில்லை! இன்னும் பெரிய முயற்சிகளை மேற்கொள்ளத் தீர்மானித்தது. டெலிவிஷன், ரேடியோ, டேப் ரிகார்டர் முதலியவற்றில் பயனாகும் எலக்ட்ரோலைடிக் கபாஸிட்டர்களைத் தயாரிக்கத் தொடங்கியது. இதற்காக ஜம்மென்று மானேஜிங் டைரக்டர் ஜப்பானில் சுற்றுப் பயணம் செய்து திரும்பினார். மத்திய, மாநில அரசுகள் லட்சங்களை மூலதனமாகவும் கடனாகவும் கொட்டிக் கொடுத்தன. ஏகப்பட்ட தாமதத்தால் விலைவாசிகள் உயர்ந்தன. ஆயினும் என்ன, உற்பத்தி தொடங்கிவிட்டது! 50 மில்லியன் கபாஸிட்டர்களைத் தயாரிக்க வசதி உள்ள தொழிலகத்தில் 83—84க்கு இலக்கு 3 மில்லியன் மட்டுமே. தயாரானது 2.75 மில்லியன். விற்பனையானது 0.33 மில்லியன்! இது என்ன கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக இருக்கிறதே என்கிறீர்களா? அவ்வாறில்லையெனில் 82—83ல் 43 லட்சமும் 83—84ல் 69 லட்சமும் எப்படி நஷ்டம் அடைந்து சாதனை புரிவதாம்!

உண்மையிலேயே புரட்சிகரமான சாதனைகள்தான்! நஷ்டமாவதெல்லாம் நாம் கொடுத்து அழும் வரிப் பணம் என்று எண்ணும்போதுதான் கொஞ்சம் வேதனையாக இருக்கிறது. என்றாலும் புரட்சித் தலைவர் ஆட்சியில் நடந்தே தீர வேண்டிய புரட்சிகளை உத்தேசித்து அந்த வேதனைகளைப் பொறுத்துக் கொள்வோமாக!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.

தமிழகத்தில்


* ஒரு குறை!


* மத்தியமாவதி.


* ஜனரஞ்சனி.


* தடுமாற்றமில்லை.


* ''எக்ஸ்பர்ட்''


* படா தமாஷ்.

* மு. மேத்தாப் பிரியன், துடுப்பதி.

? சுப்புடுவின் இசை விமர்சனம், சாண்டில்யன் இசை விமர்சனம் ஒப்பிடுக.

! அது ஜனரஞ்சனி; இது மத்தியமாவதி.

* மரகதம் மணாளன், ஈரோடு. *

? மக்கள் தொகையில் இந்தியாவுக்கு இரண்டாவது பரிசு, வேலையில்லாத் திண்டாட்டத்தில் மூன்றும் பரிசு உலகளாவிய அளவில் நம் நாட்டுக்கு முதல் பரிசு என்று எதைக் குறிப்பிடலாம்?

! ஆன்மீகம்.

* ரஜினி சுகுமார், சென்னை—11.

? ''செக்ஸ் உணர்ச்சி இல்லாதவன் மனிதனா?'' என்று கேட்கும் ரஜினீஷ் பற்றி உமது கண்ணோட்டம் என்ன?

! செக்ஸ் உணர்ச்சி உள்ளவன்தான் மனிதன் என்று கண்டுபிடித்துக் கூற ரஜினீஷ் தேவையில்லை. அது அனைவரும் அறிந்த விஷயம். செக்ஸ் உணர்ச்சியைக் கட்டுக்குள் வைப்பவன் நாகரிக மனிதன் அதைக் கட்டு மீற அனுமதிப்பவனும் அனுமதிக்கத் தூண்டுபவனும் அநாகரிக மனிதர்கள்.

* எஸ். ஏ. கோவிந்தகுமார், நீடாமங்கலம்.

? தமிழ்ப் பின்னணிப் பாடகர்களில் தங்களைக் கவர்ந்தவர்?

! பின்னணிப் பாட்டே கதி என்றில்லாது ஆர்வத்தோடு மேடை ஏறி கர்நாடக இசைக் கச்சேரிகளும் செய்கிற முன்னணிப் பாடகர் ஜேசுதாஸ். குரல் வளம், கற்பனை வளம், ஞான வளம் மூன்றும் பொருந்தியவர். இறையுணர்வு மிக்கவர். பாவபூர்வமாகப் பாடக் கூடியவர். ஒரு குறை அடிக்கடி அரங்கிசை அளிக்காததுதான்.

* எம். கல்யாணசுந்தரம், திருநரையூர்.

? கொசுக்களை ஒழிக்க அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையே?

! யார் சொன்னது? கொசுக்களை ஒழிப்பதாகக் கூறிக் கொண்டு எத்தனை கோடிகள் சுதந்திர இந்தியாவில் செலவாகியிருக்கிறது என்று கணக்குப் பார்த்தால் வயிறு எரியும். ஆனாலும் கொசுக்கள் ஒழிந்த பாடில்லை. அதுவும் ஒரு திட்டமிட்ட நடவடிக்கைதான். கொசுக்கள் அப்படி ஒழிந்து விட்டால் கொசு ஒழிப்புக்காக மீண்டும் எப்படிப் பணம் ஒதுக்குவது? அதைச் சில பலர் எப்படிக் கபளீகரம் பண்ணுவது? எனவே கொசுக்கள் ஒழியவும் ஒழியாது; அரசு அதை ஒழிக்க எடுக்கும் நடவடிக்கைகளும் ஓயாது!

* எஸ். லதா, வாரங்கல்.

? குறுகிய காலத்தில் பிரதமர் சாதித்த ஒரு நிகழ்ச்சியைக் கூற முடியுமா?

ஆட்சிமாற வாய்ப்புண்டா?

! ஒன்றென்ன பல கூறலாம் என்றாலும் லேட்டஸ்ட்டாகக் கிராஸ் எக்ஸாமினேஷன் எக்ஸ்பர்ட்டான சோவுக்குக் கூடத் தடுமாற்றம் இல்லாமல் பதில்கள் கூறிப் பேட்டி அளித்துள்ளாரே அதை விடவா!

* ஆர். நாகராஜன், செம்பனார்கோயில்.

? தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படும் வாய்ப்பு உண்டா?

! ஆட்சி மாற்றம் இருவிதங்களில் ஏற்படலாம். ஒன்று எம். எல். ஏக்களின் கட்சித் தாவல். இரண்டு, மக்கள் எதிர்க்கட்சிக்கு வோட்டளிப்பது. முன்னது கூடாதென்று சட்டம் வந்துவிட்டது. பின்னது இப்போதைக்குத் தமிழகத்தில் நடக்கக் கூடிய காரியமல்ல. பெரிய அளவில் தவறுகள் ஏதாவது நடந்தால் அமைச்சரவை ராஜினமா செய்யலாம் அல்லது டிஸ்மிஸ் செய்யப்படலாம். ஆனல் பெரிய குற்றம், தவறுகள், முதற்படியாக அரசு சுறுசுறுப்பாக இயங்கினல் தானே நேரக்கூடும்? எனவே அதற்கும் இங்கு வாய்ப்பு ரிகக் குறைவுதான்!

* சி. சுப்பு, தேரழுந்தூர்.

? பத்திரிகைத் துறை லாபகரமான தொழிலா?

! எந்தத் தொழிலும் லாபமா நஷ்டமா என்பது அது நடத்தப்படுகிற விதத்தைப் பொறுத்துள்ளது. பத்திரிகைத் தொழிலும் அதற்கு விதி விலக்கல்ல.

* ஆர். அரிகோபி, குடியாத்தம்.

? தமிழ்நாட்டில் இனித் தெருவிளக்குகள் சரிவர எரிகின்றனவா என்பதைக் கண்காணிக்க அதிகாரிகள் சோதனைகள் நடத்தப் போகிறார்களாமே?

! சாராய 'சாம்ராஜ்யத்தில் விட்டில்தான் விளக்கெரியவில்லை; வீதியிலாவது சரியாக எரிந்தால் சரி.

* கே. வி. நாதன், நெய்வேலி.

? முன்பு நீங்கள் இந்திரா அரசைக் குறை கூறியதற்கும் இப்போது ராஜீவ் அரசை ஆதரிப்பதற்கும் அடிப்படைக் காரணம் என்ன?

! இந்திரா நடந்து கொண்ட விதத்துக்கும் ராஜீவ் நடந்து கொள்ளும் முறைக்கும் உள்ள வித்தியாசம்தான்.

* வண்ணை கணேசன், சென்னை—11.

? சமீபத்தில் தங்களை அதிசயிக்க வைத்த ஆச்சரியப்பட வைத்த நிகழ்ச்சி எது?

! புது தில்லியில் (ஈவ் டீஸிங்) பெண்களைச் சீண்டிய 75 பேர்களைப் புத்தாண்டு தினத்தில் பிடித்து அவர்கள் முகத்தில் தார் பூசிக் கழுதை மேல் ஏற்றி ஊர்வலம் விட்டது போலீஸ். பெண்களைச் சீண்டுவது தவறு தான் என்றாலும் போலீஸார் குற்றவாளிகள் என்று தங்களால் கருதப்படுகிறவர்களுக்குத் தாங்களே தண்டனை விதிப்பது அதைவிடப் பெரிய தவறு. அதுவும் இதுபோன்ற அநாகரிகமான தண்டனைகளை அளிக்க யார் அவர்களுக்கு அதிகாரம் வழங்கினர்கள். தலைநகரிலேயே போலீஸார் இவ்வளவு அசட்டுத்தனமாக நடந்து கொள்வது அதிசயம்தான்.

ஆச்சரியப்பட வைத்த நிகழ்ச்சியையும் கூறிவிடவா? போபாலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு பெறுவதற்காக இந்திய அரசு அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு நடத்துகிறது. 'இந்தவழக்கு இந்தியாவிலேயே தான் நடக்க வேண்டும். அமெரிக்காவில் அல்ல' என்று வாதாடுகிறது யூனியன் கார்பைட். இதற்குப் பதில் கூறுமுகமாக, இந்திய அரசின் சட்ட நிபுணர்கள், 'இந்தியாவில் வழக்கு நடந்தால் இழுக்கடித்துக் கொண்டே போகும்' என்று சொல்லி அதற்கு ஆதாரமாக உச்ச நீதிமன்றத்திலேயே 84,000 சிவில், கிரிமினல் வழக்குகள் பாக்கியுள்ளதை எடுத்துக் காட்டியுள்ளனர். உடனே யூனியன் கார்பைட் வழக்கறிஞர்கள், இப்படி மனித உரிமைகளில் அக்கறையின்றி வழக்குகள் குவிய அனுமதிக்கிற இந்திய அரசுக்குப் போபால் விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மீது மட்டும் என்ன திடீர்க் கரிசனம்? இதை மெய்யான அனுதாபமாக ஏற்றுக் கொள்ள முடியாது' என்று எதிர்வழக்காடுகின்றனர். இப்படி அயல்நாட்டு நீதிமன்றத்தில் நம் மானம் கப்பலேறும் அளவுக்கு அசட்டுத்தனமாக நமது சட்ட அமைச்சரவை செயல்படுவது ஆச்சரியம்தான்.

* ஜெ. முகமது பாரூக், நெல்லிக்குப்பம்.

? மதுரை ஆதீனத்தின் செயல்கள் குறித்து?

! அவர் தமிழகத்தின் ராஜ்நாராயண் படா தமாஷ்!

* ரூ. 10 பரிசு பெறுபவர்:
மரகதம் மணாளன்,
47, ஜெகநாதபுரம் காலனி,
சூரம்பட்டி,
ஈரோடு — 638 009.

நீங்கள் கேட்டவை — தராசு.

N.S.K.
பைனான்சியர்ஸ்

மற்றுமொரு பண்டிகைகால வெகுமதி பெறுங்கள்!

அன்பளிப்பு
குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும்

தங்க நாணயம் அரைசவரன்
ரூ15,000 | 5 வருடங்கள்

hmt கடிகாரம்
ரூ5,000 | மூன்று வருடங்கள்

வருடாந்திர வட்டி விகிதங்களின் மேல் 3% கூடுதல் வட்டியுடன்

Pays 24%

வழக்கம்போல் உள்ள வட்டி விகிதங்களுக்கு மேல் கூடுதல் வட்டி **3%**

பிக்ஸட் டெபாசிட்டுகள்

1 Year	2 Years	3 Years	5 Years
17%	18%	19%	21%

ஒவ்வொரு ரூ. 5000/- (குறைந்தது 2 வருடங்கள்) டெபாசிட்டுக்கும்
அன்பளிப்பு — வெள்ளிப் பொருட்கள்
உங்களுடைய முதலீடு 48 மாதங்களில் எங்களது கோல்டன் கேஷ் சர்டிபிகேட் திட்டத்தின் மூலம் இரு மடங்காகிறது.

வங்கி கேஷ் சர்டிபிகேட்கள்

5 Years	6 Years	7 Years	10 Years
18%	19%	20%	24%

N.S.K. பைனான்சியர்ஸ்
எண். 38B, பர்கிட் ரோடு (முதல் மாடியில்)
(தி.நகர் பேருந்து நிலையம் எதிர்புறம்) தி.நகர்,
சென்னை-600 017. போன்: 447135

எதிர்கால சேமிப்பிற்கு என்.எஸ்.கே.

நீதிபதியின் பெருமதிப்புக்குரிய குற்றவாளி!

7

முஸ்லீம்களிடம் பிரிட்டிஷ் அரசுக்கு உள்ள அதே அளவு அக்கறை காங்கிரஸுக்கும் உண்டு என்று நிரூபிக்க ஸி. ஆர். ஒரு முக்கியமான அறிவிப்பை லண்டன் பத்திரிகையான ஹெரால்ட் மூலமாக பிரிட்டிஷ் அரசுக்கும் முஸ்லீம் லீகுக்கும் விடுத்தார்:

''ஒரு தற்காலிக தேசிய அரசு அமைக்க பிரிட்டிஷ் அரசு ஒப்புக் கொண்டால், அதன் பிரதமரை நியமிக்குமாறு முஸ்லீம் லீகை 'ய அழைப்போம். அவர் தாம் சிறந்ததெனக் கருதும் அரசை அமைக்கட்டும். இதற்கு என் சகாக்களை வற்புறுத்தி சம்மதிக்கச் செய்யும் பொறுப்பை நான் ஏற்கிறேன்.''

அப்போதைய பிரபல முஸ்லீம்களுள் ஒருவரான மஹ்முதாபாத் ராஜா இதில் ஏதோ சூது இருப்பதாக எண்ணினார். ஸி.ஆர். சிபாரிசு செய்கிற லீக் அமைச்சரவை மத்திய சட்டசபையின் ஹிந்து பெரும்பான்மையினரை அல்லவா நம்பியிருக்க வேண்டும்?' என்று எண்ணினார். ராஜா போன்றவர்களுக்குப் பாகிஸ்தான் மட்டுமே சிறந்த முடிவாகத் தோன்றியது. தம்முடைய யோசனையைத் தற்காலிகமாகக் கடைப்பிடிக்கலாமென்றும் பாகிஸ்தான் சரியா தவறா என்பது பற்றி பிறகு ஆராய்ந்து கொள்ளலாம் என்றும் கூறினார் ஸி. ஆர். வங்காளத்தைச் சேர்ந்த ஸ்டார் ஆஃப் இந்தியா என்ற முஸ்லீம் நாளிதழ் ஸி.ஆரின் யோசனைகள் பிரமாதமானவை என்று கருதியது. லீகின் ஒரு பெரும் பகுதியினர் அதை வரவேற்பதாகவும் தெரிவித்தது. ஆனால் பிரிட்டிஷ் அரசு ஸி. ஆரின் இந்த யோசனையையும் நிராகரித்து விட்டது. ''இந்தியப் பிரச்னைக்கு எந்தவிதமான புதிய அணுகு முறையையும் யோசித்துக் கூடப் பார்க்க முடியாது'' என்று அமெரி பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் கூறிவிட்டார். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நீடித்திருப்பதற்காகவே முஸ்லீம் விவகாரத்தைப் பிரிட்டன் பெரிதுபடுத்துகிறது என்பதும், முஸ்லீம் பிரச்னை தீர்வு காண முடியாததல்ல என்பதும் ஸி. ஆருக்கு ஊர்ஜிதமாயிற்று.

* * * * *

பூனா முயற்சி தோல்வியடைந்ததும் காங்கிரஸ் மீண்டும் சத்தியாகிரகம் என்ற மாற்று வழிக்குத் திரும்பியது. 1940 ஆம் ஆண்டின் விநோத சூழலில் அதை எவ்விதம் கையாள்வது என்று வழிகாட்டுமாறு காந்தியைக் கோரியது.

''பிரிட்டனின் யுத்த முயற்சிக்குப் பொருளுதவியோ சரீர உதவியோ அளிப்பது தவறு'' என்ற சட்ட விரோதமான கோஷத்தை ஸி.ஆர்., படேல், நேரு, ஆஜாத் உள்ளிட்ட சில தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் மட்டும் உச்சரிக்க வேண்டும் என்று காந்தி முடிவு எடுத்தார். இதன் பிறகு, வைஸ்ராயுடன் நடந்த இரண்டு நீளமான சந்திப்புக்களின் போது அமைதியான முறையில் காங்கிரஸ் உறுப்பினர்கள் யுத்தம் பற்றிய தங்கள் கருத்தை வெளியிடுவதற்கு உரிமை கோரினார், மகாத்மா. லின்லித்கோ இதற்குச் சம்மதிக்கவில்லை. 'அப்படியானால் அனுமதியின்றியே காங்கிரஸ்காரர்கள் பேசுவார்கள்' என்றார் காந்தி.

நாற்பது வயதைக் கடந்திருந்த விநோபா பாவே என்ற மெலிந்த மனிதர் — அதுவரை பெரும்பான்மை இந்தியர்களுக்குப் பரிச்சயம் ஆகாதவர் — முதல் சத்தியாகிரஹியாக மகாத்மாவால் தேர்ந்தெடுக்கப்பட்டார். மகாத்மாவின் மறைவுக்குப் பிறகு பூதான இயக்கத்தின் ஸ்தாபகராகப் புகழ் பெறவிருந்தார் விநோபா. மகாத்மா இயற்றிய எளிமையான கோஷத்தை அவர் மீண்டும் மீண்டும்



* மகாத்மாவால் தேர்ந்தெடுக்கப் பட்ட முதல் சத்தியாக்கிரஹி.

உச்சாககை ராஜத்துரோகக் குற்றத்துக்காகக் கைதுசெய்யப்பட்டார். இரண்டாவதுஎதிர்ப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜவஹர்லால் அதை உச்சரிக்கும் முன்னரே கைதாகிவிட்டார். அவர் ஏற்கெனவே பொதுக் கூட்டங்களில் ஆற்றிய சில உரைகள் சட்டத்துக்குப் புறம்பானவையென தீர்மானிக்கப்பட்டிருந்தன. அவருக்கு நான்கு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. தொடர்ந்து படேல் கைதானார். ஸி. ஆரின் முறை வருவதற்கு முன்பே அவர் கூறினார்: "தற்போதைய வாதப் பிரதிவாதங்கள் ஓய்ந்த பிறகு நிதானமாக யோசிக்கும்போது, 'நடந்ததையெல்லாம் மறக்கத் தயாராயிருந்து, தங்கள் பிறப்புரிமையை மட்டுமே கோரிய மக்களிடம் பிரிட்டன் ஏன் இவ்வாறு நடந்துகொண்டது?'என்று உலகமே வியக்கும்!"

நவம்பர் முப்பதாம் தேதி சென்னை சட்டசபையின் எதிர்க் கட்சித் தலைவர் குமாரராஜா முத்தைய செட்டியார், முஸ்லீம் லீக் குழுத் தலைவர் அப்துல் ஹமீத் கான் ஆகியோர் உட்பட அரை டஜன் நபர்களுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார் ஸி. ஆர்.:

"இந்தியசட்டசபைகளைக்கலந்தாலோசிக்காமலே பிரிட்டிஷ் அரசு இந்தியாவை யுத்தத்தில் பங்கேற்குமாறு ஆணையிட்டுள்ளது. ஆனால் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் உள்ள இதர தேசங்களுக்கு அணி சேராது நடுநிலை வகிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. முழுமையான விவாதத்துக்குப் பிறகு சட்டசபை யுத்தத்துக்குப் பட்ஜெட்டில் பணம் ஒதுக்க மறுத்துள்ளது. சட்டசபை யுத்த முயற்சிக்கான எந்த வரிகளை அனுமதிக்கவில்லையோ, அதே வரிகள் வைஸ்ராயின் ஆணை மூலம்வசூலிக்கப்படுகிறது. தவிரவும், அப்பாவி மக்களிடம் 'நன்கொடை' என்ற பெயரில் கட்டாய நிதி வசூல் செய்ய அதிகாரிகள் ஏவிவிடப்பட்டுள்ளனர். எனவே, பிரிட்டிஷ் யுத்தத்துக்குப் பண உதவியோ சரீர உதவியோ அளிப்பது தவறு. இந்தக் கடிதத்தின் நகல் ஒன்று அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் விரும்பினால் என் மீது நடவடிக்கை எடுக்கலாம்."

டிசம்பர் மூன்றாம் தேதி காலை பத்து மணி அடிக்கப் பத்து நிமிடங்கள் இருந்தபோது போலீஸ் துணை கமிஷ்னர் யூசுஃப் அலி வேறு சில அதிகாரிகள் உடன்வர பஸ்ஸுல்லா சாலைக்கு வந்து சேர்ந்தார். ஸி. ஆரின் வீட்டுக்கு வெளியே பெரிய கூட்டம் சேர்ந்திருந்தது. வீட்டுக்குள்ளே பல நண்பர்கள் இருந்தனர். போலீஸ் குழுவை புன்சிரிப்புடன் வரவேற்ற ஸி. ஆர். "வாரண்ட் கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டார். "இல்லை. வாரண்ட் கிடையாது" என்று பதில் வந்தது. "நீங்கள் மெல்ல வரலாம்,நாங்கள் காத்திருக்கிறோம்" என்றார் யூசுஃப் அலி. "நான் தயார்" என்றார் ஸி.ஆர். குடும்பத்தினரும் நண்பர்களும் கூட்டமும் விடை கொடுக்க போலீஸ் காரில் ஏறி அமர்ந்தார்.

நீதிபதி அப்பாஸ் அலி ஸி. ஆரை உடனே விசாரணை செய்தார். "நீங்கள் அந்தக் கடிதங்களை எழுதினீர்களா?" என்று கேட்டார். ஸி. ஆர். ஏற்கெனவே வகித்திருந்த பதவிக்குரிய மரியாதை காட்டி அவருக்கு நாற்காலி அளிக்கப்பட்டிருந்தது. அமர்ந்திருந்த ஸி. ஆர். ஒரே வார்த்தையில் உறுதியான குரலில் பதில் கூறினார்: "ஆமாம்!" மறுநாள் ஹிந்து நாளிதழ் கூறியது போல் ஊசி விழுந்தால் கூட கேட்கும் அமைதி நீதிமன்றத்தில் நிலவியது. நீதிபதி: "நீங்கள் ரத்த அழுத்தக் குறைவால் அவதிப்படுகிறீர்களா?" ஸி.ஆர்: "மருத்துவப் பரிசோதனைக்கு என்னை உட்படுத்திக்கொள்ள நான் விரும்பவில்லை". நீதிபதி: "குற்றவாளிக்குத் தண்டனை அளிப்பது என் கடமை. ஒரு வருஷ சிறைவாசம்."

தொடர்ந்து, நடுங்கும் குரலில் அர்ஜுனனின் பிரசித்தமான கீதா வாக்கியத்தை மேற்கோள் காட்டினார் நீதிபதி அலி: "என் உடல் நடுங்குகிறது. மூச்சு நிற்கிறது. என் கரங்களிலிருந்து காண்டீபம் நழுவுகிறது. கீதையின் மாணவரான ஸி. ஆருக்கு ஒரு மாஜிஸ்டிரேட்டின் கடமை என்ன என்பது புரியும் என்று நம்புகிறேன். யுத்தம் முடிந்து அமைதி அறிவிக்கப்பட்டு ராஜாஜி சிறையிலிருந்து திரும்பி, தாம் சிறப்பாக வகித்து வந்த உயர் பதவியை மீண்டும் ஏற்பாரானால் என்னைவிட மகிழ்ச்சி அடைபவர் வேறு யாரும் இருக்க முடியாது."

அலிக்கு நன்றி தெரிவித்தார ஸி.ஆர். "உங்களை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியதற்கு வருந்துகிறேன்" என்றும்கூறினார். அவருக்கு நன்கு பரிச்சயமான வேலூர் மத்திய சிறைச்சாலைக்கு ஸி. ஆர். அழைத்துப் போகப்பட்டார். இந்த விசாரணையும் தீர்ப்பும் தமிழகத்தில் பரபரப்பை உண்டாக்கின. சென்னையிலும் திருச்சியிலும் வேறு பல ஊர்களிலும் கடைகள் மூடப்பட்டன.

அந்த ஆண்டு இறுதிக்குள் 700 பேர் சிறைவாசத்தை ஏற்றார்கள். காந்தியக் கொள்கை, பிரிட்டிஷ் அதிகாரிகள் தங்கள் விடுமுறையை அனுபவிக்க அனுமதித்தது. கிறிஸ்துமஸ் காலத்தில் காங்கிரஸ்காரர்கள் ஒத்துழையாமையில் ஈடுபட்டு பிரிட்டிஷ் அதிகாரிகளை இம்சிக்கவில்லை! 1941 கோடைக்குள் 15,000 பேர் கைதாகியிருந்தனர். மிதமானதாக இருக்க வேண்டும் என்றே திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் வளர்ந்து வரும் சுதந்திர வேட்கையைப் படம் பிடித்துக் காட்டியபோதிலும், பொது மக்களை அது உசுப்பிவிடவில்லை.

(தொடரும்)

தமிழாக்கம்: சீதா ரவி



"ராத்திரி தூங்கறப்போ ஏன் உங்களுக்குத் தூக்கித் தூக்கிப் போட்டது?"

"ஆட்டோவிலே போகிற மாதிரி கனவு கண்டேன்...!"

— டி. எஸ். பாலு.

மாலைநேரத்தின் முன்னிருட்டு இன்னும் முழுதாக் ஆரம்பிக்கவில்லை. சுவாமிநாதன், ஐஸ்வர்யாவை உற்று நோக்கினார். ''பெரியப்பா'' என்று சிறு குழந்தை போல் ஆர்ப்பரித்துக் கொண்டு, கலகலக்கும் பெண்ணா இவள்? கன்னங்கள் சிவக்க, கொழு கொழு குழந்தை போல இருந்த இந்தப் பெண், ஏன் இப்படி உலர்ந்து ஒடுங்கிய கொடி போல ஆகி இருக்கிறாள்? ஒருவேளை தன்னந்தனியே, துருதுருவென அலைபாயும் குழந்தையுடன் போராடுவதால் இருக்கலாம். மாலை நேரத்து மங்கலான ஒளியில் அவள் முகம் களையிழந்து காணப்பட்டது போல் அவர் உள் மனத்தில் ஒரு சிறு நெருடல்.

12

சொர்க்கத்தின் கதவுகள்



லக்ஷ்மி

''என்னம்மா ஐஸ்வர்யா? எல்லாரும் அமெரிக்கா போனால், அங்கே கிடைக்கிற அபரிமிதமான சாப்பாட்டில் குண்டாகி வருவான்னு பேரு'' தொண்டையைக் கனைத்துக் கொண்டு ஆரம்பித்தார் சுவாமிநாதன்.

''பாதாம் ஐஸ் க்ரீம், முழு க்ரீம் பால், பாலேட்டுக் கட்டின்னு நம்ம பார்வதியம்மாள் அக்கா பேரன் சாப்பிட்டு உப்பிக் கிடந்தான். அப்புறம் கொழுப்புச் சத்தில்லாத சாப்பாடு சாப்பிட்டு இளைக்கறேன்னு அலைஞ்சான்.'' கட்டிலில் அமர்ந்திருந்த விமலா மெதுவாகக் கூறிவிட்டு முறுவலித்தாள்.

''முக்கால்வாசிப் பேர், நம்ம ஊரில் இருந்து போனதும், இப்படித்தான். முதல்ல குண்டடிக்கறது. அப்புறமா, 'ஃபேட் ஃப்ரீ டயட்'' ன்னு அலையறது. நல்லவேளை உனக்கு அந்தத் தொந்தரவே இல்லே.'' சுவாமிநாதன் உரக்கச் சிரித்தார்.

ஐஸ்வர்யா வழக்கம்போல் கணீரென

நகைக்கவில்லை. "போங்க பெரியப்பா! ஆர் நாட்டி" என்றும் பொய்யாகச் சிணுங்கவில்லை.

"எனக்கு உங்ககிட்ட பேசணும் பெரியப்பா" என்றாள் கருக்கமாக.

"குழந்தை எங்கேம்மா, கூட்டிக் கொண்டு வரவில்லையா?" என்று பேச்சை மாற்ற விரும்பினார் அவர்.

"அம்மாவிடம் விட்டிருக்கேன். பேச்சை மாத்தாதீங்கோ பெரியப்பா. உங்ககிட்ட பேசணும்!" அவள் குரலில் உறுதி தொனித்தது.

"சரி, வா. நாம முன் பக்க அறையில் போய்ப்பேசலாம்." தயக்கத்துடன் தடுமாறியபடி நடந்தார் சுவாமிநாதன்.

"பாவம் குழந்தை! ஏதோ உங்ககிட்ட பேசணும்னு துடிச்சிண்டிருக்கா, பேசுங்கோ. நீ போம்மா ஐஸ்வர்யா." விமலாவும் மென்மையாகக் கூறி அவளை அனுப்பி வைத்தாள்.

முன் அறைப் பக்கம் நாற்காலியில் அமர்ந்ததும் "பெரியப்பா! என் உடம்பு ஏன் இப்படி இருக்குன்னு கேட்டேளே? அதுக்குக் காரணம், என் மனசில் சந்தோஷமே இல்லாததுதான்" என்றாள் உடைந்த குரலில்.

சுவாமிநாதன் தூக்கிவாரிப் போட்டவராய் அவளையே பார்த்தார். "என்ன இது? காதல் கல்யாணம் என்று அமெரிக்கா போய், ஒரு குழந்தைக்குத் தாயும் ஆன பிறகு....?" குழப்பம் அவரைக் கலக்கியது. இந்தப் பெண் விபரீதமாக எதையும் சொல்லிவிடக் கூடாதே!

"எங்க கல்யாணம் நடக்க நீங்கதான் காரணமாக இருந்தேள்.

ஆமாம்! அரும்பாடுபட்டுத் தூது நடந்து, இருக்கிற விரோதத்தை எல்லாம் வாங்கிக் கட்டிண்டேளே.

"இப்ப, நீங்கதான்...." அவள் சொல்லி முடிக்குமுன், பார்வதியம்மாள் உரத்த குரலில், "ஐஸ்வர்யாவா? எப்ப வந்தே? சௌக்கியமா?" என்று குசலம் விசாரித்தபடி நுழைந்தாள்.

பெர்ஷிய ஓவியரான மார்ஷல் டி வெக்லூர் என்பவர் 1875–ல் தம் காதலிக்கு ஒரு காதல் கடிதம் எழுதினார். அதுவே உலகின் மிகப் பெரிய காதல் கடிதம். அதிலிருந்த சொற்கள் 56,25,000.

'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்ற வார்த்தைகள் மட்டும் 18,75,000. இடங்களில் வருகின்றன.

— தசி. பாலு.



ஐஸ்வர்யா பற்களைக் கடித்துக் கொண்டு, "ம்!" என்றாள். சுவாமிநாதன் நிலைமையைச் சமாளிக்க முயன்றபடி, "இப்பத்தான் வந்தா. பெரியம்மாவுக்குடம்பு எப்படி இருக்குன்னு பார்த்துவிட்டுப் போகணும்னு ஒரே அவசரம் அவளுக்கு" என்றார்.

"இருக்காதா? விமலா சொல்லி இருக்காளே எனக்கு. அவா, அப்பா அம்மாவை விட, நாங்கன்னு கொள்ளை உசிர் ஐஸ்வர்யாவுக்கும், அஸ்வத்துக்கும்னு. நாம ஆசையா இருந்தால், குழந்தைகளும் நம்மகிட்டே ஒட்டிக்கிறதுகள்" பார்வதியம்மாள் அரட்டலாகக் கூறியபடி உள்ளே சென்றவள் நின்றாள்.

"உங்ககிட்ட பேசணும் எனக்கு. விமலா எப்படி இருக்கான்னு பார்த்துவிட்டு வரலாம்னு கிளம்பினேன். தானே சமைச்சுண்டு, உங்க பெரியப்பா திண்டாடறாரே, ஏதாவது வேணுமான்னு கேட்டுட்டு வரலாம்னு வந்தேன்."

"ரொம்ப தேங்க்ஸ். விமலாவுக்கு உடம்பு தேவலை. எனக்கும், அப்படி ஒரு கஷ்டமும் இருக்கலே. ஏதாவது தேவைப்பட்டால் கட்டாயமா உங்ககிட்ட கேக்கறேன்," சுவாமிநாதன் உரையாடலைக் கத்தரிக்க முயன்றார்.

பார்வதி அம்மாள் அந்தளவில் இலகுவில் அசைவதாகத் தெரியவில்லை. அந்தம்மாளை விரோதித்துக் கொள்ளவும் முடியாது. ஐஸ்வர்யா முகத்தைக் கோபத்துடன் குலுக்கிவிட்டு, "மனசு விட்டுப் பேசலாம்னு ஓடி வந்தேன். பூஜை வேளைக் கரடி மாதிரி" என்று முணுமுணுத்தாள்.

விமலாவின் உடல்நலம் விசாரித்துவிட்டு, அடுத்த சில விநாடிகளில் பார்வதியம்மாள் ஐஸ்வர்யாவிடம் வந்து அமர்ந்தாள்.

"என்னோட அண்ணா பேரன் 'அயோவா' யூனிவர்ஸிடியில் படிச்சிண்டிருந்தான். சங்கர் இளேஷ்னு பேரு."

"நாங்க இருக்கிற எடம், நீங்க சொல்றதுக்கு இருநூறு மைல் தள்ளி" என்று கோபத்தை அடக்கிக் கொண்டு புன்னகை பூக்க முயன்றாள் ஐஸ்வர்யா.

"அங்கெல்லாம்தான், ஹைவேயில் கம்மா நூறு கிலோ மீட்டர் வேகத்தில் காரை ஓட்டிக் கொண்டு ஆபீஸுக்கே போவாளாமே. ஒவ்வொருத்தர், நூறு நூத்தம்பது மைலுக்கு அப்பாலகூட ஆபீஸ் போறது உண்டுன்னு கேட்டிருக்கேன்."

"ஆமா ஆபீஸுக்கு மட்டும் அப்படிப் போவார்கள்!"

"அது மட்டுமா. வெங்கடாஜலபதி கோவில், பிள்ளையார் கோவில்னு நம்ம ஊர் கோவில் அங்கே வந்திருக்கே. அதில எல்லாம் ஒண்ணு கூடுவாளாம். இப்ப சமீபத்தில தியாகராஜ உற்சவம் கூடப் பிரமாதமா கொண்டாடினான்னு எங்கண்ணா சொன்னான். வடை, பாயஸத்தோட சம்பிரதாயமா சாப்பாடு, பாட்டு எல்லாம் இருந்துதுன்னு சொன்னான்."

"அப்படியா. ரொம்ப சந்தோஷம்" சுவாமிநாதன் இடைமறித்தார். ஐஸ்வர்யா ஏதேனும் சொல்லிவிடப் போகிறாளே என்ற

கவலை அவருக்கு.

''சங்கர் தினேஷைக்கூட நீ பார்த்திருப்பே. அடிக்கடி 'பிட்ஸ்பர்க்' கோவிலுக்கு வருவான். இப்பக்கூட, அங்கேதான் அவனுக்குக் கல்யாணம் நடந்தது. பொண்ணும் மெட்ராஸ்தான். எங்களுக்குத் தெரிஞ்சவா பொண்ணு. பி. எச். டி. படிக்கப் போறான். பிராப்தம் வந்துடுத்து. இங்கேயிருந்து, திருமாங்கல்யம், ஒன்பது கஜம், கூரைப் புடவை சகிதம் அவளோட அப்பா அம்மாவே போய்க் கல்யாணத்தை முடித்துவிட்டு வந்துவிட்டார்கள்!''

ஐஸ்வர்யாவின் முகம் அஷ்ட கோணலாகிக் கொண்டே போயிற்று. பார்வதி அம்மாள், அமெரிக்கப் புராணத்தின் உச்சகட்டத்திலிருந்து விழுந்து விடுமுன் காப்பாற்ற வேண்டிய கட்டத்தைச் சுவாமிநாதன் உணர்ந்து கொண்டார்.

''ஆமாம். இப்பல்லாம் 'விஸா' கிடைக்கறதே ரொம்ப சிக்கலா இருக்கு. அதனால், அங்கேயே நம்ம ஊர் பொண்ணு பிள்ளைகள் கல்யாணத்தையும் முடிச்சுக்கொள்கிறார்கள். சௌகரியம்தானே'' என்று பேச்சை மாற்ற முயன்றார்.

''அதென்னவோ போங்கோ. என் தங்கையோட கடைக்குட்டிப் பையன், எம்.எஸ். படிக்கணும்னு தலைகுப்புற நின்றான். நந்தன், சிதம்பரம் போகத் தவிச்சானுமே அது மாதிரி, அமெரிக்கா போகாமல் இருப்பேனுன்னு பித்தம் பிடிச்சு அலைஞ்சான். 'விஸா' கண்டிஷனா தர மாட்டோம்னுட்டா. கடைசியிலே, இங்கேயே எம்.எஸ். படிச்சான். அப்படியும் விடலை. கடைசியாக இங்க சுத்தி அங்க சுத்தி, அமெரிக்காவில் வேலை தேடிக் கொண்டு போயிட்டான்'' பார்வதியம்மாள் கூறிச் சிரித்ததும், சுவாமிநாதனும் சிரித்து வைத்தார்.

அதற்கு மேல் பேசாவிட்டால் மரியாதைக் குறைவாகிவிடும் என்பதை ஐஸ்வர்யாவே உணர்ந்திருக்க வேண்டும். அதனால், ''நீங்க அமெரிக்காவைப் பத்தி ரொம்பத் தெரிஞ்சு வச்சுக் கொண்டிருக்கேள். பேசாமல் ஒரு வாட்டி அமெரிக்கா போயிட்டு வாங்கோ'' என்று புகழ்ந்து வைத்தாள்.

பார்வதியம்மாள் புகழ்ச்சியின் கதகதப்பில் மகிழ்ந்தபடி, ''எங்கே போறது? வீடு நிறைய பேரனும், பேத்தியுமா இருக்கே. இது தான் எனக்கு அமெரிக்கா'' என்றபடி எழுந்தாள்.

''பாவம்! பெரியப்பா, பெரியம்மாவைப் பார்க்க வந்திருக்கே. நான் வந்து 'போர்' அடிச்சுட்டேன். நீ அப்புறமா ஒருநாள் சாவகாசமா எங்கள் வீட்டுக்கு வா. நிறையப் பேசணும்'' என்றபடி பார்வதியம்மாள் விடை பெற்றாள்.

மாலை, இருள் நன்கு கவியத் துவங்கியது. முன்னறை விளக்கைப் போட்டுவிட்டு, ''இரு, ஐஸ்வர்யா. எல்லா அறையிலேயும் விளக்கைப் போட்டுவிட்டு வரேன்'' என்று எழுந்தார் சுவாமிநாதன்.

''வேண்டாம் பெரியப்பா! நானே போய்ச் சுவாமி விளக்கை ஏத்தி, எல்லா அறைகளிலும் விளக்கைப் போட்டுவிட்டு வரேன். நீங்க உட்காருங்கோ.'' ஐஸ்வர்யா எழுந்து உள்ளே சென்றாள்.

அந்த வீட்டில் குடிபுகுந்த நாட்களில் பலமுறை ஐஸ்வர்யா, பெரியப்பா வீட்டில், சீராடியதுண்டு. அப்போது, அவளே வலிய எல்லா வேலைகளிலும் விமலாவுக்கு உதவுவாள். 'சுவாமி விளக்கை ஏற்றி, மணம் பரப்பும் ஊதுவத்திகளையும் வைத்துவிட்டு, ''பெரியப்பா! இப்ப இந்த வீடு முழுவதும் வாசனையால் ரொம்பிடுத்து'' என்று சிரிப்பாள்.

அவளது சொந்த வீட்டில் ஒரு துரும்பைக் கூடத் தூக்கிப் போட முயலாத பெண், இங்கு வந்து இயல்பாக நடப்பதைக் கண்டு மனம் முழுதும் உணர்ச்சியில் கரையப் பூரித்துப் போவார் அவர். ''உன் தங்கக் கை பட்டாலே, ஊதுவத்திக்குக்கூட வாசனை வந்துடுது. என் செல்லப் பெண்ணாச்சே'' என்பார் அவர்.

''போங்கோ பெரியப்பா'' செல்லமாகச் சிணுங்கிக் கொண்டு, விமலாவிடம் ஓடிய ஐஸ்வர்யாவா இவள்? பெருமூச்செறிந்தார் அவர்.

''பெரியப்பா!''

''ம். உட்காரு. இனிமே யாரும் வந்து தொல்லை தரமாட்டா. நீ சொல்லு. மனசை விட்டுத் தாராளமாகப் பேசு. நான் கேக்கத் தயாரா இருக்கேன்,'' சுவாமிநாதன் பேச்சை ஆரம்பித்தார்.

''ஸாரி பெரியப்பா! எனக்கு இப்ப 'மூட்' போயிடுத்து. நீங்க கேக்கத் தயாரா இருந்தாலும் நான் சொல்லத் தயாரான நிலையில் இல்லை.''

வியப்புடன் பார்த்தார் சுவாமிநாதன். விசித்திரமான பெண்ணாக மாறிவிட்டாளே



மனைவி: ''என்னங்க, நம்ம குழந்தைக்கு 'ஜிலேபி'ன்னு ஏன் பேர் வெச்சிருக்கீங்க?''

கணவன்: ''நீதானே எல்லார் வாயிலும் நுழையற மாதிரி பேர் வைக்கச் சொன்னே.''

— இளைழ் அ. கதிர்வேல்.

இஸ்வர்யா?

''நான் மறுபடியும் வரேன் பெரியப்பா. அப்பப் பேசுவோம்'' அவள் கிளம்ப ஆயத்த மானாள்.

''ஏம்மா, கொஞ்சம் இருந்து நிதான மாகப் பேசிவிட்டு.....''

''இல்லே பெரியப்பா. நான் உங்ககிட்டே கட்டாயம் பேசியே ஆகணும். அதை நிதா னமா, பேசித் தீர்மானம் செய்யணும். அப் புறம் பேசலாம்'' பிடிவாதமாக எழுந்து உள்ளே சென்றவள், ''பெரியம்மா, அப்புறமா வரேன்'' என்று உத்தரவு வாங்கிக் கொண் டாள்.

விமலாவிற்கு ஐஸ்வர்யாவைப் பார்த்து ஒரு விதத்தில் சந்தோஷம். ''உடம்பு இளைச் சாப்பல இருக்கு. போகட்டும். தலை மயிரை மொட்டைக் கிராப் செய்து கொண்டு வர வில்லே. இப்போதெல்லாம், நம் ஊரில் பொம்மனாட்டிகள் 'கிராப்' செய்து கொண்டு நிற்கிறார்கள். நல்ல காலம். அமெரிக்காவில் இருந்து இவளுக்குப் புத்தி மாறலே'' என்று சன்னமான குரலில் கூறிவிட்டுச் சிரித்தாள்.

''கூந்தலில் மாற்றம் ஏற்படவில்லேதான். ஆனால் அவள் மனத்தில் ஏதோ ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறதே விமலா! அது எதனால்? மாற்றமா? ஏமாற்றமா?'' தனக்குள் சொல்லிக் கொண்டவராய், வெளிப் பக்க விளக்கைப் போடப் போனார்.

நாலைந்து தினங்கள், ஓடிச் சென்று விட்டன. வழக்கம்போல் விமலாவிற்கு உதவு வதும், வீட்டை நிர்வகிப்பதும், கடைக்குச் செல்வதுமாகக் காலம் ஓடிக் கொண்டிருந் தது.

ஆரம்ப நாட்களில் திணறியதுபோல், இப்போதெல்லாம் சுவாமிநாதன், நிர்வாகத் திறமை இன்றித் திணறுவதில்லே. காய்கறி வாங்குவது முதல், சமையல் வரை ஓரள வுக்குப் பழக்கிக் கொண்டு விட்டிருந்தார்.

விமலாவும், முடிந்தவரை தன் உடல்நிலையால் அவருக்குச் சிரமம் தராமல் இருக்கத் தெரிந்து கொண்டிருந்தாள்.

அன்று காய்கறிக் கடைப் பக்கம் எட்டிப் பார்த்துவிட்டு, எதையாவது வாங்கி வரு வது என்ற தீர்மானத்துடன் புறப்பட்டுத் தெரு முனையைத் தாண்டியவர் சட்டென நின்றார்.

எதிரே கேசவன், ஒவ்வொரு வீடாக உற்றுப் பார்த்தபடி வந்து கொண்டிருந்தான். நிச்சயம் அவரது வீடு தேடிக் கொண்டுதான் வருகிறான். ஊகித்தவராக, வழியிலேயே நின்றவர், ''கேசவா! சுகம்தானே?'' உரக்க விசாரித்தார்.

திடுக்கிட்டவனாய், ''ஸார்! நீங்களா? என்ன ஆச்சர்யம்? உங்க வீட்டைத் தேடிக் கொண்டுதான் வரேன்.'' என்றான் உற் சாகத்துடன்.

''தேடிப் போன மூலிகை காலில் கிடைச்ச மாதிரியா, நானே வந்துவிட்டேன்.'' அவர் சிரித்தார்.

''ஆமாம் ஸார். இப்ப எனக்கு மூலிகை மாதிரி நீங்க இருக்கீங்க....'' அவன் குரல் சட்டென மாறியது. கண்களில் ஒருவித கலவரம்.

''என்னப்பா இது?'' விளங்காதவராய் மீண்டும் வினவினார் சுவாமிநாதன்.

''இது தெருவில் பேசக்கூடிய விஷய மில்லே ஸார். உங்க வீட்டுக்குப் போய்ப் பேசலாமா? அதுக்கு உங்களுக்குத் தடை எதுவும் இல்லேயே?'' கேசவன் அடிக்குரலில் கேட்டதும் அதிர்ந்து போனார் அவர்.

''தாராளமா பேசலாம், வா'' திரும்பி நடந்தவர் மனத்தில் ஆயிரம் எண்ணங்கள் அலைமோதலாயின.

(தொடரும்)

மாயவன் கைவசம்சிறியதகரப்பெட்டி யோடு துண்டு ஒன்றை எடுத்துத் தோளுக்கும், மாருக்கும் இழுத்துப் போர்த்திக் கொண்டு தர்மரைப் பின் தொடர்ந்தான்.

''கோவிலுக்கு நடைதானுங்களா, இல்லே பஸ்கல, கிஸ்கல.....'' போகும் வழியில் தர்மரைப் பார்த்துக் கேட்டான்.

''ஆத்தாளுக்கு வேண்டிக்கிட்டு பூசை போடப் போற ஆராச்சும் வாகனத்துல போனதுண்டாடா இந்த கிராமத்துல?''

உரத்துப் பேசினார் தர்மர்.

''இல்லீங்க....'' மாயவன் இளிப்பாய்ப் பதிலை வைத்தான்.

''பல வருஷத்து வேண்டுதல் பூசை இது. கொறை இல்லாம நடக்கணும்னு துடிச்சுக்கிட்டு இருக்குறேன் நான். வெளங்காம போட்டு அழுக்கக் கூடாது.''

''சரீங்க.''

தர்மர் வேகமாய் நடக்க ஆரம்பித்தார். அவர் வீடு வந்துவிட்டது. வாசலில் அவரது குடும்பமே மூட்டை முடிச்சுக்களுடன் குந்தியிருந்தது. தர்மரைப் பார்த்துவிட்டு எல்லோரும் எழுந்து நின்று புறப்பட ஆயத்தமானார்கள்.

''பொங்கலு வைக்க தேவையான சாமான் செட்டு, அரிசி பருப்பெல்லாம் விட்டுப் போவாம எடுத்துக்கிட்டீங்களா?'' மனைவி முப்பாத்தாளைப் பார்த்துக் கேட்டார் தர்மர்.

''காலையிலே நாலு மணிக்கே குளிச்சுப்பிட்டு அஞ்சு மணிக்கே அம்புட்டையும் ஒண்ணு விடாம 'பாக்' பண்ணிப்புட்டோமப்பா. நீதான் இந்த மாயவனுக்காக்கன்னு லேட்டு பண்ணிப்புட்டே.''

சேலத்து மரவனேரியில் பத்தாம் வகுப்பு படிக்கும்மகன் அழகரசிபேசினான். ஆங்கிலக் கலப்பான அவனின் பதிலைக் கேட்டுவிட்டு, பெருமிதத்தோடு மாயவன் பக்கம் திரும்பினார் தர்மர்.

''கேட்டியாடா வெறும் பயலே. உன்னைதான் தாமசமாயிடுச்சு. நேத்தே சொல்லியிருந்தேன்லே. காலையில கோழி கூவறப்போவிருட்டாவரணுமின்னு....''

துணுக்கென்றுவந்தகோபத்தோடு இரைந்தார்.

''அப்போவ், அப்புறமா வெய்யு. இப்ப பொறப்படு. அஞ்சு மைல் தூரத்தை உச்சிக்குள்ள கடக்கணுமுல்லே?''

திரும்பவும் பேசிய மகனைக் கொஞ்சம் வாஞ்சையுடன் பார்த்துவிட்டு நடையிடத் தொடங்கினார் தர்மர். எதிரே பார்வைக்கு அடங்காமல் உயரத்திலும் பக்கவாட்டிலும் 'பிசுபிசு' என்று பசுமையோடு அடர்வாகக் காட்சிக்குத் தெரிந்தது சேர்வராயன் மலை.

அதன் முதுகின்மேல் முந்நூறு வருஷங்களுக்கும்மேலாய்கோயில்கொண்டுஅமர்ந்தபடி இருக்கும் கோல பூவிழி அம்மனின் சன்னதி நோக்கி விரையும் அவர்கள், அடிவாரத்து ஒற்றையடிப் பாதையில் இறங்கி மலை மேல் ஏற ஆயத்தமாயிருந்தனர்.

கந்தசாமி மாத்திரம் கொஞ்சம் சோர்விலிருந்தான். அப்பா தர்மரை ஆற்றாமையுடன் பார்த்தான். புசுபுசுவென்று சுருண்டு வளர்ந்து நிற்கும் தலைமுடியை கோலப் பூவிழி ஆத்தாளின் சன்னிதியில் மாயவனால் இழக்கப் போவதை நினைத்து நினைத்து ஏங்கினான்.



அவள் அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டால் போதும். அன்று முழுக்கக்குடைராட்டினத்தில் கோபுர உயரத்திற்கு ஏறிச் சரிந்த மாதிரி ஒரு சந்தோஷம் சம்பவித்துவிடும் அவனுக்கு.

நாளை மொட்டைத் தலையைப் பார்த்து, 'லில்லி' முகத்தைத் திருப்பிக் கொண்டால்......?

எப்படியும் அவரும் அவரைச் சார்ந்தவர்களும் சன்னிதியை இரண்டு மணி நேரத்தில் அடைந்துவிடுவார்கள்என்னும் அளவிலான இடைவெளித் தூரம் ஆலயத்திற்கும், அவர்களுக்கும் இடையே இருந்தது.


''அம்மோவ்....'' மெல்ல முப்பாத்தாளை அழைத்தான் கந்தசாமி.

''ஏனுடா?'' முப்பாத்தாள் மகனைக் கரிசனமாகப் பார்த்துக் கேட்டாள்.

''எனக்கு முடி இறக்க இஷ்டமில்ல...!''—பட்டென்று பதில் சொன்னான்,

— முப்பாத்தாளுக்குப் பகீரென்றது.

''போடா பொச கெட்ட பயலே... அது



ஆத்தா சொத்துடா. எப்ப மொட்ட போட்றதா வேண்டுனமோ அப்பவே உன் தலை பாரம் அவனைச் சேர்ந்துடுச்சு. ஏதும் ஏடா கூடமாச் சொல்லிடப் போறேன். கம்முன்னு வா. உங்க அப்பா காதுல விழுந்திச்சின்னு ஆஞ்சிப்பிடும்,'' — என்றான் மூப்பாத்தாள்.

— இதனால்எல்லாம்கந்தசாமிக்குச்சாந்தி ஏற்படவில்லை. அப்படியே ஓடிவிடலாமா என்று கூட நினைத்தான். தர்மர்தான் நினைப்பில் தடுத்தார். ஒரு கணம் அவனுக்குள் அவனது நண்பர்கள் ஊர்வலம் வந்து போனார்கள்.

''டேய் மொட்ட... டேய் ஆப்பத் தலையா...'' — அவர்கள் கேலிகளை முன்கூட்டியே உத்தேசித்துக் கதி கலங்கினான். எப்பொழுதாவது அவனைப் பார்த்துச் சிரிக்கும் பாரெஸ்டர் ஆபிரகாமின் மகள் 'லில்லி' முகம் அவனுக்குள் பூத்தது. அவள் தன்னைப் பார்த்துச் சிரிக்கக் காரணமே இந்தச் சுருண்ட அழகான தலைமுடிதான் என்பது அவன் நினைப்பு.

அவள் அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டால் போதும். அன்று முழுக்கக் குடை ராட்டினத்தில் கோபுர உயரத்திற்கு ஏறிச் சரிந்த மாதிரி ஒரு சந்தோஷம் சம்பவித்துவிடும் அவனுக்கு.

நாளை மொட்டைத் தலையைப் பார்த்து, 'லில்லி' முகத்தைத் திருப்பிக்கொண்டால்...?

நினைக்கும்போதே வியர்த்தது.

அனைவருக்குமே தூக்கி வாரிப் போட்டக

சேர்வராயன் மலையின் அறுபத்தி நான்கு கிராமமுமே திரண்டு விட்ட மாதிரி அப்படி ஒரு கூட்டம்! ஒரே பரபரப்பு!

"என்னுங்கடா ஆச்சு?" — பதறிப் போய்க் கேட்டார் தர்மர்.

"விவரம் தெரியாதா அண்ணே? கோலப்பூ அம்மாவோட விக்கிரகத்தைக் களவாண்டுட்டுப் போய்ட்டாங்க. அதான் ஊரே கூடி வந்திருக்கு. களவாணிங்க! ஆத்தா கிட்ட விளையாடிப் பாக்கறாங்க. அவ சக்தி தெரியாம, என்ன கதி ஆகப் போறாங்களோ?"

— ஒரு வயதானவரின் சபிப்பில் மூச்சுக் காற்றிலேயே நெருப்பு பறந்தது. தர்மருக்கு உடம்பு பதறியது.

"நேர்த்திக் கடன் பண்ண வந்த இடத்துல இப்படி ஆகிப் போச்சே. ஆத்தா ஏதும் குத்தம் பண்ணிப்பிட்டேனா?" — தர்மர் வாய் விட்டுப் புலம்பினார். கந்தசாமிக்கோ ஒரே குஷி.

திடீரென்று கூட்டத்தில் நெருப்பு பரவின மாதிரி ஒரு சளசளப்பு. போலீஸ் வந்து நுழைந்திருந்தது!

"ஒன்பது மணிக்கு வழக்கமா காலைல வந்து சன்னதியைத் தெறந்தப்பதான் விக்கிரகம் இல்லீங்க..." — பூசாரி அழாக்குறையாகப் பதில் சொன்னார்.

"நேத்து இருந்திச்சா? எப்ப கோயிலை மூடினே?" — படபடவென்று அடுத்த கேள்வியை அடுக்கினார்.

"ஒரே மழையா இருந்ததுனால நேத்து கோயிலையே தெறக்கலீங்க..."

"அதுக்காக ஒரு ஐம்பொன் விக்கிரகம் இருக்கிற இடத்துல காவல் இல்லாம, பூசாரி கூட வந்து போகாம இருந்தா எப்படிய்யா...? இப்படித்தான் களவு போகும்..." — சலித்துக் கொண்டார் இன்ஸ்பெக்டர்.

"ஐயா அப்படிச் சொல்லாதீங்க. ஆத்தாளுக்கு சக்தி ஜாஸ்தி. ஒரு பய அண்டி அவளைத் தொட்டுட முடியாது. தொட்டா அவன் கதி அவ்வளோதான்..." — ஒரு தீவிர பக்தர் இழைந்து வந்ததைப் பார்த்து அந்த நிலையிலும் சிரிப்பு வந்தது இன்ஸ்பெக்டருக்கு.

"கடவுள் நம்பிக்கை இருக்க வேண்டியது தான். அதுக்காக இப்படி குருட்டுத்தனமா நீங்க இருக்கக் கூடாது. இது முழிச்சிக்கிட்டு இருக்கறப்பவே விழியைத் திருடற காலம்..." — சர்க்கிள் ஒருவர் கொஞ்சம் கோபமாய்க் குறுக்கே வர எதையும் சட்டை செய்யாமல் படுகுஷியாக இருந்தான் கந்தசாமி.

போலீசார் எல்லோரையும் கலைந்து போகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஏகப்பட்ட வயர்லெஸ்களைக் கைகளில் சுமந்தபடி அலைமோதிக் கொண்டிருந்தார்கள். கட்டளைகள் அதன் மூலமாக அந்த மலை முழுக்கவும், சேலம் நகருக்கும் பறந்து கொண்டிருந்தது. திருடனை எப்படியும் பிடித்தாக வேண்டிய வேகம் அவர்களிடம் அலைமோதியது.

தர்மர் சோர்வுடன், வந்த ஒற்றையடிப் பாதை வழியே இறங்கி நடக்க ஆரம்பித்தார். மாயவன், முப்பாத்தாள், அழகரசி, கந்தசாமி என்று எல்லோருமே அவரைப் பின் தொடரும்போது புதிதாக ஒருவன் அவர்களோடு சேர்ந்து கொண்டு இறங்க ஆரம்பித்தான்.

"யாரு அப்பா நீ?" — தர்மர் மெல்லிய குரலில் கேட்டார்.

"நானு ஒரு போக்கத்தவனுங்க. விறகு வெட்டி...." என்று தற்குறியாய்ப் பேசிக் கொண்டு அவரை மந்தமாய்ப் பார்த்துப் பரிதாபமாய் முகம் தூக்கினான்.

இதற்குள் அவர்கள் ஏகதூரம் கோவிலை விட்டு வந்து விட்டிருப்பது தெரிந்தது. கோவில் கண்களை விட்டு மறைய காப்பிச் செடி சரிவுகள் மறைந்து கருமருது செழித்த சரிந்த காடு வந்தது.

கீழே நிழல், இருட்டாய்க் கூடு கட்டி மலையின் செழிப்புக்குப் பொன்னாடை போர்த்தியிருந்தது.

திடீரென்று அவன் இடுப்பு வேட்டி முடிச்சை விலக்கி ஒரு ரிவால்வரை எடுத்துத் தர்மர் எதிரே நீட்டினான். தர்மர் குலை நடுங்கிப் போக, முப்பாத்தாள் கொண்டு வந்த பாத்திரம் பண்ட மூட்டையைத் தளாரென்று கீழே போட்டுவிட்டு ஓடிவந்து தர்மரைக் கட்டிக் கொண்டாள்.

அழகரசியும், கந்தசாமியும், மாயவனும் பேச்சு மூச்சற்றுப் போனார்கள்.

"இப்படியும் ஒரு வழிப்பறியா?" — கந்தசாமி நினைத்து முடிப்பதற்குள், "இப்ப நான் சொல்றதை நல்லாக் கேட்டுக்குங்க... இங்க ஒரு புதர்ல ரெண்டு மூட்டை இருக்கு. அதை ஆளுக்கு ஒண்ணு சொமந்துக்கிட்டு அடிவாரத்து நாயக்கன்பட்டில உள்ள உங்க வீடு வரைக்கும் நீங்க வரணும். நடுவுல யாரும் மூச்சு விடக் கூடாது. பாக்கறவங்களுக்கு நாம கோயிலுக்குப் போய் வந்த மாதிரிதான் தெரியும். தெரியணும்.

"கொஞ்ச நேரத்துல என் சினேகிதங்க காரோட வருவாங்க. பொறவு நான் மூட்டைகளோட ஏறிப் போயிடுவேன். நடுவுல யாரும் ஏதும் சண்டித்தனம் பண்ணினா என் ரிவால்வர் குண்டு குடலுக்குள்ற கோலி விளையாடிடும், ஜாக்கிரதை..." — என்றான்.

— உடனேயே மாயவனையும், கந்தசாமியையும் பக்கத்துப் புதர் பக்கம் தள்ளிக் கொண்டு போய், தர்மர் உதவியுடன் அவர்கள் தலையில் மூட்டையை ஏற்றினான். கந்தசாமியின் தலையில் ஏறிய மூட்டை அவன் தலையை வயிற்றுக்குள் போட்டு அழுத்தும் அளவு பாரமாக இருந்தது. கந்தசாமி இடி விழுந்த மாதிரி கலங்கிப் போனான்.

என்னா கனம் கனக்குது. ஏம்ப்பா, மூட்டைக்குள்ற என்ன இருக்குது?" — கேட்டுவிட்டு அவன் ரிவால்வர் குழலில் தோள் பட்டையில் 'ணங்' கென்று குத்திய வலிதாளாமல் 'ஆ' என்று கத்தினான். முப்பாத்தாள் வாய்விட்டுக் கத்திவிட்டாள்.

"ஐய்யோ என் மவனை ஒண்ணும் செஞ்சிடாதே...!"

"ஒண்ணும் செய்யக் கூடாதுனா பேசாம வரணும்..." — அவன் சத்தமே சப்தமின்றி



சலவை தோறும் பொலிவு...சலவைக்கு சலவை...பவர் பேக்டு ஸர்ஃப் புத்தாடைபோல் வெண்மை பொலிய வெளுக்கிறது !

வெளுக்கும் ஒவ்வொரு சட்டைக்கும், ஒவ்வோர் ஆடைக்கும் வெண்மை மிடுக்கு, புதுமைக் கருக்கு-அளிக்குது பவர் பேக்டு ஸர்ஃப். அன்றன்றே வாங்கி அணிவது போல் என்றென்றும்...கோடித் துணிபோல் கோலப் புதுமை.

இதுவரை இல்லாத ஏற்றமான சக்தி செறிந்து வருகுது பவர் பேக்டு ஸர்ஃப்... பேராற்றல் மிகுந்தது. பேணிக் காப்பதில் உயர்ந்தது. ஆழ ஊடுருவித் துப்புரவாக்கும் சக்திபடைத்தது! அடைக்திராத அமோகமான நுரைவளம் மிகுந்தது.

விடாத அழுக்கையும் விரட்டியடிக்கும், வெண்மையினை வாழ்விக்கும், காலமெல்லாம் துணிப் புதுமை காக்கும்.

வெண்ணிறமோ, வர்ணமோ...விசேஷத் துணிகள், அன்றாடத் துணிகள் எல்லாமே ஒளிமிளிரும் ஒப்பற்ற வெள்ளைவெளேர்... ஸர்ஃப் சலவையிலே...நித்தமும் நிலைபெறுமே புத்தாடைக் கலையுடனே.

சலவைப் பவுடர்கள் பலநூறு இருக்கலாம், ஆனால் உங்கள் குடும்பத் துணிகளுக்கு நம்பிக்கையானது ஸர்ஃப் ஒன்றுதான்... ஸர்ஃப் அன்றி வேறில்லை.



ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர், சகல துணிகளுக்கும் புதுமை ஜோ

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS SU 331 2517



"சிவாஜியின் வாள் எத்தனை கூர்மையாக இருக்கிறது!" — என்று ன் மந்திரியைப் பார்த்து வியந்து கூறினான் அவுரங்கசீப்.

"இரும்பான உங்கள் மார்பைப் பிளப்பதற்கு அவ்வளவு கூர்மையும் போதாது!" — என்றான் மந்திரி.

"என் நெஞ்சு அவ்வளவு கடினமானதா?" — என்று கேட்டான் அவுரங்கசீப்.

"சங்கீதத்தால் இளகாத நெஞ்சு ஒன்றுதான் உலகிலேயே கடினமான நெஞ்சு!" — என்றான் மந்திரி.

கவிஞர் கண்ணதாசன் எழுதிய குட்டிக்கதைகள் என்ற புத்தகத்தில் இருந்து எழுதியவர்: — கே. வி. நாதன்.

இறங்கினார்கள்.

வழியில் அனேகர் தட்டுப்பட்டார்கள்.

"என்ன தர்மரே, கோயிலு பக்கம் போனீர் போல இருக்கு. நேர்த்திப் பூசை எல்லாம் நல்லா முடிஞ்சுச்சா? ஆத்தா சிலையை களவாண்டுட்டாங்களாமுல்ல...?"

—சிலர் நைச்சியமாகக் கேட்டுக் கொண்டே நிற்காமல் நடந்து கொண்டிருந்தார்கள். தர்மருக்கு மேல்மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது. கந்தசாமியோ வாய் விட்டுப் புலம்பினான்.

"யோவ் தலைபாரம் தாங்க முடியலைய்யா... கொஞ்சம் ஒக்காந்துட்டுப் போவோம்யா..."

— அவனே மிரண்டான். ரிவால்வரைத் திரும்ப நெற்றிக்கு நேரே நீட்டினான். தர்மரின் அடி வயிறு கலங்கிப் போயிருந்தது. சரிவில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் பதற்றம், பயம், கோபம் — என்ற கலவைகளோடு எடுத்து வைத்தார். புத்தி சுதாரிக்க வழியைத் தேடி அலுத்துக் கொண்டிருந்தபோது பளிச்சென்று தட்டுப்பட்டது அந்தப் பாம்புப் புற்று. அதன் துளைக்குள் இரையை விழுங்கிய ஒரு நாகம் புக மாட்டாமல் புக முனைந்து கொண்டிருந்தது.

தர்மர் விநாடி கூடத் தாமதிக்காமல் மனத்துக்குள் கோலப் பூவிழித் தாயை நினைத்துக் கொண்டு, போய் விருட்டென்று குனிந்து, அந்தப் பாம்பைப் பிடித்து மின்னல் வேகத்தில் அதை அந்த ரிவால்வர் முரடன் மேல் வீச, அவன் குலைநடுங்கிப்போய்த் துப்பாக்கியை நழுவ விட்டவனாய்த் தடுமாறிக் கீழே விழுந்தான்.

அவ்வளவுதான்... தர்மர் கோழிமேல் கவிழ்ந்த கூடையாக அவன்மேல் விழுந்து, தனது முரட்டுப் பலத்தைக் காட்ட ஆரம்பித்தார்.

கந்தசாமியும், மாயவனும் மூட்டைகளைச் 'சொதேர்' என்று நழுவவிட்டுவிட்டு வந்து தர்மருக்குத் துணை நின்றார்கள்.

"ஏண்டாலே... என் வெறக்கட்டை சைஸ் தேற மாட்டே நீ... துப்பாக்கி இருக்குன்னு முண்டாவா தட்டுனே என்கிட்ட...? கண்ணு ரெண்டையும் நோண்டி அத்த உன் துப்பாக்கியில போட்டு உன்னையே சுட்டுப்பிடு வேண்டா நானு...."

தர்மர் கருவும்போது அழகரசி கந்தசாமி நழுவவிட்ட மூட்டையை அண்டியிருந்தாள். கீழே விழுந்த அதிர்ச்சியில் முடிச்சுக்கள் அவிழ்ந்து கொள்ள மெத்தென்ற வைக்கோல் சுருளுக்குள் கோலப் பூவிழி அம்மனின் உருவம் ஒளிந்திருந்தது!

"அப்பா ஆத்தா விக்கிரகம் இதுல இருக்குது!" — என்று கத்திவிட்டாள் அழகரசி. ஓடிவந்த தர்மர் அதைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொண்டார். பயபக்தியோடு தொட்டு நிறுத்தினார். கந்தசாமியும், மாயவனும் அந்த முரடனை இறுகப் பிடித்திருந்தனர்.

இன்னொரு மூட்டையிலோ வேறு சில விக்கிரகங்கள்! "டேய் கந்தா, இங்க வாடா. தூக்குடா இந்த ஆத்தா சிலையை. திரும்ப ஏறுங்கடா மலை. இந்தச் சிலைத் திருடனை அங்க உள்ள போலீசுகிட்ட கொடுப்போம்! ஆத்தா... உன்னை மீட்கிற பாக்கியத்தை எங்களுக்குத் தந்தியே ஆத்தா... எங்களுக்குத் தந்தியே!" — வாய்விட்டுப் பக்திச் சிலிர்ப்புடன் அதில் ஒருவகை வீரம் கமகமக்கப் பேசினார் தர்மர்.

தர்மர் திரும்பவும் அந்த முரடனை வளைத்துப் பிடித்துக் கொள்ள, மாயவன் தலையில் ஒரு மூட்டையும், கந்தசாமியின் தலை மீது கோலப் பூவிழி அம்மன் உருவமும் ஏறிக் கொண்டன.


இந்த முறை கந்தசாமி வாயே திறக்கவில்லை. அவன் உறைந்து போயிருந்தான். அழகரசிக்கு எல்லாவற்றையும் பார்க்கப் பார்க்க உடம்பே சிலிர்த்துப் போயிருந்தது.

கந்தசாமியை நெருங்கி நடந்த அவன், "கந்தா, இவளைச் சுமக்கற சோலி உனக்கு இருக்கிறதுனாலதான் கொஞ்சம் முந்தி அப்பிடிப் பேசினியா? இல்ல ஆத்தா உன்னிய அப்பிடிப் பேச வெச்சாளா? எவ்வளவு சீக்கிரமா தன் சக்தியைக் காட்டி அசத்திட்டா பார்த்தியா நம்ம ஆத்தா?" — என்றான்.

கந்தசாமி பதில் பேசவில்லை. பக்திப் பரவசத்தில் பெருகிய கண்ணீர் சட்டையணிந்த மார்பை நனைக்க, அழுக்கும் தலை பாரத்தை ஓர் அதிர்ஷ்டமாய்க் கருதிக் கொண்டு உறுதியோடு நடந்தான்!

V.V.D

கற்பனை பல சிறகடிக்க
இளமை ஊஞ்சலாடும் அழகி.
அவள் நெஞ்சைக் கவர்ந்தவைப் பல.
மெல்லத் தவழ்ந்து செல்லும் நீரோடை.
செல்லமாக வீசும் தென்றல்.
உள்ளம் கவர்ந்த கட்டழகன்.
கொள்ளை அழகு மலர்கள்.
பளபளப்பான நீண்ட கூந்தல்
அக்கூந்தலுக்கு
வி.வி.டி.தேங்காய் எண்ணெய்...



VVD-1/86

வி.வி.டி. தேங்காய் எண்ணெய்
இயற்கைக் கூந்தலின் இளமை ரகசியம்

V.V.D

a :: பார் ஆப்பிள்

m :: பார் மர்டர்

3

இண்டர்வியூ ஹாலின் மேற்புறத்தில் சதுரமாய் ஒளிந்திருந்த ஸ்பீக்கர் கரகரத்தது. பிரபு மெலிதான குரலில் பேச ஆரம்பித்தார்.

''நேர்முகத் தேர்வுக்கு இந்த மழையையும் பொருட்படுத்தாமல் வந்துள்ள, உங்கள் அனைவரின் ஆர்வத்தையும்பாராட்டுகிறேன். ப்ளெண்டிங் செக்ஷனில் காலியாக உள்ள ஐந்து இடங்களுக்கு இந்தத்தேர்வு நடக்கிறது. உறவினர்களின் சிபாரிசுகளோ, அரசியல் வாதிகளின் சிபாரிசுக்கோ இந்த கம்பெனியில் இடம் இல்லை. ஆரோக்கியமும், சுறு சுறுப்பும், புத்திசாலித்தனமும் உள்ள பெண்களுக்கு நிச்சயமாக இந்தக் கம்பெனியில் இடம் உண்டு.

இப்போது நேர்முகத் தேர்வு ஆரம்பமாகிறது. லிஸ்ட்டில் உள்ள வரிசைப்படி முதன் முதலாய் மிஸ் அருணா டாட்டர் ஆஃப் சீத்தாபதி மெட்ராஸ்.... அறைக்கு வரும்படி கோருகிறேன்.

நாற்காலிகளின் முதல் வரிசையில் முதல் ஆளாய் உட்கார்ந்திருந்த அந்த அருணா சுடிதாரில் எழுந்து போனாள்.

கண்ணாடிக் கதவைத் திறந்துகொண்டு பிரபுவின் அறைக்குள் நுழைந்து, ''குட்மார்னிங்...'' சொல்லச் சொல்லவே கதவு சாத்திக் கொண்டது.

பிரபு தன் கண்களைக் கவ்வியிருந்த குளிர் கண்ணாடியைக் கழற்றி மேஜையின் மேல் போட்டபடி, புன்னகைத்து,பதிலுக்கு ''குட் மார்னிங்'' சொன்னார். நாற்காலியைக் காட்டி, ''உட்காருங்க மிஸ் அருணா'' என்றார்.

''பரவாயில்ல ஸார்..... நிக்கறேன்.....''

''நோ பார்மாலிடிஸ் ஹியர்.... நான் இன்னும் உங்களுக்கு பாஸ் ஆயிடலே. இது ஜஸ்ட் ஒரு இண்டர்வியூதான்..... ப்ளீஸ் உட்காருங்க.

அருணா கொஞ்சம் தயக்கத்தோடு உட்கார, பிரபுவின் கெட்ட பார்வை அவளுடைய மார்பின்மேல் புரண்டது.

''உங்க சர்டிபிகேட்ஸை நான் பார்க்கலாமா?''

அருணா தான் கையோடு கொண்டு போயிருந்த சின்னப் பையிலிருந்தும், கத்தை கத்தையாய்ச் சர்டிபிகேட்டுகளை உருவி அவரிடம் நீட்டினாள்.

பிரபு நுனி விரல்களால் அந்தச் சர்ட்டிபிகேட்டுகளைப் புரட்டி, சுவாரஸ்யம் காட்டுவது போல் பாவ்லா செய்தார்.

''குட்... சோஷியல் சர்வீஸ் லீக்ல நிறைய சர்ட்டிபிகேட்ஸ் எடுத்திருக்கீங்களே....''

''சி. எம்.கிட்டேயிருந்து மெடல்கூட வாங்கியிருக்கேன் ஸார்....

''சரிட்.... க்ராஜுவேஷனை எந்த காலேஜில முடிச்சீங்க?''

காலேஜின் பெயரைச் சொன்னாள் அருணா.

''பி.எஸ்.ஸி யில தேர்ட் கிளாஸ் எடுத்துத் தான் பாஸ் பண்ணியிருக்கீங்களே... ஏன்?''

''அந்தச் சமயத்துல எனக்கு ஃபீவர் ஸார்.

''உங்களுக்கு இப்ப என்ன ஏஜ்?''

''ட்வெண்ட்டி ஒன் ஸார்.''

''ஃபாதர் என்ன பண்றார்?''

''வீவிங் ஸ்பேர் பார்ட்ஸ் டீலர்....''

அருணா சொல்லச் சொல்ல, குளிர் கண்ணாடியை எடுத்துக்கண்களுக்குப் பொருத்திக் கொண்டு ரிவால்விங் சேரில் ஓர் அரைச் சுற்று சுற்றினார் பிரபு.

''மிஸ் அருணா.... இந்த கம்பெனியில வேலை செய்ய வர்றவங்க யாராயிருந்தாலும் சரி அவங்க ரொம்பவும் ஹைஜீனிக்கா இருக்கணும்னு எதிர்பார்ப்பேன். இங்கே இண்டர் வியூவுக்கு வர்றவங்க, மொதல்ல மெடிகல் செக்கப்புல தேறணும். நெக்ஸ்ட் ரூம் மெடிக்கல் செல். அங்கே டாக்டர் மிஸஸ் கமல வேணி இருப்பாங்க. போய் செக் பண்ணி, ரிப்போர்ட் வாங்கி, என்னோட பி.ஏ.கிட்டே கொடுத்துட்டுப்போங்க. இண்டர்வியூவோட ரிசல்ட்டை ரெண்டு நாள்ல உங்களுக்குத் தெரியப்படுத்தறோம்....''

அருணா ஆர்வமாய் எழுந்தாள்.

''மெடிக்கல் செல் எந்தப் பக்கம் ஸார்?''

''ரூமுக்குவெளியேபி.ஏ.நின்னுகிட்டிருப்பார். நீங்க வெளியே போனதும் அவரே

கூட்டிக்கிட்டுப் போவார். விஷ் யூ ஆல் த பெஸ்ட்.....''

''தேங்க்யூ ஸார்.''

அருணா அப்போதே வேலை கிடைத்துவிட்ட சந்தோஷத்தோடு வெளியே வந்தாள். காத்திருந்த சந்திரபோஸ் புன்னகையோடு அவளை மறித்து, 'ப்ளீஸ் கம் திஸ் சைட்' என்று சொல்லி அழைத்துப் போனான்.

அருணா அவனைத் தொடர்ந்தாள்.

''செக்கப் ரொம்ப நேரமாகுமா ஸார்?''

''நோ.... நோ.... ஒன்லி டென் மினிட்ஸ்... ஏதாவது கன்டேஜியஸ் டிஸீஸ் இருக்கான்னு பார்ப்பாங்க.... தட்ஸ் ஆல்....

ஹாலை அடுத்த. அடுத்த அறைக்கு வந்தார்கள்.

'Medical Cell' என்று எழுதப்பட்ட அட்டை கதவில் தொங்க சந்திரபோஸ் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே போனான்.

''டாக்டர் குட்மார்னிங்.... முதல் காண்டிடேட் வந்தாச்சு....'' சந்திரபோஸ் சொல்ல, தோளில் ஸ்டெத்தைப் போட்டபடி லெட்ஜர் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்த டாக்டர் கமலவேணி நிமிர்ந்தாள்.

டாக்டர் கமலவேணிக்கு முப்பதிலிருந்து முப்பத்தைந்துக்குள் ஏதேனும் ஒரு வயது இருக்கலாம். லேசாய் அம்மைத் தழும்பு முகம். புது மோஸ்தர் பிரேமில் கண்ணாடி போட்டு, நெற்றியில் நீளமாய்ச் சாந்துப் பொட்டு இட்டிருந்தாள். வெளிர்ப் பச்சை நிறப் புடவை கட்டி, மேலே வெள்ளைக்

ராஜேஷ்குமார்



ஜெயில் அதிகாரி: "உன்னை நேற்றே விடுதலை செய்திருக்கணும். தவறுதலாக் கணக்கிட்ட தால இன்னிக்கு விடுதலை பண்ற மாதிரி ஆயிட்டது."

திருடன்: "பரவாயில்லிங்க. அடுத்த தடவை வரும்போது அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம்."

— ஜெ. அ. கதிர்வேல்.

கோட்டைப் போட்டிருந்தாள். நெற்றியின் முன்னுச்சி முடியில் பித்த நரை தெரிந்தது.

அவளுடைய தலைக்கு மேல் இருந்த அந்த சீலிங் ஃபேன் 'க்ரீச்' என்ற சத்தத்தோடு சுழன்று கொண்டிருந்தது.

"டாக்டர் டென் மினிட்ஸ்ல செக்கப்பை முடிச்சுக்குங்க. காண்டிடேட்ஸ் நிறைய இருக்காங்க...." சந்திரபோஸ் சொல்லிவிட்டு வெளியேறினான்.

டாக்டர் கமலவேணி கதவைச் சாத்தித் தாழிட்டாள்.

"உம் பேரென்னம்மா....?"

"அருணா."

"இதுக்கு முன்னாடி நீ இங்கே இண்டர் வியூக்கு வந்திருக்கியா?"

"இல்லே டாக்டர்."

"அந்தப் பெஞ்சு மேலே ஏறி அப்படி படும்மா...."

அருணா ஏறிப் படுத்தாள்.

கமலவேணி அருணாவின் அருகே வந்து நின்று ஸ்டெத்தை மார்பு மேல் வைத்துப் பார்த்தாள். முதுகைப் புரட்டி ஸ்டெத்தை அங்கேயும்வைத்தாள். பிறகு அவள் காதருகே குனிந்து மெல்லிய குரலில் கேட்டாள்:

"ப்ளீஸ் ரிமூவ் யுவர் ட்ரஸ்...."

அருணா தயங்க டாக்டரம்மாள் சிரித்தாள். "டோண்ட் ஹெஸிடேட் அருணா. நான் உன்னோட மதர் மாதிரி... மெடிகல் ரிப்போர்ட்ல நீ 'ஆரோக்கியமானவ'ன்னு நான் கண்டிப்பா எழுதணும். இல்லேன்னா உன்னோட அப்ளிகேஷன் ரிஜக்ட் ஆயிடும்."

அருணா கொஞ்சம் வெட்கத்தோடு தன் சூடிதாரைக் கழற்ற ஆரம்பித்தாள். டாக்டர் கமலவேணி அருகே வந்து அவளுக்கு உதவி செய்தாள்.

அடுத்த நிமிஷத்தின் ஆரம்பத்தில் —

அருணா முழு உடம்பாய், உரித்த வாழைப் பழத்தின் நிறத்தில், பெஞ்சின் மேல் மல் லாந்திருந்தாள். டாக்டர் கமலவேணி அப்படியும் இப்படியுமாய், அவளைப் புரட்டிச் சோதிக்க ஆரம்பித்தாள்.

சுத்தமாய்ப் பத்து நிமிஷம்.

"போதும். எழுந்து டிரெஸ் பண்ணிக் கம்மா."

அருணா வெட்கத்தோடு எழுந்து சூடிதாருக்குள் புகுந்தபடி, டாக்டரிடம் கேட்டாள். "இப்பவாவது என்னோட ஆரோக்கியத்தை நம்பறீங்களா டாக்டர்?"

"நம்பறேன். உடம்பு சொல்லுதே."

ட்ரெஸ் பண்ணிக் கொண்டாள்.

"நீ போலாம்மா. இண்டர்வியூவோட ரிசல்ட் ரெண்டு நாள்ல உனக்கு வரும். விஷ் யூ ஆல் த பெஸ்ட்."

"தேங்க்யூ டாக்டர்" அருணா டிரெஸ்ஸைத் திருத்திக் கொண்டு வெளியே போனாள்.

அவள் வெளியே போனதும் —

டாக்டர் கமலவேணி எதிர்ப்புற காட் போர்ட் கதவருகே போய் 'டொக் டொக்' என்று தட்டினாள். சந்திரபோஸ் எட்டிப் பார்த்தான்.

"என்ன டாக்டர்?"

"காமிரா ஆங்கிள் சரியா இருக்கா?"

"சரியா இருக்கு டாக்டர்."

"பெஞ்சை வேணுமின்னா நகர்த்திப் போட்டுக்கட்டுமா?"

"வேண்டாம் டாக்டர். பெஞ்ச் அதே இடத்தில் இருக்கட்டும். வர்ற பொண்ணுக டிரெஸ்ஸைக் கழற்றும்போது நீங்க காமிராவை மறைக்கிற மாதிரி நிக்காதீங்க."

"சரி.... அடுத்த காண்டிடேட்டைச் சீக்கிரமா அனுப்புங்க."

"இதோ போய்க் கூட்டிகிட்டு வர்றேன்."

சந்திரபோஸ் பின்பக்கக் கதவு வழியாய், வெளியே போனான்.

மத்தியானம் ஒரு மணிக்குள், இண்டர் வியூவுக்கு வந்தவர்களில், பாதிப்பேர் கரைந்து போயிருக்க, யாமினி கம்பெனி காண்டீனில் எலுமிச்சை சாதத்தையும், தயிர்



ஈரானை ஆண்டு வந்த நௌஷர்வான் என்ற பாதுஷா வேட்டையாடு வதற்காகக் காட்டிற்குச் சென்றார். அவருடன் சென்ற சமையல்காரன் காட்டிற்குச் சென்ற பிறகு, "அரசே, சமையலுக்கு உப்பு இல்லையே" என்றான்.

"பக்கத்து ஊரில் சென்று விலை கொடுத்து வாங்கி வா. இல்லா விட்டால் ஊர் முழுவதும் பாழாகிவிடும்" என்றார் அரசர்.

"அரசே, ஒரு பிடி உப்பை விலை கொடுக்காமல் வாங்கினால் ஊர் முழுவதும் எப்படிப் பாழாகும்?" என்று கேட்டான் சமையல்காரன்.

"ஓர் அரசன் தன் குடிமக்களிடம் ஒரு பிடி உப்பை இனாமாக வாங்கினால் மறுநாள் அவன் கீழுள்ள அதிகாரிகள் அந்த ஊரையே விழுங்கி விடுவார்களே!" என்று கூறினார் பாதுஷா.

தகவல்: எஸ். முகம்மது யூசுப்.



திரு. பவித்ரனுக்கு வலது கால் கிடையாது. ஆயினும் என்ன? சைக்கிளில் உலகம் பூராவும் சுற்றியிருக்கிறார்! அப்போது ஒரு நாளைக்கு 600 கிலோ மீட்டர் ஓட்டியிருக்கிறார்! "அடுத்த வருஷம் ஒரு ஹெலிகாப்டரில் ஏறி நயாகரா நீர்வீழ்ச்சியில் குதிக்கப் போகிறேன்!'' என்கிறார் வீரச் செயல்களை லட்டு போல் கருதும் பவித்ரன். இவர் சைக்கிளில் சுற்றுப்பயணம் செய்த போது ஒரு காட்டில் பூலான்தேவியைச் சந்தித்தார். அவள் இவருக்கு 200 ரூபாய் கொடுத்தாளாம்! நடந்தது பூலான் தேவி சரணடைவதற்கு முன்பு!

'டெக்கான் ஹெரால்டி'லிருந்து. — அனிதா ராமச்சந்திரன்.

சாதத்தையும் சாப்பிட்டுவிட்டு, தன் அப்பாவின் ஆபீஸுக்கு போன் செய்தாள்

திருஞானம் லைனில் வந்தார்.

''என்னம்மா..... போன இண்டர்வியூ என்னாச்சு?''

''அப்பா, எனக்கு இன்னும் இண்டர்வியூவே நடக்கலே. மொத்தம் நூத்தி முப்பத்தேழு பேர் வந்திருக்கோம். கடைசி பேர் என்னோடதுதான். பாதிப் பேர் இண்டர்வியூ முடிஞ்சு போயிட்டாங்க. எனக்கு இண்டர்வியூ முடிய எப்படியும் நாலு மணியாயிடும். நான் நாலரை பஸ் பிடிச்சு எப்படியும் அஞ்சரை மணிக்குள்ள வீட்டுக்கு வந்துடறேன்.''

''என்னம்மா இது? அவ்வளவு நேரமாகுமா? நான் வேணுமின்னா அங்கே வரட்டுமாம்மா?''

''வேண்டாம்பா.... நீங்க வந்து இங்கே சிரமப்பட வேண்டாம். பல்லாவரம் பஸ் டெர்மினஸிலிருந்து கம்பெனி ரெண்டு கிலோ மீட்டர் தூரத்துல இருக்கு. நீங்க இந்த மழையில் பஸ்லவந்து சேர்றதுக்குள்ளே நானே அங்க வந்து சேர்ந்துடுவேன்.''

''கம்பெனி எப்படியம்மா இருக்கு?''

''பிரமாதமா இருக்கப்பா.... பெரிய கட்டிடம். அட்மாஸ்ஃபியரே நல்லா இருக்கு. இவங்க இண்டர்வியூ நடத்தற முறையும் ரொம்பவும் ஸ்மூத்தா இருக்கப்பா. அவங்க பங்க்சுவாலிட்டி, கம்பெனி ஹைஜீனிக்கா இருக்கணும்கிறதுல அவங்க காட்டற கண்டிப்பு, இதெல்லாம் வெள்ளைக்காரத்தனமா இருக்கு....''

''நீ என்னம்மா ஃபீல் பண்றே? வேலை கிடைச்சுடுமா?''

''மொத்தம் அஞ்சு போஸ்ட்டாம். கிடைக்கும்கிற நம்பிக்கை இருக்கப்பா. அப்புறம் இன்னொரு விஷயம்பா.''

''என்னம்மா?''

''நான் காலையிலே பஸ்ஸுக்கு நின்னுட்டிருந்தப்ப, உங்க வருங்கால மாப்பிள்ளை ஸ்கூட்டரை நிறுத்தி என் கூடப் பேசினார். வேலை கிடைச்சா சந்தோஷம். வேலை கிடைக்கலேன்னாலும் பரவாயில்லே. அடுத்த மாசம் கல்யாணம்னு சொன்னாரப்பா.''

''நிஜமாகவா?''

''ஆமாப்பா. சாயந்தரம் தரகர் நம்ம வீட்டுக்கு வருவாராம்.''

''இதுதாம்மா, எனக்கு உண்மையிலேயே சந்தோஷமான நியூஸ்....'' மறுமுனையில் திருஞானம் குரலிலேயே பரவசப்பட்டார்.

''நான் சாயந்தரம் வந்து முழு விவரத்தையும் சொல்றேம்பா.... கம்பெனியிலிருந்து ஃபோன் பண்ணிகிட்டிருக்கேன். லஞ்ச் அவர் முடிஞ்சு எல்லாரும் வந்திட்டிருக்காங்க. ஃபோனை வெச்சுடட்டுமா?''

''சரிம்மா. இண்டர்வியூ முடிஞ்சதுமே ஜாக்கிரதையா புறப்பட்டு வா. இங்கே சிட்டியில எக்கச்சக்கமான மழை. அங்கே எப்படிம்மா?''

''சுமாரா பெய்யுதுப்பா.''

ரிஸீவரை வைத்துவிட்டு, அருகே உட்கார்ந்திருந்த ரிசப்ஷனிஸ்ட்டுக்கு ஒரு நன்றியை உதிர்த்துவிட்டு, இண்டர்வியூ ஹாலை நோக்கி நடந்தாள் யாமினி.

சரியாய் இரண்டு மணிக்கு மறுபடியும் இண்டர்வியூவை ஆரம்பித்தார்கள். பவித்ரா, புனிதவதி, பத்மா, ராகினி, ராஜம், ரபீஸா.... வரிசையாய், ஒவ்வொருத்தியாய் உள்ளே போனார்கள். மெடிகல் செல்லிலிருந்து வரும் போது ஆடைகளைத் திருத்திக் கொண்டு வந்தார்கள். எப்படியும் வேலை கிடைத்து விடும் என்னும் நம்பிக்கையில், பெய்கிற மழையையும் பொருட்படுத்தாமல், நனைந்து கொண்டு சிரித்தபடியே போனார்கள்.

4.10 க்கு யாமினி அழைக்கப்பட்டாள்.

இண்டர்வியூ ஹால் பூராவும் வெறிச்சோடிப் போயிருக்க, யாமினியை ஒரு புன்னகையோடு சந்திரபோஸ் அழைத்துப் போனான்.

அதே விநாடி —

வெளியே மழை தீவிரமாகியிருந்தது.

(தொடரும்)

பாப்புலரான ஆக்ஷன் 'கடி' ஜோக்ஸ்!


இது 'லெட்' என்றால்...


...இது என்ன?


இது 'நீ...'


...இது என்ன?

இவர் மோகன் என்றால்... ....இவர் யார்?






இது மார்க்கெட்...


...இது ஓபன் மார்க்கெட்.



இது 'வே' ஆக இருந்தால்...



இது நம்ம பாஷு......



...இது என்னவாக இருக்கும்?



அப்ப, இது யார்...?



இது 'அப்'......




....இது என்ன?

சென்னையிலுள்ள கல்லூரி மாணவ மாணவிகளிடையே இன்று ரொம்பவும் பாபுலராய் இருக்கும் விளையாட்டு 'ஆக்ஷன் கடி ஜோக்ஸ்' தான். ''அது என்ன ஆக்ஷன் கடி ஜோக்ஸ்? புதிராக இருக்கிறதே!'' என்று வியக்கிறீர்களா? உண்மையில் அதுவும் ஒரு புதிர் விளையாட்டுத்தான். அதை இங்கே விளக்கமாகச் சொல்லித்தர முன் வந்திருக்கிறார் மீனாட்சி கல்லூரி மாணவியான சீதா.

உதாரணத்திற்கு ஒன்று: முதல் படத்தைப் பாருங்கள். அதில் இரண்டு கைகளையும் மூடிக் கொண்டிருக்கிறார் சீதா. அப்படி மூடிக் கொண்டிருந்தால் அதற்கு 'மார்க்கெட்' என்று அர்த்தம். அடுத்த படத்தில் இரண்டு கைகளையும் திறந்து கொண்டிருக்கிறார் அல்லவா! அதற்கு 'ஓபன் மார்க்கெட்' என்று பொருள். அதாவது மூடியிருப்பது 'மார்க்கெட்' என்றால் திறந்திருப்பது 'ஓபன் மார்க்கெட்' தானே! இதேபோல்தான் சீதா போடும் மற்ற புதிர்களும். இனி உங்கள் பாடு; அவர் பாடு! முடிந்தவர்கள் கண்டுபிடியுங்கள்; முடியாதவர்கள் பக்கங்களைப் புரட்டுங்கள்...

தொகுப்பு: சந்திரமௌலி

படங்கள்: யோகா.



ஒரு காதல் வாபஸ் ஆகிறது!

அடச்சே! முன்னால் போனால் கடிக்கும். பின்னால் வந்தால் உதைக்கும் என்பார்களே ஒரு பிராணி, அந்த ரகமா உங்கள் குடைகள்? குடையை வாங்கினோமா குடைச்சலை வாங்கினோமா? என்று கொதித்துக் கொண்டிருக்கிறேன்.

தெருமுக்குக் குடைக் கடைக்கு.

சென்ற வாரம் சனிக்கிழமை (எனக்கு அது சனியன் பிடித்த கிழமை) தங்கள் கடையில் நான் வாங்கிச் சென்ற குடையை (குடையா அது?) இந்தக் கடிதம் கொண்டு வரும்பையன்வசம் கொடுத்து அனுப்பியுள்ளேன். ஆவன செய்யவும்.

இங்ஙனம்,
மங்கை.

தெருக்கோடி திருமங்கைக்கு.

எத்தனை கோபம் வரும் உங்களுக்கு? ஆனந்தா அம்பரல்லா சென்ட்டர் என்று கம்பீரமாய்ப் போர்டு போட்டு வைத்தும், தெருமுக்குக் குடைக் கடை என்று தாங்கள் விளித்தபோதோ — விழித்தபோதோ எனக்கும் அத்தனை கோபம் வந்தது. ஆமாம். அது போகட்டும். பில்லுடன் குடையை அனுப்பியவர், அந்தப் பில்லின் கீழ்க் கொட்டை எழுத்தில் அச்சாகியிருக்கும் ஒரு வாக்கியத்தையும் படித்துப் பார்த்திருக்கலாம். அந்த வாக்கியமாவது: 'எக்காரணம் கொண்டும் விற்கப்



பட்ட பொருளை வாப்பீஸ் வாங்கப்பட மாட்டாது. நீங்கள் அனுப்பி வைத்த பையன் மூலமே குடையையும், பில்லையும் திருப்பி அனுப்புகிறேன்.

வருத்தத்துடன்,
ஆனந்தன்.

அவசரப்புத்தி ஆனந்தாவுக்கு,

உங்கள் கடையில் விற்கப்பட்ட பொருளை 'வாப்பீஸ்' வாங்க மாட்டீர்கள் என்பதை நானும் படித்தேன். (தலையில் கட்டிய பொருளை என்று போட்டிருந்தால் இன்னும் பொருத்தமாக இருக்கும்) நீங்கள் குடையை 'வாப்பீஸ்' ஒன்றும் வாங்க வேண்டாம். வந்த பையனைக் கொஞ்சம் பேசவிட்டிருந்தால் என்ன விஷயம் என்பதை உங்கள் ....மண்டைக்கு விளங்க வைத்திருப்பான்.

உங்கள் குடையினால் நான் பட்ட அவதியை ஒரு பாட்டம் அழுது தீர்க்கிறேன்.

பொத்தானை அழுத்திப் 'படக்'கென்று திறந்து காட்டி 'வெடுக்'கென்று என் தலையில் கட்டினீர்களே, அந்தக் குடையைப் பெருமையோடு எடுத்துக்கொண்டு ஞாயிற்றுக்கிழமை மாட்னி ஷோ ஒன்றுக்குப் போயிருந்தேன். திரும்பி வரும்போது லேசாகத் தூறிக் கொண்டிருந்த மழை பலமாகப் பிடித்துக் கொண்டது. எல்லோரும் தியேட்டர் வாசலில் ஒதுங்கியிருக்க நான் மட்டும் மழைக்குள் புகுந்து ஸ்டைலாகப் பொத்தானை அழுத்தினால் குடை திறக்க வேண்டுமே. பொத்தானை அழுத்தி அழுத்தி என் கட்டை விரல் குட்டை விரல் ஆகிவிட்டது. தியேட்டர் வாசலில் நின்றிருந்தவர்கள் என்னை வேடிக்கை பார்க்க, அழுகையே வந்துவிட்டது எனக்கு. மழையில் நனைந்ததில் ஜுரம் வந்து டாக்டர் செலவு வேறு தண்டம்! (குடையைப் போலவே)

நான் பையனிடம் குடையைக் கொடுத்து அனுப்பியது, அதன் சீர்கேட்டைச் சரி செய்யத்தானே தவிர, 'வாப்பீஸ்' செய்வதற்காக அல்ல.

கோபத்துடன்,
மங்கை.

அன்புமிக்க மங்கைக்கு,

நான் அவசரப்பட்டுவிட்டது உண்மை தான். மன்னிக்க. மன்னிக்க. மன்னிக்க.

குடையில் மைனர் ரிப்பேர்தான். (அதே சமயம் நான் ஒரு மேஜர் என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்). அரை நிமிடத்தில் சரி செய்து, கொண்டு வந்த பையனிடமே திருப்பி அனுப்பியுள்ளேன். இனி அந்தப் பொத்தானுக்கு நீங்கள் வைத்ததுதான் சட்டம். உங்கள் அழகிய கட்டை விரல் நுனி அதைத் தொட்டதுமே குடை சட்டெனத் திறந்து உங்கள் சேவைக்காகக் காத்து நிற்கும்.

உங்கள் சேவைக்காக,
ஆனந்தன்.

குறிப்பு: 'வாப்பீஸ்' என்ற வார்த்தையை, நீங்கள் அடிக்கொரு தரம் அழுத்திச் சொல்வதைப் பார்த்தால், என்னவோ அந்த வார்த்தையைக் கண்டுபிடித்தவன் நான்தான் என்கிற மாதிரி இடித்துக் கூறுகிறீர்களோ என்று சந்தேகமாக இருக்கிறது. பெரும்பாலான பிரஸ்காரர்கள் நாங்கள் சொல்லாமலே அப்படித்தான் பில் புக்கில் அச்சடித்துத் தருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

துணை குறிப்பு: அந்தப் பையன் உங்கள் தம்பிதானே? (குடை சம்பந்தப்பட்ட கேள்விகளைத் தவிர வேறு எதற்கும் விடை கிடையாது என்கிறானே)


இணைத் துணைக் குறிப்பு: அம்பரல்லா சென்ட்டர் ஆனந்தன் என்றாலே எல்லாருக்கும் பிடிக்கும். நீங்கள் அ. செ. ஆ. என்று சுருக்கமாய் அழைத்தால் போதும், எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

அ. செ. ஆ. க்கு,

'(மிதக்க வேண்டாம். அடச்சே! ஆனந்தா என்று அர்த்தம்.) முன்னால் போனால் கடிக்கும். பின்னால் வந்தால் உதைக்கும் என்பார்களே, ஒரு பிராணி, அந்த ரகமா உங்கள் குடைகள்? குடையை வாங்கினேமா, குடைச்சலை வாங்கினேமா. என்று கொதித்துக் கொண்டிருக்கிறேன். விவரத்தை வேண்டா வெறுப்பாய்ச் சொல்கிறேன், கேட்டுக் கொள்ளுங்கள்.

நேற்று மாலை ஆபீசிலிருந்து வீட்டுக்குப்

ஜீமு


VIP

புறப்படும்போது லேசாக மழை பெய்து கொண்டிருந்தது. முன் எச்சரிக்கையாக ஆபீஸ் வராந்தாவிலேயே குடையின் பொத்தானை அழுத்திப் பார்த்துக் கொண்டேன். (சூடு பட்ட பூனையாயிற்றே!) குடை என்னவோ அழகாய்த் திறந்து கொண்டது. திருப்தியோடு வந்து சேர்ந்தேன் பஸ் ஸ்டாப்புக்கு. அங்குதான் ஆரம்பித்தது சோதனை. பஸ் வந்து நின்றவுடன் க்யூவிலிருந்தவர்கள் ஒவ்வொருவராகக் குடையை மடக்கிக் கொண்டு பஸ்ஸில் ஏற, பஸ்ஸில் ஏறும் சமயம் பார்த்து மடங்குவேனா என்று கொஞ்சம் கூட இரக்கமே இல்லாமல் காலை வாரிவிட்டது உமது குடை. பின்னால் நின்றிருந்தவர்கள் முணுமுணுக்க, வேறு வழியில்லாமல் அவர்களுக்கு வழிவிட்டுக் கொண்டு குடையுடன் போராடிக் கொண்டிருந்தேன். பஸ்ஸும் போய்விட்டது. ஆனால் உம் குடைக்கு வந்த வாதம் மட்டும் போகவேயில்லை. அது மடங்கினால்தான் அடுத்த பஸ்ஸிலாவது ஏற வாய்ப்புண்டு என்ற நிலையில், இதுவரை வாழ்க்கையில் எவரையும் திட்டாத அளவுக்குத் திட்டிக் கொண்டே கொட்டும் மழையில் ஒரு கிலோ மீட்டர் நடந்தே வீடு வந்து சேர்ந்தேன். ''அம்பரல்லா சென்டராம். அம்பரல்லா சென்ட்டர். பேசாமல் 'அம்போ' சென்ட்டர் என்று மாற்றிக் கொள்ளும். அதுதான் பொருத்தமான பெயர்.

கொதிப்போடு,
மங்கை.

எச்சரிக்கை: குடை ரிப்பேருக்காக உம்மிடம் வருவது இதுவே கடைசித் தடவை. அடுத்த முறை என்னிடமிருந்து உமக்கு ஏதும் வருவதாக இருந்தால், அது என் மான நஷ்ட வழக்கு நோட்டீசாகத்தான் இருக்கும். கபர்தார்.

கு(எ)றிப்பு: அந்தப் பையன் என் தம்பியாக இருந்தால் என்ன, தாத்தாவாக இருந்தால் என்ன, குடைச்சல் வேலைகளை விட்டு விட்டுக் குடை வேலையை ஒழுங்காகப் பாரும்!

அய்யகோ மங்கையே,

என்ன கொடுமை இது? கொட்டும் மழையில் தாமரைப் பாதங்கள் நோக ஒரு கி.மீ. நடந்தே வந்தீர்களா? அடிப்பாவி! (ஆத்திரப்பட வேண்டாம். குடையைத்தான் திட்டினேன்) இவ்வளவு தூரம் நடக்கும் நீங்கள் ஒரு தரம் நேரடியாக என் கடைக்கு வந்து குடையின் சீர்கேட்டை விளக்கியிருந்தால் குடை ரிப்பேர் இத்தனை நாள் இழுத்தடித்திருக்காதோ என்னவோ? இதோ, என் திறமையை எல்லாம் தேக்கி, 'இனியொரு முறை குடையினுக்குக் குறை வந்ததெனில் கடையினை அழித்திடுவேன்' என்று துணிந்து கூறும் விதத்தில் சரி செய்து அனுப்பியுள்ளேன். ஹூம், இனிமேல் இந்தக் குடை அமர்க்களமாய்த் திறக்கும். அழகாய் மூடும். ஆனால் ஏக்கத்தால் மூடிக் கிடக்கும் என் இதயத்தைத் திறந்து வைக்க நீங்கள் ஒரு வழி



திருமண தினத்தன்று...

போட்டி: 39

உங்கள் குடும்பத்தில் நடந்த கல்யாணத்தின் போது அல்லது உங்கள் நண்பர் வீட்டுத் திருமணத்தின்போது நீங்கள் அனுபவித்த ஒரு வேடிக்கையான, துயரமான அல்லது விசித்திரமான ஒரு சம்பவம் பற்றி எழுதுங்கள். உங்கள் நண்பர் ராஜஸ்தானி அல்லது பஞ்சாபி போன்று வேறு மாநிலத்தவராக இருந்தால் அவர்களின் ஒரு விநோதச் சடங்கு பற்றி எழுதலாம். கீழே வெற்றிடத்தில் சுருக்கமாக எழுதி இந்த அரைப் பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்பவும். பிரசுரமானால் பரிசு, தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்கு வி.ஐ.பி. ஸூட்கேஸ். உறையின் மேல் ''திருமண தினத்தன்று.....'' என்று அவசியம் குறிப்பிடவும்.

முடிவு தேதி: 10.2.86.

இன்னும் 14 ஸூட்கேஸ்களே பாக்கி. பதினாறு வாய்ப்புக்களில் ஒன்றைக் கூடத் தவறவிடாதீர்கள்! வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறுங்கள்!

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

என் பெயர்: ....

விலாசம்: ....

....

எண்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் புதுமணத் தம்பதிகளாக கொள்ளுத்தாத்தாவும் பாட்டியும் எப்படி இருந்திருப்பார்கள் ?



கல்கத்தாவில் 1900ம் வருடம் போர்ன் & ஷெப்பர்ட் ஸ்டுடியோவில் எடுத்த இப்படத்தில் இருப்பவர்கள் டாக்டர் P.K. ரே அவரது மனைவியும்.


இன்றும் அத்தோற்றத்தைப் பசுமையாக நினைவுகூர வைப்பது பிளாக் & ஒயிட் படங்களே !

உங்கள் குடும்ப போட்டோ ஆல்பத்தைப்
புரட்டிப் பாருங்கள்!
பல்லாண்டுகளுக்கு முன் எடுத்த பிளாக் & ஒயிட்
படங்கள் இன்றும் கருக்கழியாமல்,
மங்காமல் இருப்பதைக் காண்பீர்கள்.
அதுவே பிளாக் & ஒயிட் படங்களின் சிறப்பு! அறுபது, எழுபது
ஏன் எண்பது வருடங்களானாலும் மங்காது.
சொல்லவும் வேண்டுமா?
காலத்தை வென்றிடும் பிளாக் & ஒயிட் படங்களே
உங்களது தேர்வாக இருக்க முடியும்.

அழியாத நினைவுகளுக்கு காலத்தால்
அழியாத பிளாக் & ஒயிட் படங்கள் !

INDU





இந்து
பிளாக் & ஒயிட்
ரோல் பிலிம்
மற்றும் ப்ரோமைடுகள்.

சொல்லக் கூடாதா?

ஏக்க ரூபனாக,
ஆனந்தன்.

பரிதாபகரமான ஆனந்தருக்கு — அவசர சரமாக,

ஓடுங்கள். ஓடுங்கள். உயிர் மேல் ஆசையிருந்தால் கடை, குடை, உடை, வயல், வரப்பு என்று பாராமல், பி.டி. உஷாவெல் லாம் பின்னால் என்று ஓடிக் கொண்டேயிருங்கள்.

இன்று காலை ஆபீஸில் 'இந்தக் குடை அத்தனை நம்பகரமானது அல்ல' என்று எவ் வளவோ எடுத்துச் சொல்லியும் கேளாது பிடிவாதமாய் எடுத்துச் சென்றார் என் கொலீக்—கம்காதலர். சற்று நேரத்திற்கு முன், காற்றுடன் அடித்த மழையில் நட்ட நடு ரோட்டில், குடைத் துணி மட்டும் தனியே பிரிந்து 'குட் பை' சொல்லிவிட்டுப் பறந்து விட, வெறும் கம்பியை மட்டும் கையில் பிடித்துக் கொண்டு, சிவந்த கண்களோடு என் அன்புக் காதலர் நின்றிருந்த கோரத்தை என் தம்பி ஓடி வந்து என்னிடம் அறிவித்த தால், இதை அவசரமாக எழுதி அனுப்பு கிறேன். என் காதலர் என்னிடம் வந்து விசா ரித்தால், குடையைப் பற்றியும் உங்களைப் பற்றியும் என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. (ஏனென்றால், நாங்கள் ஒருவருக் கொருவர் பொய் சொல்லுவதில்லை என்று சத்தியம் செய்து கொண்டவர்கள்).

ஒரு சமயம், ஐந்து நிமிடம் ஸ்லோவாக ஓடியது என்ற அற்பக் காரணத்திற்காக ஆபீஸ்கடிகாரத்தையேஉடைத்துநொறுக்கிய கோபக்காரர் அவர்.

அப்புறம் உங்கள் இஷ்டம். உங்கள் கஷ்டம்.

மனிதாபிமானத்தோடு,
மங்கை.

நங்கையே, தங்கையே,

ஏற்கெனவே காதல் வலையில் சிக்கிக் கொண்ட மங்கையா நீங்கள்?

ஹூம். கடைசியில் என் காதல் ஒரு குடைக் காதல்தானா? நாலாவது அட்டம்ட் டிலும் டைப்பிங் எக்ஸாமை நான் கோட்டை விட்டபோது; 'உனக்கு'ன்னே அட்டம்ப்ட் பொறந்திருக்கு. அட்டம்ப்டுக்குன்னே நீ பொறந் திருக்கே'ன்னு சாபம் கொடுத்தார் அப்பா. அது இந்தக் காதல் விஷயத்திலுமா பலிக் கணும். ஹூம் ஒரே வெறுப்பா இருக்கு. நான் எங்கேயும் தப்பி ஓடறதா இல்லே. யார் வேண்டுமானாலும் வரட்டும். அடிக்கட்டும். நொறுக்கட்டும். கொல்லட்டும். 'சாப்பாடு ரெடி' போர்டு மாதிரி கல்லாவிலேயே உட் கார்ந்திருப்பேன்.

எல்லாமே மாயை. அட்டம்ட்டைத் தவிர!

ஆனந்தம் இல்லாமல்,
ஆனந்தன்.

ஆனந்தருக்கு ஒரு நன்றி. அவரது குடைக்கு ஒரு நன்றி. அந்தக் குடையின் கம்பிக்கொரு நன்றி.



அவன்: "குடையைக் காணோம் என்று எப்போது தெரிய வந்தது?"

இவன்: "மழை நின்றவுடன் குடையை மடக்கலாம் என்று முயன்றபோது....!"

— பிரியா பாலு.

கண்களில் ஆக்ரோஷமும், கையில் ஒரு குடைக் கம்பியுமாக ஒருவர் பாய்ந்து வரு வதையே எதிர்பார்த்து இரண்டு நாட்களாக ஏக டென்ஷனில் இருந்தீர்களாக்கும். பாவம்.

காதலின் சின்னம் என்று யார் யாரோ எதையெதையோ வர்ணிப்பார்கள். எங்களைப் பொறுத்தவரை அந்தக் குடைக் கம்பிதான் காதல் சின்னம்.

முழிக்கிறீர்களா?

கொட்டும் மழையில் நட்ட நடுத் தெருவில் கையில் வெறும் குடைக் கம்பியுடன், கோபம் கொப்புளிக்க என் அன்புக் காதலர் நின்றிருந் தது உண்மைதான். அதே நேரத்தில் அந்த வழியே குடையுடன் வந்த என் அப்பா சேற்றில் வழுக்கி, கால் சுளுக்கி, நடக்க முடி யாமல் திண்டாடவும், எனக்கு நாயகனாக இருந்தாலும், ஒரே கல்லில் இரண்டு மாங் காய் அடிப்பதில் வில்லாளனான என் காதலர், உடனே என் அப்பாவின் கைத்தாங்கியாக அந்தக் கம்பியைத் தூக்கி எறிந்துவிட்டு, அவர் குடையிலேயே ஒண்டிக் கொண்டு அவரை ஆதரவாகப் பிடித்துக் கொண்டு வீடு கொண்டு வந்து சேர்த்தார்.

மொத்தத்தில், என் அப்பாவுடன் தன்னை எப்படி அறிமுகப்படுத்திக் கொள்வது என்று குழம்பிக் கொண்டிருந்த என் காதலருக்கு பாறை வெடித்தாலும், கூரை கிடைத்த மாதிரி, முதல் அறிமுகத்திலேயே முக்கனி யாக ஆக்கித் தந்துவிட்டது உங்கள் குடைக் கம்பி.

இனி அது எங்களுக்குத் தங்கக் கம்பி. இனி எங்கள் காதல் பயணம் அச்சம் இன்றி, தொடரும் வெற்றியை நம்பி.


எக்கச்சக்க நன்றிகளுடன்,
மங்கை.

ஒரு குடைக் கீழ் இணைந்திருக்கும் உண்மைக் காதலர்களுக்கு, நல்வாழ்த்துக்கள்.

உங்கள் காதலுக்கு (தெரிந்தோ, தெரி யாமலோ) உதவியதன் நினைவாக, இனி என் கடையின் பெயரையும் 'நல்வாழ்த்துக் குடை கள்' என்று மாற்றிக் கொள்கிறேன்.


என்றும் நல்வாழ்த்துடன்,
ஆனந்தன்.

"உபேந்திரா கடை கடையா
கடைசியில், நான்தான், தயங்காமே



திரு எம். சீனிவாஸ் மோகன்,
பி.காம்.,எல்.எல்.பி.,
வழக்கறிஞர், ஆந்திர பிரதேஷ் உயர்நீதி மன்றம,
20/3, ஆர்.டி. பர்க்கத்புரா
ஐதராபாத் 500 027.


திரு. பெண்டம் உபேந்திர ராவ்
5-6-779 4, ஹிமாயத் நகர்,
14வது தெரு, ஐதராபாத 500 029



CTS 605

CTS 919

கலர் டிவி வாங்குமுன் நீங்க, சாலிடெர் வச்சிருக்கும் நண்பரைக்



ஏறி இறங்கிட்டார்.
சாலிடெர் வாங்கச் சொன்னேன்.''

திரு எம். சீனிவாஸ் மோகன், ஆந்திர பிரதேஷ் உயர்நீதி மன்றத்தின் வழக்கறிஞர் கூறுகிறார்: "உபேந்திரா எனக்கு நெருங்கிய நண்பர் மட்டுமில்லே; கட்சிக்காரர்கூட. நாங்க அடிக்கடி சந்திச்சி, எத்தனையோ விஷயங்களை விவாதிக்கிறது உண்டு. ஒரு நாள் அவர், ஒரு கலர் டிவி வாங்கணும்னு சொன்னார். ஆனால் அவருக்கு ஒரே குழப்பம். குழப்பத்துக்கு காரணம் இல்லாமே இல்லே. உபேந்திரா பல ஷோ-ரூம்களுக்குப் போயி, பல பிராண்டுகளைப் பார்த்து, ஒப்பிட்டும் பார்த்திருக்கார். இந்த "ஆராய்ச்சி"யிலே ஒவ்வொரு பிராண்டு பத்தியும் சில விஷயங்கள் அவருக்கு தெரிஞ்சது. இம்மாதிரி கண்மூடித்தனமா கடை கடையா அலைஞ்சதுலே, ஒவ்வொரு டிவியின் தொழில்நுட்ப குறைபாடுகளையும் மற்ற விவரங்களையும் கண்டுபிடிச்சார். அந்த சமயத்துலே தான் நான் 'உங்க கண்டுபிடிப்புக்கு முடிவு கட்டுங்க; கடை கடையா போய் நேரத்தை வீணாக்காதீங்க'ன்னு எடுத்துச் சொன்னேன். ஏன்னு பிறத்தியார் அனுபவத்திலேருந்து கத்துக்கறதுலே எனக்கு நம்பிக்கை உண்டு. அதனாலேதான் நான் சொந்தத்துலே கலர் டிவி வாங்க நெனைச்சபோது, ஏற்கனவே கலர் டிவி வாங்கியிருக்கிற என் நண்பர்களின் அனுபவத்தைக் கேட்டேன். அவர்கள்லே ரொம்ப பேரு சாலிடெரைத்தான் வாங்கச் சொன்னாங்க. எனவே, சாலிடெர் வாங்கினேன். அநேகமாக ஒரு தொல்லையும் இல்லே. சின்னஞ்சிறு பிரச்னை இரண்டொரு சமயம் வந்தபோதுகூட, விற்பனைக்குப் பிந்திய சேவையை அருமையா செஞ்சாங்க. அதனாலேதான் உபேந்திராவையும் கொஞ்சம்கூடத் தயங்காமே சாலிடெர் வாங்கச் சொன்னேன். இன்னிக்கு உபேந்திரா சாலிடெர் வாங்கினதுக்காக ரொம்ப சந்தோஷப்படுறாரு; சரியான ஆலோசனை தந்ததுக்காக எனக்கு எப்போதும் நன்றி சொல்றாரு."

இது உண்மையான கதை. சாலிடெரின் சிறந்த தரத்திற்கு இதுவே சான்று. சாலிடெர் மட்டுமே மக்களிடையே இத்தகைய நன்மதிப்பைப் பெற்றுள்ளது. காரணம், அது அளிக்கும் தெளிவான படம், தத்ரூபமான வண்ண ஒளிபரப்பு மற்றும் தரமுயர்ந்த தொழில் நுட்பம். எனவே இன்று மேன்மேலும் அதிக மக்கள் இதை வாங்குகின்றனர். முதன் முதலில் வாங்குவோரும், மற்ற முன்னணி பிளாக் & ஒயிட் டிவி வைத்திருப்போரும் இதையே நாடுகின்றனர். இந்த சிறப்புகள்தான் சாலிடெர் கலர் டிவியின் உண்மையான பின் பலம். சாலிடெரையே நீங்கள் தேர்ந்தெடுப்பதற்கும் சான்று.

இதன் மற்ற சிறப்பம்சங்கள் — சாலிடெர், மேற்கு ஜெர்மனி தொழில் நுட்பத்தால் உருவானது. மேற்கு ஜெர்மனியின் ITT-யிலிருந்து வரும் பிழையற்ற உறுப்புகள் கொண்டது. அதோடு, நம் நாட்டின் கடுமையான பருவநிலைகளிலும் சிறப்பாக வேலை செய்ய உருவாக்கப்பட்டது.

தவிர, சாலிடெரில் VCR, வீடியோ விளையாட்டுகள் மற்றும் ஹோம் கம்ப்யூட்டர் கனெக்ஷன் முதலான வசதிகளும் உள்ளன. இவற்றுக்கெல்லாம் சிகரமாக, சாலிடெரின் விற்பனைக்குப் பிந்திய சேவை எல்லாப் பகுதிகளிலும் உண்டு.

Interads-DE-344

கேளுங்க.

Solidaire
ITT

கலர்
சாலிடெர்
-தொல்லையில்லாத் தொலைக்காட்சி

சித்தரஞ்சனி

26. மரக்கல அறை நாடகம்

சித்தரஞ்சனியின் இசையால் ஈர்க்கப்பட்ட இரு வீரர்கள் இரு பக்கமும் வர அவர்களுடன் சென்றகாஷ்டானன், தான் உண்மையில் படைத் தலைவனா அல்லது சிறைப் பறவையா என்பதை உணராமலே பயணம் செய்தான். இரு வீரர்களும் மலையின் மறு பக்கச் சரிவில் சிறிது தூரம் சென்றதும் அடர்த்தியான ஒரு காட்டுக்குள்ளே நுழைந்து அக்காட்டின் மத்தியிலிருந்த ஒரு பெரிய சதுக்கத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தச் சதுக்கத்தில் புரவிப் படைகளும், காலாட் படைகளும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுச் சதுக்கத்தை ஒட்டியிருந்த மரக்கூட்டங்களின் அடியில் தங்க வைக்கப்பட்டிருந்ததையும், அவ்வப்பொழுது புரவி வீரர்கள் வேகமாக வந்து வந்து தூரத்திலிருந்த மரக்குறிகள் மீது வேல்களை எறிந்து எறிந்து திரும்பிச் சென்றதையும், மரத் தண்டு மீது தாக்கி விழுந்துவிட்ட ஈட்டிகள் அவ்வவ்பொழுது அங்கிருந்த காலாட் படையினரால் அப்புறப்படுத்தப்பட்டதையும், இடையிடையே காலாட் படையினர் சதுக்கத்தில் நுழைந்து வாட்போர் புரிந்ததையும் கண்ட காஷ்டானன் அங்கு தங்கியிருந்தது மலைவாசிகள் கூட்டமல்லவென்பதையும் நன்றாகப் பயிற்சி பெற்ற படையே என்பதையும் புரிந்து கொண்டான். எங்கோ மறைவில் சாதவாகனன் படைகள் இருக்கின்றனவென்று நாகபாணன் சந்தேகித்தது எத்தனை சரியென்பதையும் எண்ணிப் பார்த்து இரண்டு தரப்புகளும் எந்த நேரத்திலும் கைகலக்கலாம் என்று தீர்மானித்துக் கொண்ட காஷ்டானன் "இந்தப் படைக்கு என்னை எதற்காகத் தலைவனாக நியமித்தார் கௌதமிபுத்ரர்?" என்றும் வினவிக் கொண்டான்.

இப்படி அவன் சிந்தனை வசப்பட்டு நிலைத்துச் சதுக்கத்தின் முகப்பில் நின்றுவிட்டதைக் கவனித்த வீரர்கள் இருவரில் ஒருவன் காஷ்டானனை நோக்கி "படைத் தலைவரே! தாங்கள் படைகளைப் பார்க்க ஆசைப்படுவீர்கள் என்று நினைக்கிறேன்" என்றான்.

"தாங்கள் அனுமதித்தால் படைகளின் அமைப்பையும் இப்பொழுதே பார்வையிடலாம்" என்று பணிவுடன் கூறினான் இன்னொரு வீரன்.

"இந்தப் படையில் எத்தனை புரவிப் படை? எத்தனை காலாட்படை? யானைப்படை ஏதாவது உண்டா?" என்று வினவினான் காஷ்டானன்.

"புரவிப் படை மூவாயிரம். காலாட் படை இரண்டாயிரம். யானைப் படை ஏதுமில்லை" என்று விளக்கினான் முதலில் பேசிய வீரன்.

காஷ்டானன் மேலும் விவரம் கேட்கத் துவங்கி, "காலாட் படையில், வில்லவர் எத்தனை பேர்? சாதாரணமாக வாளும் வேலும் தாங்கிப் போரிடுவோர் எத்தனை பேர்?" என்று வினவினான்.

"வில்லவர் ஐந்நூறு பேர்தான் இருக்கிறார்கள். மற்றவர் வாளும் வேலும் தாங்கிப் போரிடுபவர்கள். ஆனாலும் புயல் வேகத்தில் முன்னேறித் தாக்கக் கூடியவர்கள்" என்று இரண்டாவது வீரன் கூறினான்.

"மலைவாசிகள் என்ன ஆனார்கள்?" என்று காஷ்டானன் கேட்டான்.

"அவர்களில் சிலரை இந்தப் படையில் சேர்த்துப் பயிற்சி அளித்திருக்கிறோம். மீதி மக்களைச் சேர்க்கவில்லை. அவர்களை இந்த ரத்தக் கிளறியில் ஈடுபடுத்த மன்னருக்கு இஷ்டமில்லை" என்றான் முதல் வீரன்.

இப்படி விவரங்களைக் கேட்டுக்கொண்டே காஷ்டானன் அந்த இரு வீரர்களையும் முன்னால் செல்லவிட்டுத் தான் பின்னால் நடந்து படைகளைப் பார்வையிட்டான். ஆங்காங்கு சப்தித்த சின்னஞ்சிறு முரசுகள் மூலம் அவன் வரவு அறிவிக்கப்படவே படை வீரர்கள் அவனைத் தலை வணங்கி வரவேற்றனர். ஒவ்வொரு பிரிவினரிடமும் காஷ்டானன்தான் இனி தலைவன் என்பதை இரு வீரர்களும்



அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அந்த அறிமுகத்தை மறு வார்த்தை பேசாமல் படைப் பிரிவுகள் ஏற்றுக் கொண்டதைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்த காஷ்டானன் சாதவாகன வாலிபனுக்குத் தனது வீரர்கள் மீதிருக்கும் பிடிப்பைக் கண்டு பிரமித்தான்.

படைகளை கிட்டத்தட்ட ஒரு ஜாமம் பார்வையிட்டதும் காஷ்டானனை அவனது இருப்பிடத்திற்கு

வீரர்கள் இருவரும் அழைத்துச் சென்று ஒரு குடிசையைக் காட்டி "இதுதான் படைத் தலைவர் தங்கும் பாசறை" என்று கூறினர்கள். குடிசை ஓரளவு பெரிதாகவே இருந்ததையும், பெரிய புரவியொன்று பக்கத்திலிருந்த மரத்தில் கட்டியிருந்ததையும் காஷ்டானன் கவனித்தான். குடிசைக்குள் ஆயுதங்கள் பல இருந்ததையும், வாள், பரசு, பிண்டிபாலம் முதலிய ஆயுத வகைகள் குடிசைக்கு உள்ளே வரிசையாகச் சாத்தப்பட்டிருந்ததையும், ஒரு மூலையில் சிறு கயிற்றுக் கட்டில் இருந்ததையும் பார்த்த காஷ்டானன் "மாளிகையில் கூட இத்தனை சௌகரியங்கள் இருக்க முடியாது" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பிறகு குடிசையில் நுழைந்து தனது வாளைக் கச்சையிலிருந்து அவிழ்த்துக் கட்டிலில் வைத்துத் தானும் அமர்ந்தான். உடனடியாக எங்கிருந்தோ இரு பெண்மணிகள் வந்து அவனுக்கு உணவு பரிமாறினர்கள். அதற்குப் பிறகு, அவனிடம் உத்தரவு கேட்ட வீரர்களிடம் "நீங்கள் சென்று வாருங்கள். நமது தலைவி உத்தரவு ஏதாவது இடும் பட்சத்தில் எனக்கு வந்து சொல்லுங்கள்" என்று விடை கொடுத்து அனுப்பினன். பிறகு கட்டிலில் காலை நன்ருக நீட்டிப் படுத்துச் சிந்தனையில் இறங்கினன். அவன் எண்ணமெல்லாம் சித்தரஞ்சனியை நாடியே ஓடியது. தனக்கு மனைவியாக நிச்சயிக்கப்பட்ட சித்தரஞ்சனி இன்னெருத்தனுக்கு மனைவியாகி, அவள் கணவனே தனக்கு 'வேலை' தரும்படியான துர்பாக்கியத்தை எண்ணிப் பெருமூச்சு விட்டான். தான் கைப்பிடித்துத் தனது உத்தரவுப்படி நடக்க வேண்டிய சித்தரஞ்சனியை இன்னெருவன் கைப்பிடித்து அவளைத் தனக்குத் தலைவியாக நியமித்ததை நினைத்துப் பார்த்து, "இதைவிட வெட்கக் கேடு ஏதுமில்லை" என எண்ணித் துக்கம் கலந்த மந்தகாசமும் செய்தான். எப்படியும் தான் மாலையில் இளம்பிச் சாதவாகனன் சொன்னபடி புதிதாக வரும் மூன்று கப்பல்களைக் கவனிக்கக் கோவில் பக்கம் போக வேண்டிய அவசியத்தையும் நினைத்தான்.



இத்தகைய எண்ணங்களால் காலம் வெகு துரிதமாக ஓடவே மாலையும் நெருங்கி வந்தது. காஷ்டானனும் தனக்கென நிறுத்தப்பட்டிருந்த புரவிக்குச் சேணமிடச் சொல்லி, தன்னை அழைத்து வந்த வீரர்களில் ஒருவனை உடன்வரக் கட்டளையிட்டுப் பழையபடி மலையின் கடற்புற முகப்புக்குப் பயணமானன். அவனும் அந்த இன்னெரு வீரனும் தாபிலேசுவரர் கோவிலுக்கு வந்தபோது கோவிலில் பூஜை நடந்து கொண்டிருந்தது. சந்நிதிக்கெதிரே சித்தரஞ்சனி மண்டியிட்டு முகம் நிலத்தில் தொட ஈசுவரனை வணங்கிக் கொண்டிருந்தாள். "ஆபத்தை நோக்கிச் சென்றிருக்கிறார். அவர் நலமாக வந்து சேர உன் அனுக்கிரகமிருக்கட்டும்" என்று வாய் விட்டுப் பிரார்த்தித்தாள்.

காஷ்டானனும் ஈசுவரனுக்குத் தலை வணங்கி, "உங்கள் பிரார்த்தனை நிறைவேறும். கவலை வேண்டாம்" என்று ஆறுதல் சொன்னன்.

சித்தரஞ்சனி சரேலெனத் திரும்பினள் சினத்துடன். காஷ்டானனைப் பார்த்ததும், "நீயா?" என்று அலட்சியம் ஒலித்த குரலில் கேட்டாள்.

"ஆம் சித்தரஞ்சனி" என்றான் காஷ்டானன்.

"இங்கிருப்பவர்கள் என்னைத் தலைவி என்று அழைக்கிறார்கள்" என்று உஷ்ணத்துடன் சுட்டிக் காட்டினள் சித்தரஞ்சனி.

"தலைவியாரே!" என்று மிகுந்த மரியாதையுடன் அழைத்தான் காஷ்டானன்.

சித்தரஞ்சனியின் முகத்திலிருந்த சீற்றம் மறைந்து அதன் இடத்தை மந்தகாசம் ஆக்ரமித்துக் கொண்டது. "மகிழ்ச்சி படைத் தலைவரே!" என்ற சித்தரஞ்சனி, "இங்கு எதற்காக வந்தீர்?" என்று வினவினள்.

"நாகபாணனுக்கு மூன்று புது மரக்கலங்கள் இன்று வரக்கூடுமென்று தலைவர் சொன்னர். அவற்றைக் கண்காணிக்கும்படியும்

சாண்டில்யன்

அருள் வாக்கு



"எத்தனையோ வாழ்க்கைப் பிரச்னை எங்களுக்கு. ஆபீஸ் காரியம், வீட்டுக் காரியம் என்று அலைகிறோம், அவதிப்படுகிறோம். அது தெரியாமல் எங்கேயோ மடத்தில் உட்கார்ந்து கொண்டு 'அதைக் கத்துக்கோ, இதைக் கத்துக்கோ' என்று நீங்கள் உபதேசம் பண்ணினால் எப்படி?" என்று கேட்கலாம். மனமிருந்தால் எதையும் செய்துவிடலாம். இத்தனை வாழ்க்கைப் பிரச்னை இருந்தாலும் எத்தனை பொழுது அரட்டை, ந்யூஸ் பேப்பர், ஸினிமா, சீட்டுக் கட்டு இத்யாதியிலே போகிறது? இப்படி வீணாகப் போகிற காலத்தில் பாதி பொதுநலப் பணிகளுக்கு என்றும், பாதி ஏதாவது வித்யாப்யாஸத்துக்கு என்றும் வைத்துவிட்டால் போதும் — ஸமூகப் பணிகளும் நடந்துவிடும். நம்முடைய வித்யைகளும் ப்ரகாசம் பெற்றுவிடும், நாமும் ப்ரகாசம் பெற்றுவிடுவோம்.

வேலை வெட்டி, குடும்பத் தொல்லை என்று மன்றாடுபவர்களுக்கு 'டைவர்ஷன்' வேண்டாமா என்று கேட்கலாம். ஆசையோடு மனஸ் ஈடுபட்டு ஏதாவது ஒரு வித்யை அப்யஸிக்க ஆரம்பித்தீர்களானால் உங்களுக்கே தெரியும், இந்த அப்யாஸத்தை விடப் பெரிய 'டைவர்ஷன்' எதுவும் இல்லையென்று. களைத்துப் போன 'மனஸ'க்கு வேண்டிய உத்ஸாகத்தை இவையே (வித்யைகளே) ஊட்டிவிடும். அப்படியும் ஒரேயடியாக நீங்கள் 'டைவர்ஷன்' என்பதை விட்டுவிடும்படி சொல்லவில்லை. அதுவும் கொஞ்சம் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் நீங்களே ஆலோசித்துப் பார்த்து, "இப்படிப் பொழுதைவேஸ்ட் பண்ணுகிறோமே" என்று நினைக்கக் கூடியவைகளை விட்டுவிட்டு— இப்படி நிறைய அகப்படும் — அந்தப் பொழுதை இப்படியொரு **pursuit** ல் (தேட்டத்தில்) செலவிட்டால் போதும், ஏதாவதொரு ஸ்வதேச வித்யையில் ஈடுபட்டுத் தேர்ச்சி பெற்றுவிடலாம். நம் முன்னோர்கள் போன வழி அதுதான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

உத்தரவிட்டிருக்கிறார்" என்று அறிவித்தான் காஷ்டானன்.

"நல்லது. அப்படியே செய்யுங்கள். உதவி ஏதாவது தேவையாயிருந்தால் இதை ஊதுங்கள் மெதுவாக" என்று கூறித் தனது மடியிலிருந்த சின்னஞ்சிறு வெண் சங்கை எடுத்துக் கொடுத்தான். அதற்குப் பிறகு அங்கு நிற்கவில்லை சித்தரஞ்சனி. கோவில் படிகளில் இறங்கிக் காட்டுக்குள் மறைந்துவிட்டாள்.

அவள் பேச்சின் தோரணையையும் அவள் சென்ற மிடுக்கையும் கவனித்த காஷ்டானன் "க்ஷத்ரபரே! உமது வளர்ப்புப் பெண்ணை இப்பொழுது பார்த்தால் என்ன சொல்வீர்கள்?" என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்டான். 'பெண்ணை அடக்கத் தகப்பனுக்கு சக்தியில்லை. மாலை சூட வேண்டியவனும் அவளை கோட்டைவிட்டான். மாப்பிள்ளையாக வேண்டிய நான் மதம் மாறி எதிரியின் கையாளாக ஆகிவிட்டேன். கௌதமிபுத்ரன் இங்கு தலைகாட்டிய சில நாட்களுக்குள்ளாக எத்தனை திடீர் மாறுதல்கள்!' என்று எண்ணங்களை ஓட்டினான். பிறகு கோவிலிலிருந்து புரவியில் கிளம்பிக் கடற்கரைக்கு முன்பு பெரிதாக எழுந்திருந்த ஒரு பாறையின் மறைவில் புரவியை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கி மலைப் பாறையிலிருந்து கடலைக் கவனித்தான்.

நாகபாணன் மரக்கலம் தன்னந்தனியே நின்றிருந்தது கடலில். அதன் ஒற்றை விளக்கு வீசிய வெளிச்சத்தில் கோட்டையிலிருந்து அடிக்கடி படகுகள் வந்து போவதையும் அவற்றிலிருந்த வீரர்கள் சிலர் மரக்கலத்திலேயே தங்கிவிட்டதையும் பார்த்தான். கிட்டத்தட்ட நடுநிசி நெருங்கிய சமயத்தில் மூன்று புது மரக்கலங்கள் வடக்கிலிருந்து வருவதையும் அவை மகாக்ஷத்ரபர் மரக்கலத்திலிருந்து சிறிது எட்டவே நங்கூரம் பாய்ச்சி நின்றுவிட்டதையும் கவனித்தான். அந்தச் சமயத்தில் நாகபாணன் மரக்கலத்திலிருந்து இரண்டு பந்தங்கள் எழுந்து குறுக்கும் நெடுக்குமாக மும்முறை ஆடின. அதைக் கண்டதும் மூன்று மரக்கலங்களிலிருந்தும் ஒவ்வொரு படகு இறக்கப்பட்டுக் கரையை நோக்கி வந்து அதிலிருந்த சிலர் கரைக்கு வந்து சேர்ந்தனர். அவர்களில் ஆஜானுபாகுவான ஒரு மனிதன் மலைக்காட்டுக்குள் புகுந்தான். அங்கிருந்த ஒரு பெரிய பாறையில் ஏறி நின்று கைகளை ஆட்டினான். அடுத்த சில விநாடிகளில் அவன் மறைந்தான் காஷ்டானன் கண்களிலிருந்து. பிறகு கரைக்கருகே தோன்றிப் படகொன்றை எடுத்துக் கொண்டு நாகபாணன் மரக்கலத்தை நோக்கிச் சென்றான்.

இதுவரையில்தான் காஷ்டானன் கண்டது. அவன் காணாதது பெரும் நாடகம். அந்த நாடகம் நாகபாணன் மரக்கலத்தில் அவன் அறையில் நடந்துகொண்டிருந்தது. மரக்கலத்தின் அறையிலிருந்த சாளரத்தின் மூலம் புதிதாக வந்த மரக்கலங்களையும், அவற்றிலிருந்து கரைக்குச் சென்றவர்களையும் பார்த்த நாகபாணன் அறைக்குள்ளே யாரோ வந்த அரவம் கேட்டு, "உன்னுடன் எத்தனை வீரர்கள் வந்திருக்கிறார்கள்?" என்று வினவினான் தலையைத் திருப்பாமலே. கேள்விக்குப் பதிலேதும் வராமற் போகவே சினத்துடன் திரும்பியவன் முகத்தில் உணர்ச்சிகள் உறைந்து போயின. கௌதமிபுத்ரன் கதவை மூடி முதுகை அதில் சாய்த்த வண்ணம் புன்முறுவல் தவழ நின்றிருந்தான்.

(தொடரும்)

பண்டிகை தினத்தில்...

வாசகர்



இறைமுக்கு ஒரு சண்டை!

கடந்த தீபாவளிக்கும் முதல் நாள், மதுரை செல்வதற்காகத் திருவனந்தபுரத்தில் பஸ் ஏறினேன். பஸ் பலராமபுரம் வந்தபோது டிரைவருக்கும் கண்டக்டருக்கும் சண்டை வந்துவிட்டது. அதனால் கண்டக்டர் பஸ்ஸை விட்டே இறங்கிவிட்டார். காரணம் கேட்டபோது, பயணிகளிடம் தீபாவளி இறும் கேட்க வேண்டுமென்று டிரைவர் சொல்வதாகவும், கண்டக்டர் கூடாது என்று மறுப்பதாகவும், அதுதான் அவர்களின் சண்டைக்குக் காரணம் என்றும் தெரிந்தது. பிறகு ஒரு வழியாகச் சமாதானம் ஏற்பட்டு பஸ் புறப்பட்டாலும் அவர்களுக்கிடையிலான சண்டை மதுரைவரை நீடித்துக் கொண்டேதான் வந்தது. கடைசியில் வேறொரு பஸ் கண்டக்டர் வந்துதான் முழுமையாகச் சமாதானம் செய்து வைத்தார்.

— எம். பாலகிருஷ்ணன்,
ரெட்டியார்பட்டி.



தேடிவந்த ஆனந்தம்!

என் கணவரோடு ஜம்முவில் வசித்தபோது எங்களுக்குத் தலை தீபாவளி. பிறந்த வீட்டுக்குச் சென்று அதைக் கொண்டாட முடியவில்லையே என்ற வருத்தம் எனக்கு. மாலையில் கணவரோடு ஜம்மு பஜார் சென்றேன். அங்கு சேலத்திலிருந்து வந்த டூரிஸ்ட் பஸ் ஒன்று நிற்கவே விசாரித்தோம். வந்தவர்கள் அனைவரும் தீபாவளி கொண்டாடுவதற்காக ஜம்மு ரகுநாத் மந்திர் சென்றிருப்பதாக அறிந்து அங்கே சென்றால், என்ன ஆச்சர்யம்! என் பெரியப்பாவும், பெரியம்மாவும் அந்த டூரிஸ்ட் கூட்டத்தில் இருந்தனர். பெரியம்மா என்னைக் கட்டிப் பிடித்து உச்சி மோந்தார். பெரியப்பா என் தலைதீபாவளிக்காக அங்கேயே காஷ்மீர் பட்டுச் சேலையும், கணவருக்கு வேஷ்டி, சட்டையும் வாங்கிக் கொடுத்தார். பிறகென்ன, குதூகலம்தான்!

— நா. ஜெயகுமாரி, பார்வதிபுரம்.

கொடூரமான பிரார்த்தனை!

தர்மபுரி மாவட்டத்திலுள்ள தீர்த்தமலை என்று ஒரு புண்ணிய ஸ்தலம். அங்கே ஒவ்வொரு மாசி மாதமும் தேர்த் திருவிழா நடக்கும். தேர் இழுக்கும்போது அதன் சக்கரங்களுக்கு அடியில் உயிருள்ள ஆடுகளைக் கிடத்துகிறார்கள். சக்கரங்கள் ஆடுகளின் தலைகள் அல்லது வயிறுகளில் ஏறிச் செல்கின்றன. அப்போது அந்த வாயில்லா ஜீவன்கள் துடிதுடித்து இறக்கின்றன. சுவாமிக்குச் சிலரின் வேண்டுதல் அப்படியாம்! கருணைக் கடலான இறைவனா இப்படி உயிர்ப் பலிகளைக் கேட்பான்? இத்தனைக்கும் அரசின் மேற்பார்வையில் உள்ள கோயில் அது. தடுக்கத்தான் யாருமில்லை!

— எம். ராதாகிருஷ்ணன், வாணியம்பாடி.

சிலிர்க்க வைத்தான் மகன்!

சென்ற ஆண்டு தீபாவளியன்று அனைவரும் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியோடிருந்தபோது, என் இளைய மகன் ராஜு மட்டும் அழுக்குத் துணியோடு உட்கார்ந்திருந்தான். 'நீ மட்டும் ஏன் புதுத் துணி அணியவில்லை?' என்று நான் கோபமாகக் கேட்டபோது, அவன் அழாத குறையாக, 'நம்ம வீட்டு வேலைக்காரியின் பையன் ராமு கிழிந்த அழுக்கு நிக்கரோடு இங்கே வந்திருந்தான். பார்க்கவே பாவமாயிருந்தது. அதனால் என் துணிகளை அவனுக்குக் கொடுத்திட்டேன் அப்பா!' என்றான். நான் சிலிர்த்துப் போனேன். விளைவு? இந்தத் தீபாவளிக்கு வேலைக்காரியின் மகனுக்கும் சேர்த்துப் புதுத் துணி வாங்கினேன்!

— பேராசிரியர் டி. விஜயகுமார், வடக்கே விடு
(குமரி மாவட்டம்.)

ப்ளோப்ளாஸ்ட் வழங்கும் வி.ஐ.பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:



பங்கு

உங்களுக்கு மட்டும்தானா?

சென்ற தீபாவளி. சென்னை— தாடண்டர் *நகரில் உள்ள பொதுப்பணித்துறைஅரசுஊழி யர் குடியிருப்பு. ஒரு பக்கம் மறை மலை அடிகளார் பாலத்தைத் தொட்டுக் குடிசைகளை சூழ் கடித்த அடையாறு வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்து கொண்டிருந்தது. மறுபக்கம் சாக் கடைக் கால்வாயின் வெள்ளம் பயமுறுத்தலோடு நுழைந்து கொண்டிருந்தது. அடுப்படிக்குச் சென்றாலும் ஓட்டையான ஓடுகளின் வழியாக மழைநீர் ஒழுகிக் கொண்டிருந்தது. இந்நிலையில்எங்கேசமைப்பது? கங்கா ஸ்நானம் செய்வது? அடுப்படி ஒழுகுவதாகப் புகார் செய்தபோது, 'உங்கள் வீடு மட்டுமா? நானூறு வீடு களும்தானே ஒழுகிக் கொண்டிருக்கின்றன!' என்றார் செக்ஷன் ஆபீஸர். இது எப்படி?

— குமாரி ஆண்டாள் பிரியதர்சினி, சென்னை—15.

மகிழ வைத்த நவராத்திரி!

கடந்த நவராத்திரியின்போது எங்களூரில் நடந்த சகஸ்ர சண்டி ஹோமம்தான் என்னைப் பரவசப்படுத்தி யது! தினம்தோறும் பத்துப் பதினைந்து ஏழைக் குழந்தை களுக்குப் பாவாடை சட்டை, சுமங்கலிகளுக்குப் புடவை என்று எட்டு நாளும் வெகு அற்புதமாய் ஹோமம் நடந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட ஏழைக் குழந்தை களுக்குப் புது டிரஸ் கிடைத்ததை நினைத்து மகிழ்ச்சி யடைந்தேன்.

— திருமதி கமலா, சேலம்—16.

அட ஆண்டவனே!

எங்கள் வீட்டுக்கு அருகில் பரம ஏழைக் குடும்பம் ஒன்று இருந்தது. அக்குடும்பத்திலுள்ள ஏழு வயதுச் சிறுமி எப்போதும் கிழிந்த கவுனையே உடுத்திக் கொண் டிருப்பாள். இரக்கப்பட்டுப் புது கவுன் ஒன்று வாங்கிக் கொடுத்தேன். தீபாவளிக்குத் தர்மம் செய்த திருப்தி எனக்கு. மறுநாள் பார்த்தபோது, மறுபடியும் கிழிந்த கவுனையே உடுத்திக் கொண்டிருந்தாள். கேட்டபோது, முதல் நாள் குடிபோதையில் வந்த அவள் தந்தை கோபத்தில் அந்தப் புது கவுனைப் பிடுங்கி அடுப்பில் போட்டுவிட்டதாகச் சொன்னாள். ஆண்டவனே! இதற் கெல்லாம் என்றுதான் விடிவு காலம் என்று நெகிழ்ந்து போனேன்.

— ஆர். வி. புவனா, சென்னை—33.

மாட்டுக்கு நன்றி

ஒரு தீபாவளியன்று காலை எட்டு மணி இருக்கும். எங்கள் வீட்டருகே ஒரு பெண் வந்து கொண்டிருந்தாள். திடீரென்று யாரோ பட்டாசு வெடிக்க, அதில் மிரண்டு போன மாடு ஒன்று அந்தப் பெண்ணை விரட்ட, பயந்த அவள் ஓடி வந்து, புறப்பட்டுக் கொண்டிருந்த என் மீது மோத.... ஒரே அமர்க்களம்தான் போங்கள்! என் தங்கையின் பள்ளித் தோழியான அவள் இன்று என் மனைவி! எப்படி அந்தத் தீபாவளியை மறக்க முடியும்?

— ஜே. எல். அரவிந்தன், சேலம்—9.

துக்கமும் மகிழ்ச்சியும்!

என் சகோதரிக்குத் தலைதீபாவளி என்பதால் அனைவரும் சந்தோஷ மாகப் பட்டாசுகளை வெடித்துக் கொண்டிருந்தோம். என் தம்பியோ துருதுருவென்று வெடிக்காத வெடி களையெல்லாம் பொறுக்கி வந்து புஸ் வாணம் விடுவான். அப்படி அவன் விட்டுக் கொண்டிருந்தபோது திடீ ரென்று ஒரு நாய் 'லொள்' என்று அவனருகில் வந்து குரைக்க, அவன் பயந்து ஓடி வந்தான். அச்சமயம் பார்த்து அவன் புஸ்வாணத்திற்காகக் குவித்திருந்ததில் வெடிக்காமலிருந்த அணுகுண்டு வெடியொன்று வெடிக்க, அதில் அகப்பட்ட அந்த நாய் துடிதுடித்து இறந்தது. அந் நாயின் நிலை கண்டு வருந்தினாலும் தெய்வாதீனமாக என் தம்பி பிழைத் ததை எண்ணி மகிழ்ச்சியும் அடைந் தோம்.

— எஸ். ஜெயா சாந்தினி தேவி, மயிலாடுதுறை.



திருமதி. கமலா,
பிளாட் நெ. 1, ஸ்ரீராம் நகர்,
அழகாபுரம்,
சேலம்—636 016.



பரவசப்படுத்திய பாடல்கள்

சென்ற நவராத்திரியின்போது குஜராத்தில் தங்க நேரிட்டது. அந்த ஒன்பது நாட்களிலும் பெரியவர்களுடன் சிறு பெண்களும் உப்வாசமிருந்து இரவு துர்க்கை அம்மனை அலங்கரித்து, கோலாட்டம், கும்மிப் பாட்டுக்களோடு முக்கிய தெருக்களில் ஊர்வலமாக எடுத்துச் சென்றார்கள். அப்போது அந்தப் பெண்கள் மிக உருக்கமாகப் பாடும்போதெல்லாம் அவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிவதைக் கண்டு என் மனம் பரவசப்பட்டது. அதை என்னால் என்றும் மறக்க முடியாது.

— ராமகிருஷ்ணன், கம்பம்.

நினைத்தாலே கோபம் வருகிறது!

நவராத்திரியின்போது எங்கள் வீட்டில் நடந்த பூஜைக்கு அழைப்பதற்காகப் பக்கத்து வீடுகளுக்குச் சென்றிருந்தேன். அப்போது கொலு வைக்கப்பட்டிருந்த ஒரு வீட்டில், என்னையும், என்னைப் போல் சென்றிருந்தவர்களையும் பாடச் சொல்லிவிட்டு, அவர்கள் ஹாய்யாக டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதை நினைத்தால் இன்றும் எனக்குக் கோபம்தான் வருகிறது.

— எம். எஸ். வைஜெயந்தி, சென்னை—15.

எதிர்பாராமல் வந்த போஸ்ட்!

83 ஆம் ஆண்டு விநாயக சதுர்த்தி. பிரபல வார இதழ் ஒன்று நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றுச் சில நாட்களே ஆகியிருந்தன. திடீரென்று 'சார் போஸ்ட்' என்று உறையொன்று வீட்டுக்குள் வந்து விழுந்தது. அதனுள் ஒரு வாசகரின் பாராட்டுக் கடிதமும் அவருடைய தனிப்பட்ட அன்பளிப்பாக ஐம்பது ரூபாய்க்கான காசோலையும் இருந்தன. மகிழ்ச்சிக் கடலில் திளைத்தேன்.

— திருவரங்கம் இசைப்பித்தன்,
சென்னை—94.

அன்று விழுந்த இடி!

1966 ஆம் ஆண்டு நவம்பர் மாதம். டெல்லி குளிரில், டாக்டர்களெல்லாம் 'பிழைக்க மாட்டான்!' என்று என் மகனைக் கைவிட்டு விட்ட நிலையில், நானும் என் கணவரும் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தோம். அப்போது அவன் உடல் நிலையைத் தந்தி மூலம் அறிந்து விரைந்தோடி வந்த என் அண்ணாவைக் கண்டதும் அவன், "மாமா தீபாவளிக்கு எனக்கு என்ன டிரஸ்?" என்று கேட்டவுடன், அவரும் ஓடிச் சென்று ஜிப்பாவும், பைஜாமாவும் வாங்கி வந்தார். அவனால் அதை அணிய முடியவில்லை. தீபாவளிக்கு மூன்று நாள் முன்பு இறந்துவிட்டான். அந்தப் புது டிரஸ்ஸை அவன் சடலத்துக்குத்தான் போட்டோம். அந்த இடியைப் பத்தொன்பதாண்டுகளாகத் தாங்கிக் கொண்டுதான் இருக்கிறேன்.

— பாலாம்பிகா, செகந்திராபாத்—17.



எழுத்தாளர் உறங்குவதில்லை

ர. சு. நல்லபெருமாள்

26. நிழல் நிஜமாகிறது

சந்திரசூடனின் மனம் உற்சாகத்தில் ஆழ்ந்திருந்தது. ஏதோ ஒரு பெரிய தளையிலிருந்து விடுபட்டுச் சுதந்திரம் அடைந்துவிட்டதைப் போன்ற உற்சாகம்.

இவர் ராஜிநாமாச் செய்துவிட்டதை அறிந்ததும் நான்கு பிரபல பத்திரிகைகளிலிருந்து அவரைத் தேடி வந்துவிட்டார்கள். அவற்றில் இரண்டு பத்திரிகைகளின் அதிபர்கள், பத்திரிகைகளின் ஆசிரியர் பொறுப்பையே முழுமையாக ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். அவருக்குப் பிடித்தமான ஒரு பத்திரிகையை அவர் தேர்ந்தெடுக்க வேண்டும். அவரைத் தேடி வந்தவர்களிடம் சொன்னது, 'என்னுடைய எழுத்துச் சுதந்திரத்தில் தலையிடக் கூடாது' என்பதுதான். அதற்கு எல்லாரும் சம்மதித்துத் தலையாட்டினர்.

தேடி வந்த நான்கு பத்திரிகைகளில் ஒன்றைப் பார்வதிக்குப் பிடிக்கவில்லை. இன்னொன்றை பரணிக்குப் பிடிக்கவில்லை.

ஒருபத்திரிகையைக்குறிப்பிட்டுப்பார்வதி சொன்னாள். ''சீச்சீ, இந்தப் பத்திரிகையா? வேண்டவே வேண்டாம்.''

''அத்தனை பத்திரிகைகளிலும் இதில்தான் சம்பளம் அதிகம். தலைமை ஆசிரியர் பொறுப்பையே தருகிறார்கள்.''


''மாதம் பதினாயிரம் கொடுத்தாலும் உங்களுக்கு இந்தப் பத்திரிகை வேண்டாம். இதுவரை இந்தப் பத்திரிகையில் எழுதி நீங்கள் கறைபடவில்லை'' என்றாள் பார்வதி.

''புகழ் பெற்ற எழுத்தாளர்களெல்லாரும் இதில் எழுதுகிறார்கள்.''

''நீங்கள் மற்றொரு பத்திரிகை..... போனால் உங்கள் எழுத்து கிழடுதட்டிவிடும்!'' என்றான் பரணி.

இவர்கள் இருவரும் மறுத்தவை போக எஞ்சியிருப்பவை இரண்டு பத்திரிகைகள் தாம். அவற்றில் எதைத் தேர்ந்தெடுப்பது? இவர்கள் இருவரும் தரமான வாசகர்களின் பிரதிநிதிகள்தாம். ஒரு நல்ல பத்திரிகைக்காக எவ்வளவு ஏங்கிப் போயிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இவர்களைப் போல் லட்சக் கணக்கில் வாசகர்கள் இலக்கியச் சோகை பிடித்துக் கிடக்கும் நிலையை எண்ணிப் பார்த்த போது சந்திரசூடனின் மனம் வேதனையடைந்தது.

'நிழல்' பத்திரிகையின் நினைவு வந்தது. சொந்தமாகப் பத்திரிகை நடத்த வேண்டும் என்ற ஆசை, வெறும் பகற் கனவாகவே இருப்பதை எண்ணினார். அவருடைய வாழ்க்கையில் இப்படி எத்தனையோ ஆசை



கள் பகற் கனவுகளாகவே முடிந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் நினைந்து மனத்தை அலட்டிக் கொள்வதில்லை.

இப்போதும் எதைப் பற்றியும் மனத்தை அலட்டிக் கொள்ளாமல் உற்சாகத்துடன் சைக்கிளில் தெருவில் சுற்றிக் கொண்டிருந்தார். அன்று பகல் முழுவதும் எங்கெல்லாமோ சுற்றிப் பல நண்பர்களைச் சந்தித்து அளவளாவிவிட்டு வீடு திரும்பியபோது இரவு பத்து மணிக்கு மேல் ஆகிவிட்டது.

உள் முற்றத்துத் திண்ணையில் ராதா அமர்ந்திருந்தாள். இன்னும் அவளுடைய கணவர் கோபால் வரவில்லை. எதிர்த் திண்ணையில் பரணி படித்துக் கொண்டிருந்தான்.

''என்ன பீஷ்மாச்சாரி, இன்னும் தூங்கவில்லையா?'' என்று கேட்டுக் கொண்டே சந்திரசூடன் மாடிப்படியில் ஏறினார்.

''இன்னும்மாமாவரவில்லையே'' என்றான் பரணி.

''உனக்குத் தூக்கம் வந்தால் தூங்கு. அவருக்காகக் காத்திருக்க வேண்டாம்'' என்றாள் ராதா.

''தூங்கிவிட்டால் பிறகு மாமா வரும்போது எழுப்புவீர்கள். இன்று அவர் எப்படி வருகிறாரோ? நார்மலாக வந்தால்- சரி'' என்றான் பரணி.

சந்திரசூடன் சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டுக் கட்டிலில் அமர்ந்தபடி வெற்றிலைச் செல்லத்தை எடுத்தபோது கீழே ஏதோ பரபரப்புத் தோன்றவே எழுந்து ஜன்னல் வழியாகப் பார்த்தார்.

வாசலில் ஆட்டோ ரிக்ஷாவிலிருந்து கோபாலை ராதாவும், பரணியும் இறக்கிக் கொண்டிருந்தார்கள். ரிக்ஷாக்காரனும் சேர்த்துத்தூக்கினான். சந்திரசூடன் விரைந்து கீழே வந்தார். கோபாலின் கனத்த உடலை மூவரும் தூக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தார்கள். சந்திரசூடனும் சேர்ந்து கோபாலைத்தூக்கினார். நால்வருமாக அவரை வீட்டினுள் கொண்டு சென்று முன் பக்கத்து அறையில் கிடந்த கட்டிலில் படுக்க வைத்தார்கள்.

''இன்னிக்கு ரொம்பக் குடிச்சுட்டாருங்க. அதான் இப்படி வழியிலேயே மயங்கிட்டாரு'' என்றவாறே ரிக்ஷாக்காரன் வெளியேறினான். கோபால் கட்டிலில், மல்லாந்து கிடந்தார். வாய் வழியாக மூச்சு போய்க்



கொண்டிருந்தது. வாய் திறந்து கிடந்தது பார்க்க அருவருப்பாயிருந்தது. ஏதோ ஒரு மெல்லிய துணியை எடுத்து முகத்தை ராதா மூடினாள். அவளுடைய முகத்தில் எவ்வித உணர்வும் இல்லை.

சந்திரசூடன் அவளை உற்றுக் கவனித்தார். அவளுடைய கண்களில் தெரிவது, வெறுப்பா, கோபமா, வருத்தமா? எதையும் அனுமானிக்க முடியவில்லை. தினமும் பட்டுப் பட்டுத் தேறிப் போய்விட்டாள். வருத்தமோ கோபமோ அடைந்து என்ன பயன் என்னும் விரக்தி!

சந்திரசூடன் ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டவாறே வெளியே வந்தார். மாடியில் தம்மு

டைய அறைக்கு வந்து, ஒருமுறை வெற்றிலை போட்டுக் கொண்டார். உறக்கம் வரவில்லை. ராதாவின் நினைவு குமைந்து கொண்டேயிருந்தது. வெகு நேரம் கட்டிலில் புரண்டு கொண்டிருந்தார். கீழே ராதாவின் வீட்டில் கடிகாரம் பன்னிரண்டு அடித்தது கேட்டது. கோபால் வாய்பிளந்தவாறு கட்டிலில் கிடந்த நினைவு வந்தது. மனத்தில் இனம் புரியாத பரபரப்புத் தோன்றியது. ஒருமுறை கீழே சென்று பார்த்து வரலாம் என்று எழுந்தார். மேஜை மீதிருந்த டார்ச் விளக்கை எடுத்துக் கொண்டு படியிறங்கினார். முற்றத்தில் விளக்கு இல்லை. திண்ணையில் பரணியின் மேஜை விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. ஆனால் பரணியைக் காணவில்லை. மேஜையை நெருங்கிப் பார்த்தார். மேஜை மீது விவேகானந்தரின் 'ராஜயோக விளக்கம்' என்னும் நூல் விரிந்து கிடந்தது. பாத்ரூம் போயிருப்பான் என்று எண்ணியபடியே நடந்தார்.

பார்வதியின் வீட்டுக்குள் விளக்கொளி இல்லை. தூங்கியிருப்பாள். சந்திரசூடன் டார்ச் விளக்கை ஏந்தியபடியே ராதாவின் வீட்டை நெருங்கினார். கோபால் படுத்திருந்த முன்னறையில் வெளிச்சம் இல்லை. கீழ்ப் பக்கத்து அறையில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வாசற் கதவு தாழிடப்படாமல் சற்று திறந்தவாறு இருந்தது.

வாசலைத் தாழிடாமல் என்ன செய்கிறாள் என்று எண்ணியபடியே சந்திரசூடன் கதவைத் திறந்து கொண்டு வீட்டினுள் சென்று கோபாலின் கட்டிலை நெருங்கினார். ஒருமுறை சுற்றும் முற்றும் பார்த்தார். உள்ளே எந்த அரவமும் இல்லை. ராதா எங்கேயிருக்கிறாள் என்று தெரியவில்லை. படுக்கை அறையில் ஒருவேளை தூங்கிப் போய்விட்டாளோ? விளக்கை ஏற்றிக் கோபாலைப் பார்த்தார். முகத்தைத் துணியால் மூடியபடி கோபால் படுத்திருந்தார். மெல்லத் துணியை விலக்கிப் பார்த்தார். திடீரென்று சந்திரசூடனுக்குச் சந்தேகம் தோன்றியது. டார்ச் விளக்கைக்கட்டிலின் விளிம்பில்வைத்துவிட்டுக்கோபாலின் மூக்கருகே கையை வைத்துப் பார்த்தார். அதிர்ந்துவிட்டார். பரபரப்படைந்தவராய் நெஞ்சில் கைவைத்துப் பார்த்தார். இருதயம் நின்றிருந்தது. டார்ச் விளக்கை முகத்தில் காட்டினார். கோபாலின் கண்கள் திறந்தபடியிருந்தன.

சந்திரசூடன் பதறிப் போய்த் திரும்பினார். வீட்டினுள் யாருமில்லை. ராதா எங்கே? இந்த விஷயம் தெரியாமல் தூங்குகிறாளா?

சந்திரசூடன் பாய்ந்து, அடுத்திருந்த படுக்கை அறையை நெருங்கினார். அப்போது உள்ளிருந்து ஏதோ மெல்லிய ஒலி கேட்டது. திகைப்புற்று வாசலில் நின்றவாறே உள்ளே பார்த்தார்.

அடுத்திருந்த அறையில் எரிந்து கொண்டிருந்த விளக்கொளி ஜன்னல் வழியாகப் படுக்கையறையிலும் மங்கலாக விழுந்து கொண்டிருந்தது. சந்திரசூடன் பார்வையை அறைக்குள் சுழற்றினார்.

அவருடைய பார்வை, கட்டிலை அடைந்ததும், நிலை குத்தி நின்றது. ஒருகணம் அவருடைய அறிவே ஸ்தம்பித்துப் போய்ச் செயலற்று விட்டது. சிலையாக நின்றுவிட்டார்.

ஓ.....! கட்டிலில் அவர் கண்ட காட்சி....!

மங்கிய ஒளியில் அடையாளம் தெரியவில்லையென்றாலும், கட்டிலில் அணைத்தபடி கிடந்த இரண்டு உடல்கள் யாருடையவை என்பதைப் புரிந்து கொண்டார்.

புரிந்து கொண்டதும் அவருள் ஏற்பட்ட அதிர்ச்சி அவரை நடுங்க வைத்துவிட்டது. சில விநாடிகள் கட்டிலை வெறிக்கப் பார்த்தபடியே நின்றார்.

சட்டென்று அடுத்த அறையில் கோபாலின் உடல்கிடப்பது நினைவில்வந்தது. திடீரென்று கட்டுக்கடங்காமல் கோபம் அவருள்ளே கிளர்ந்தெழவே 'ஓ'வென்று இரைந்து கூவி கட்டிலை நோக்கிப் பாய வேண்டுமென்னும் ஆத்திரம் தோன்றியது. ஆனால் சட்டென்று அடங்கிவிட்டார்.

அந்தப் படுக்கையறையில் சூழ்ந்திருந்த சாந்தியும், அமைதியும் அவருள்ளே கொதித்து எழுந்த கோபத்தைக் குளிர வைத்துவிட்டன.

ஓ....! பக்கத்து அறையில் ஒரு உயிர் உடலை விட்டுப் பிரிகிறது. இந்த அறையில் ஒரு உயிர் இன்னொன்றோடு சேர்கிறது.....!

சந்திரசூடன் படுக்கை அறைவாசலைவிட்டு ஓசைப்படாமல் விலகி, கோபாலின் உடல் கிடந்த அறைக்குள் வந்தார். கட்டிலில் கிடந்த டார்ச் விளக்கை ஏற்றி ஒருமுறை கோபாலின் முகத்தைப் பார்த்தார். பிறகு துணியை எடுத்து அவருடைய முகத்தை மூடிவிட்டு மெல்ல ஓசைப்படுத்தாமல் வாசலுக்கு வந்தார். கதவைப் பொருந்தச் சாத்தினார். சில விநாடிகள் திகைப்பு நீங்காதவராய் அங்கேயே நின்றார்.

சிறிது நேரம் கழித்துச் சந்திரசூடன் அறைக்குள் வந்து கட்டிலில் விழுந்தார். மனம் மிகவும் குழம்பிப் போயிருந்தது. இரவு முழுவதும் உறங்காமலேயே படுத்துக் கிடந்தார். எந்தச் சமயத்திலும் ராதாவின் அழுகை ஓலம் கேட்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவர் எதிர்பார்த்த ஓலம், விடிந்த பிறகுதான் கேட்டது.



''நாம தயாரிக்கப் போற இந்தப் படம் நிச்சயம் அவார்டு வாங்கற மாதிரி அமையணும். படத்துக்கு என்ன பேர் வைக்கலாம்?''

''பகற் கனவு.''

— நடேஷ் ஷா.

1986 ஒவ்வொரு மாதமும் ஒரு புதிய டிசைன்!

1986-ல் ஒவ்வொரு மாதமும் சாரதாஸ் முகூர்த்தப் பட்டுச் சேலைகளை வெவ்வேறு புதுவிதமான டிசைன்களிலும், கண்ணைக் கவரும் வண்ணங்களிலும் தனிச் சிறப்புடன் உற்பத்தி செய்து விற்பனை செய்ய உறுதி பூண்டுள்ளது. தை மாத புது டிசைன் முகூர்த்தப்பட்டுச் சேலைகள் இப்பொழுது விற்பனைக்கு வந்து விட்டது.



குறிப்பு   மாற்றம்! திடீர் மாற்றம்!!
விலைகளில் பெரும் மாற்றம்!!!
முகூர்த்தப்பட்டு மற்றும் எல்லா
ஜவுளிகளையும்
மிகக் குறைந்த லாபத்திற்கு விலை நிர்ணயம்
செய்து பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறோம்.

*தரமான சிறந்த பட்டுப்புடவைகளை இவ்வளவு குறைந்த விலையில் சாரதாஸ் மட்டுமே அளிக்க முடியும்.

சாரதாஸ்

(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177

N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077



"அதோ போறவர் எதையும் தீர யோசித்து தான் செய்வார்."

"அப்படியா?"

"இன்னும் தன்னோட மூணு வயசுப் பையனுக்குப் பேர் வைக்கலேன்னுப் பார்த்துக் கோயேன்."

— கிழை. அ. கதிர்வேல்.

சந்திரசூடன் மிகவும் மனம் குழம்பிப் போயிருந்தார். கோபாலனின் அந்திமக் கிரியை முடிந்த மறுநாளிலிருந்து பரணியைக் காணவில்லை. யாரிடமும் சொல்லாமல் எங்கோ போய்விட்டான். அவன் எழுதி வைத்துவிட்டுப்போயிருந்தகடிதத்தில்அவன் எங்கே போயிருக்கிறான் என்ற தகவலும் இல்லை. சந்திரசூடனுக்குத்தான் எழுதியிருந்தான். எழுதிய கடிதத்தை, 'ஆண்மையும் பிரும்மச்சரியமும்' என்னும் புத்தகத்தில் வைத்துவிட்டுச் சென்றிருந்தான். அவன் எழுதியிருந்தான் —

சந்திரசூடன் சாருக்கு,

"நான் பிராயச்சித்தம் செய்யப் போகிறேன். என்னைத் தேட வேண்டாம். பெரிய பாபத்திற்கு ஆளாகிவிட்டேன். இந்தப் பாபத்திற்கு எப்படி ஆளானேன் என்பது எனக்கே புரியவில்லை. ஏதோ ஒரு மயக்க நிலையில் நான் தவறிழைத்துவிட்டேன்."

கடிதத்தைப் படித்த சந்திரசூடனுக்கு மிகுந்த இரக்கம் தோன்றியது. அன்று இரவு நடைபெற்ற சம்பவம் நினைவில் வந்தது. அந்தச் சம்பவந்தான் பரணியைப் பெரிதும் பாதித்துவிட்டது. அவனுடைய விரதம் பங்கமாகிவிட்டதை உணர்ந்ததுமே பேரதிர்ச்சிக்கு உள்ளாகியிருந்திருப்பான்.

பாவம், அவனுடைய தந்தையைப் பார்க்கத்தான் மிகவும் பரிதாபமாக இருந்தது. ஒரே மகன். அவனை நினைத்துப் புலம்பிக் கொண்டிருந்தார். சந்திரசூடன் அவருக்கு ஆறுதல் சொன்னார்.

"அவனைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். பரணி நல்ல அறிவாளி. ஏதோ அவனுக்கு மன அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தைரியமாயிருங்கள். எங்காவது ஆசிரமங்களை நோக்கிப் போயிருப்பான். நான் எப்படியும் அவனைத் தேடி அழைத்து வருகிறேன்" என்றார்.

கோபால் இறந்த மூன்றாம் நாள், சந்திரசூடன் மாடியில் இருந்தார். ராதா அவரைப் பார்க்க மாடிக்குச் சென்றாள்.

அவளைக் கண்டதும் அவருடைய கண்கள் கலங்கின. வெளிக்காட்டாமல் அடக்கிக் கொண்டார்.

"நான் என் பெற்றோர்களுடன் ஊருக்குப் போகிறேன். உங்களிடம் சொல்லிக் கொண்டு போக வந்தேன்."

"இப்படித்திடீரென்றுநடந்துவிடும்என்று எதிர்பார்க்கவில்லை" என்றார் சந்திரசூடன்.

ராதா மௌனமாகத் தரையைப் பார்த்தபடி இருந்தாள். பிறகு நிமிர்ந்து, "பரணியை நீங்கள் எப்படியாவது தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். அவனுடைய அப்பா ரொம்ப உடைந்து போனார்" என்றாள்.

"அவனுக்கு ஏதோ மன அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது" என்றவாறே ராதாவைக் கூர்ந்து பார்த்தார். அவள் தரையை நோக்கினாள். "அவனுடைய அதிர்ச்சிக்கு என்ன காரணம் என்றே தெரியவில்லை" என்றார் சந்திரசூடன்.

ராதா தரையை நோக்கியபடியே இருந்தாள். நிமிர்ந்து பார்க்கத் தெம்பில்லை. குற்ற உணர்வினால் அவளுடைய மனம் குமைந்தது. அவளுடைய முகத்தில் நன்கு தெரிந்தது.

ராதாவையும் அவளுடைய பெற்றோர்களையும்ரயிலில்வழியனுப்பசந்திரசூடனும் பார்வதியும் சென்றிருந்தார்கள். வண்டி புறப்பட்டபோது, ஜன்னல் அருகிலிருந்து கண்களில் நீர் மல்க ராதா, "உங்களையெல்லாம் பிரிந்து போவது வருத்தமாயிருக்கிறது" என்றாள்.

பார்வதி, அவள் கையைப் பற்றிக் கொண்டு, "தைரியமாயிரு, விதி ஆட்டி வைக்கிறது. காலம்தான் மனத்தைத் தேற்ற வேண்டும். அடிக்கடி கடிதம் எழுது" என்றாள்.

கண்ணீரைத் துடைத்தபடி, சந்திரசூடனிடம் திரும்பிய ராதா, "பரணியை எப்படியும் தேடிக் கண்டுபிடித்து அழைத்து வந்துவிடுங்கள்" என்றாள்.

"ஏதோ அதிர்ச்சி. எதற்கோ பயந்து போய், சிறுபிள்ளைத்தனமாக ஓடியிருக்கிறான். எங்காவது ஆசிரமத்தில் இருப்பான். தேடிப் பிடித்து அழைத்து வந்துவிடுவேன்" என்றார் சந்திரசூடன்.

ரயில் நிலையத்திலிருந்து சந்திரசூடனும் பார்வதியும் வீட்டை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தபோது இருவருமே பேசவில்லை. இருவர் மனங்களும் கனத்துக் கிடந்தன. வீட்டை நெருங்கியபோது பார்வதி, "பாவம் ராதா. என்ன சுகத்தைக் கண்டாள்?" என்று கூறிப் பெருமூச்சுவிட்டாள்.

ஒரு வாரம் கழிந்துவிட்டது. பரணி இல்லாமல் அந்த வளவு வெறிச்சோடிக் கிடந்தது. சந்திரசூடன் பகலெல்லாம் ஊரைச் சுற்றினார். மனத்தில் தெம்பில்லை. எந்தப் பத்திரிகையில் பணிபுரியச் சம்மதிக்கலாம் என்பதைப் பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை.

அன்று மத்தியானம் அவர் மாடியிலிருந்த போது பார்வதி, இரண்டு கடிதங்களுடன் அவரைத் தேடி வந்தாள்.

"உங்களுக்கு இரண்டு கடிதங்கள் போஸ்ட்மேன் எங்கள் வீட்டில் போட்டுவிட்டுப் போயிருக்கிறார்" என்று கடிதங்களைக் கொடுத்தாள்.

முதல் கவரை வாங்கிப் பார்த்த சந்திரசூடன் பரபரப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்தார். கையெழுத்திலிருந்து பரணி எழுதியிருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டார். உறையைக் கிழித்துக் கடிதத்தைப் படித்தார்.

அதில் அவன், தான் ஏதோ ஓர் ஆசிரமத்தில் இருப்பதாகவும், தன்னைத் தேட வேண்டாம் என்றும் எழுதியிருந்தான். ஆனால் எந்த ஊர் என்று எழுதவில்லை. சந்திரசூடன் உறையைத் திருப்பிப் பார்த்தார். தபால் நிலைய முத்திரையிலிருந்து அவன் எந்த ஊரிலிருக்கிறான் என்பதை அறிந்து கொண்டார்.

"பரணி எழுதியிருக்கிறான். ஏதோ ஒரு ஆசிரமத்தில் இருக்கிறான். ஊர் தெரிந்து விட்டது. போய் அழைத்துக் கொண்டு வர வேண்டும்" என்றவாறே கடிதத்தை பார்வதியிடம் கொடுத்தார்.

"நல்ல பையன். ஆசிரமத்திலிருக்க வேண்டிய வயதா? அவனுக்கு என்ன ஆயிற்று?" என்றாள்.

"இயற்கைக்கு மாறான தத்துவங்களைச் சுமந்தால் இப்படித்தான் புத்தி பேதலிக்கும். மனிதனின் அடிப்படை உணர்வுகளை எதிர்த்து வாழ நினைக்கும்போது இந்த மாதிரி அதிர்ச்சிகள் ஏற்படும்" என்று கூறிக் கொண்டே மற்றொரு கடிதத்தைப் பிரித்தார். படித்துவிட்டு மேஜையில் வீசினார். "நீ வேண்டாம் என்றாயே, அந்தப் பத்திரிகையிலிருந்து மீண்டும் அழைப்பு வந்திருக்கிறது. இரண்டாயிரம் சம்பளம் தருவார்களாம்" என்றார்.

"நீங்கள் எந்தப் பத்திரிகையிலும் வேலைக்குப் போக வேண்டாம்." என்றாள் பார்வதி.

சந்திரசூடன் திகைப்புடன் அவளைப் பார்த்தார். "ஐயோ, நான் சாப்பிட வேண்டுமே" என்றார்.

"சுதந்திரமாகச் சாப்பிடுங்களேன்."

"வழி வேண்டாமா?"

"வழி இருக்கிறது." என்று சிரித்தாள். பிறகு, "இதோ வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டுக் கீழே போனாள். சில நிமிடங்களில் ஒரு சிறு பையுடன் வந்தாள். அவரிடம் நீட்டியபடியே, "வழி கேட்டீர்களே. இதில் இருக்கிறது." என்றாள்.

சந்திரசூடன் குழம்பியவராய் பையை வாங்கி, திப்பை இழுத்து உள்ளே பார்த்தார். ரூபாய் நோட்டுக்கள் இருந்தன.

திடுக்கிட்டு அவளை நிமிர்ந்து பார்த்தார்.

"நிழல் பத்திரிகை நடத்துவதற்குப் பணம். நீங்கள் யாரிடமும் வேலை பார்க்க வேண்டாம். சுதந்திரமாகப் பத்திரிகையைத் தொடங்குங்கள். ஐம்பதினாயிரம் இருக்கிறது" என்றாள் பார்வதி உற்சாகத்துடன்.

இதைக் கேட்டுத் திகைப்படைந்தவராய், "ஏது இவ்வளவு பணம்?" என்றார் சந்திரசூடன்.

"என் நகைகள் சும்மாத்தானே பாங்க் லாக்கரில் தூங்கிக் கொண்டிருக்கின்றன."

"ஐயோ, விற்றுவிட்டாயா?" என்று பதறினார்.

"ஊஹூம். சேட்டிடம் அடகு வைத்து, காலையில்தான் வாங்கி வந்தேன்."

"நகையை நீ அணிந்து கொள்ள வேண்டும் என்றேனே?" என்றார் கோபத்துடன்.

பார்வதி தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"எனக்கு இந்தப் பணம் வேண்டாம்" என்றார் சந்திரசூடன் கோபத்துடன். பிறகு, "முதலில் பணத்தைச் சேட்டிடம் கொடுத்து நகையை வாங்கி வா" என்றார்.

"உங்கள் பத்திரிகைக்காக வாங்கிய பணம். திருப்பிக் கொடுக்க மாட்டேன்."

"உன்னுடைய நகையை வைத்து வாங்கிய பணத்தை நான் வாங்க மாட்டேன்."

"நான் நகைகளைப் போட்டுக் கொள்ள வேண்டும். அவ்வளவுதானே? போட்டுக் கொள்கிறேன்."

"எல்லாவற்றையும்தான் அடகு வைத்து விட்டாயே" என்றார் எரிச்சலுடன்.

"நீங்கள் நிழல் பத்திரிகையை நடத்தி, சம்பாதித்து, சேட்டிடமிருந்து நகைகளை மீட்டித் தாருங்கள். கட்டாயம் அணிந்து கொள்கிறேன்" என்றாள் பார்வதி.

சந்திரசூடன் அவளை வியப்புடன் நிமிர்ந்து பார்த்தார். அவளுடைய கண்களில் தெரிந்த அன்பும் அந்நியோன்யமும் அவரை நெகிழ வைத்தன.


"இதற்கு உனக்கு வட்டி என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"வட்டியே கிடையாது."

"வட்டியில்லாமல் கடனா?"

"நண்பர்களுக்குள் ஏது வட்டி? நீங்கள் தானே சொல்வீர்கள். நட்பு கொடுக்கும் எடுக்காது என்று. நட்பு வட்டி எடுக்காது" என்று சிரித்தாள் பார்வதி.


(முற்றும்)



"ஒரு மாசம் முன்பு உன்னை அவன் ட்யூப் லைட்னு திட்டினதுக்கு இப்போ ஏன் கோபப் படறே?"

"இப்போதானே அதுக்கு அர்த்தம் புரிஞ்சுது?"

— கீழை. அ. கதிர்வேல்.



தலைமுறைக்கு
ஒரு முறை:

ஹாலி

1986, ஏப்ரல் 11ந் தேதிதான் ஹாலி வால் நட்சத்திரம் பூமிக்கு மிக நெருக்கமாக வருகிறது. அன்றைய தேதியில், அதற்கும் பூமிக்கும் இடையிலுள்ள தூரம் 6 கோடியே 20 லட்சம் கிலோமீட்டர்களாக இருக்கும். (அதாவது சந்திரனுக்கும் பூமிக்கும் இடையிலான தூரத்தைப் போல் பல மடங்கு); அப்போது மாலைவேளைகளில் தொடு வானத்தில் இந்த வால்நட்சத்திரம் உதயமாவதைப் பூமத்தியரேகைக்குத் தென் பகுதிகளில் உள்ளவர்கள் நன்ருகப் பார்க்க முடியும்; பின்பு இரவு முழுவதும் அது உச்சிவானத்தில் காட்சி தரும்.

பூமியின் வடபகுதிகளில் உள்ளவர்கள், இந்த வால்நட்சத்திரத்தைப் பொறுத்த வரையில், அவ்வளவாகக் கொடுத்து வைக்காதவர்கள் என்றே சொல்ல வேண்டும். ஏனென்ருல் இப்பகுதிகளில் நள்ளிரவுக்குப் பின்புதான் இது உதயமாகும்.

ஏப்ரல் மாதத்தின் மத்தியிலிருந்து, ஹாலி வால்நட்சத்திரம் வானிலிருந்து மெல்ல மெல்ல மறையத் துவங்கும்.

வால்நட்சத்திரம் என்பது வாயுக்கள், தூசுக்கள், பாறைச் சிதறல்கள் இவற்ருல் ஆனவை; சூரிய குடும்பம் உருவானபோது அவற்றிலிருந்து எஞ்சிய துண்டங்கள் என்றும் இவற்றைக் குறிப்பிடலாம்.

வால்நட்சத்திரத்தின் மைய உடல்பகுதி, 'நியூக்ளியஸ்' என்று அழைக்கப்படுகிறது; இதில் அடங்கியுள்ள வாயுக்களும், திடப் பொருள்களும் சூரியனின் வெப்பத்திஞலும் கதிர்வீச்சிஞலும் எதிர்ப்பக்கம் தள்ளப்படுவதால், இதற்கு வால் போன்ற பாகம் ஏற்படுகிறது. சூரிய ஒளியினல் தூண்டப்படும் வாயுக்கள், 'நியூக்ளியஸை'ச் சுற்றிலும் புகைமூட்டம் போன்ற ஓர் ஒளிவட்டத்தை உண்டாக்குகிறது. இது 'கோமா' என்று அழைக்கப்படுகிறது. வாயுக்கள் அதிகம் வெளியாகும்போது வால் பெருகிக் கொண்டே போகிறது; சூரிய ஒளியினல் இது பளபளப்பாக ஒளிவிடுகிறது.

ஹாலி வால்நட்சத்திரத்தின் பிரதான உடற்பகுதியின் குறுக்களவு 8 கிலோமீட்டர்கள்தான். ஆனல் இதன் வால்பகுதி பல ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் வரை நீளக் கூடியதாகும்.

இது இவ்வாறு 75 ஆண்டுகளுக்கு ஒரு முறை திரும்பி வருகிறது என்பதை எட்மண்ட் ஹாலி என்னும் வானியல் வல்லுநர்தான் முதன் முதலாக ஆராய்ந்து உலகுக்கு அறிவித்தார். அதனல் அவரது பெயரே இந்த வால்நட்சத்திரத்துக்குச் சூட்டப்பட்டுள்ளது.

ஹாலி வால்நட்சத்திரத்தை அறிவியல் பூர்வமாக ஆராய்வதற்கு, "அனைத்துலக ஹாலி ஆய்வு இயக்கம்" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமும் (நாஸா), மேற்கு ஜெர்மனியிலுள்ள எர்லாங்கன் — நூரெம்பர்க் பல்கலைக் கழகமும் கூட்டாக இதற்கு ஏற்பாடு செய்துள்ளன. ஹாலி வால்நட்சத்திரம் குறித்து உலகில் பல்வேறு இடங்களில் நடைபெறும் ஆய்வுகள் பற்றிய தகவல்களை இவை தொகுத்துத் தரும்.

'ஹாலி' வால்நட்சத்திரத்தை நெருங்கி ஆராய்வதற்கு, 'ஆஸ்ட்ரோ' என்னும் புதிய வானியல் ஆய்வுக்கூடத்தை அமெரிக்கா விண்வெளியில் செலுத்தும்; ஒருங்கிணைந்த 3 நவீனத் தொலைநோக்கிகள் பொருத்தப்பட்ட இந்த ஆய்வுக்கூடம், அமெரிக்க விண்வெளி ஓடத்தில் வைத்து அனுப்பப்படும்.

"ஆஸ்ட்ரோ" ஆய்வுக்கூடத்தைத் தாங்கிய இந்த விண்வெளி ஓடம் 1986 மார்ச் 6 ந்தேதி விண்வெளியில் ஏவப்படும். விண்ணில் அது 7 நாட்கள் சுற்றிவரும். ஹாலி வால்நட்சத்திரத்தை வசதியான இடத்திலிருந்து கண்டுகளிப்பதற்காக பூமத்திய ரேகைப் பகுதிக்கும், அதன் தென் பகுதிகளுக்கும் சிறப்புச் சுற்றுலாப் பயணங்களுக்குச் சில சுற்றுலா நிறுவனங்கள் ஏற்பாடு செய்துள்ளன!

ஆம்; ஹாலி தரிசனம் பெரும்பாலும் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கிடைக்கக் கூடிய அரிய வாய்ப்பு; இதன் பிறகு 21 வது நூற்ருண்டின் மையப்பகுதியில்தான் இந்த வால்நட்சத்திரம் மீண்டும் தலைகாட்டும்; அப்போது அதனை வேறு நவீன கோணங்களில் ஆராய்வதற்கு ஒரு புதிய தலைமுறையினர் தயாராக இருப்பார்கள்.

நன்றி: அமெரிக்கன் ரிப்போர்டர்



சாதனை



சிவாஜிக்கு லட்டு மாதிரி ரோல். சினிமா டைரக்டர் ராம்குமாராய் ஜொலிக்கிறார். My fair lady நினைவுக்கு வந்தாலும் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த பெண்ணைத் தேர்ந்தெடுத்து கதாநாயகியாய் அவர் உருவாக்கும் காட்சிகள் சிவாஜிக்குப் போட்ட வெல்லத்தினி. 'போதும் விடுங்க....' என்ற ஒற்றை வார்த்தையை எத்தனை பாவங்களில் சொல்ல முடியும் என்று அவர் நடித்துக் காட்ட, நளினி அற்புதமாய் அந்த பாவங்களை முகத்தில் கொண்டு வரும் காட்சியை ரசிக்காமல் இருக்க முடியாது.

சினிமாவே கதி என்று நினைவும், சிந்தனையும் தன் படங்களிலேயே அவர் வைத்திருக்க, குடும்பத்தில் சிறு பூகம்பம் வெடிக்கிறது. அவரால் . உருவாக்கப்பட்ட நாயகியை சிவாஜியின் மனைவி (கே.ஆர். விஜயா) சந்தேகிக்க ஆரம்பிக்க, அந்த சந்தேகம் விலக, அந்த நாயகி நளினி திரையுலகிலிருந்தே விலகிப் போகிறார். இடைவேளைக்கப்புறம் அவசியமானபோது அவர் மறுபடியும் திரையில் தலை காட்டும் கட்டம் சுவாரஸ்யமான திருப்பம்.

சிவாஜியின் மகனாகப் பிரபு. சாமியார் உடையிலிருந்து கொண்டு சினிமாவில் நடிக்க ஆரம்பித்து, நடிப்புக்காக காதலித்தவளையே நிஜத்திலும் காதலித்து..... சிக்கல்கள், குழப்பங்கள்......

சிவாஜிக்கு அடுத்தபடி நளினிக்கும் ஒரு நல்ல வாய்ப்பு. சாமியாடும் தொடர்ச்சியான பாத்திரங்களிலிருந்து ஒரு வரவேற்கத் தகுந்த மாறுதல். தன்னை வளர்த்த டைரக்டரின் குடும்ப வாழ்வு தடுமாற ஆரம்பித்ததும், நாசூக்காக விலகும் காட்சியும், பின்னால் தன் மகளை அதே டைரக்டரின் கனவு லட்சியத்திற்குத் துணை போக அனுப்பும் பாங்கும் நேர்த்தி.

இடைவேளைவரை விறுவிறுப்பான சம்பவங்கள்.

இதமான பாடல்கள்.

க்ளைமாக்ஸ்தான் ஒரு மாதிரி. அழுத்தமான காட்சி அமைப்பு என்ற அலையை நினைத்துக் கொண்டு உரலை இடித்திருக்கிறார்கள்.

ஜெயமன்மதன்

வங்கியில் ரூ 100 பெற செலவு ரூ 150!

எனது நண்பரின் பாட்டி, யுனைடெட் கமர்ஷியல் பேங்க் நாமகிரிப்பேட்டை கிளையில் ரூ 100/—ஐ டெபாசிட் செய்திருந்தார். நண்பரது ஆதரவில் இருந்து வந்த அவர் இறந்துவிடவே, டெபாசிட்டுக்குரிய காலம் முடிந்தபின் வங்கியில் பணத்தைப் பெற வாரிசான நண்பரும், நானும் அத்தாட்சிப் பத்திரத்தோடு சென்றோம். ''தாசில்தாரிடம் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களைப் பெற்று வந்தால்தான் பணத்தை வழங்க இயலும்'' என்று கூறிவிட்டனர். இவற்றைப் பெறப் படும் சிரமம் தவிர சம்பந்தபட்டவர்களைக் கவனிக்கும் விஷயத்தில் ரூ 150/—க்குக் குறையாமல் செலவாகும் என்று புரிந்தது. மீண்டும் வங்கியின் மேனேஜரை அணுகி, ''வேறு ஏதாவது சுலபமான வழி இருக்கிறதா சார்'' என்று கேட்டதற்கு, ''வேண்டுமானால் கோர்ட்டுக்குப் போய்ப் பாருங்க'' என்று கிண்டலாகப் பதிலளித்துவிட்டார். வெண்டைக்காயை விற்றுச் சுண்டைக்காயை வாங்க நினைப்பது மடத்தனம் என்று விட்டுவிட்டோம். இது போன்ற குறைந்த டெபாசிட் தொகையைப் பெறுவாவது, வங்கி தனது விதி முறைகளைத் தளர்த்தக் கூடாதா?

— இரா. சம்பத்குமார், இராசிபுரம்.

சில்லறையாக ஏற்படும் பெருநஷ்டங்கள்!

28.12.85—29.12.85 இரண்டு நாட்களில் குமரியில் இருந்து வேளாங்கண்ணி வழியாகப் புதுவைக்கு ஒன்பது தனியார் பஸ், இரண்டு அரசு பஸ்கள் மூலம் பயணம் செய்தேன். ஐந்து தனியார் மற்றும் அரசு பஸ்களில் சில்லறை தராததால் கோட்டை விட்டது ரூபாய் 2.35. மூன்று கழிவறையில் விட்டு வந்தது 35 காசு. இரண்டு டீக்கடையில் விட்டு வந்தது 0.25. ஓர் ஓட்டலில் விட்டு வந்து 40 காசு. பயணிகள் பொருள் பாது காப்பகத்தில் விட்டு வந்தது 10 காசு. ஒரு பஸ் டிக்கெட்டில் எழுதி வாங்காமல் விட்டது 80 காசு..... சில்லறைத் தட்டுப் பாட்டால் இவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஏற்படும் இழப்புக்களை அரசு ஈடு செய்யுமா? கூட்டிப்பார்த்தால் லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டமாகும்.

— வி. செல்வராஜ், ஆரோவில்.

மூடநம்பிக்கையால் பரிதாப முடிவு!

மூட நம்பிக்கைக்கு முடிவே இல்லையா? என்ற தலைப்பில் 29.12.85 'கல்கி' இதழில் வாசகர் ஒருவர் குமுறி இருந்தார். வரதட்சணைக் கொடுமையைப் போல் திருமணமாகாத பெண்களைப் பாதிக்கும் மற்றொன்று ஜாதகம். மூலம், கேட்டை, ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவர்களைத் திருமணம் செய்தால் குடும்பத்திற்கு ஆகாது என்று மூடப் பலன்கள் கூறி நடக்கக் கூடிய திருமணங்களையும் சிலர் தடுத்து விடுகிறார்கள். மேற்படி கல்கி இதழ் வெளியான மறுநாள் நாளிதழ் ஒன்றில் இடம் பெற்ற செய்தி அதிர்ச்சி அளிக்கிறது: ஜாதகத்தில் அபார நம்பிக்கை கொண்ட பட்டதாரிப் பெண்ணொருத்தி, தான் மூல நட்சத்திரத்தில் பிறந்ததால் தனக்குத் திருமணமாகாது என்று நம்பி தற்கொலை செய்து கொண்டாளாம். படித்திருந்தும் அறிவில்லாமல் பலியாகிவிட்டாள். இந்த மூட நம்பிக்கையினை ஒழித்து ஆணினம் தெளிவு பெறும்போதுதான் பெண்ணினம் பிழைக்கும்.

— மேனகா இராவணன், சென்னை—8.

நியாய விலைக்கடை அநியாயம்!

தமிழக அரசின் நியாய விலைக் கடைகளில் வாரம் ஒரு குறிப்பிட்ட நாள் மட்டும் மண்ணெண்ணெய் வழங்குகிறார்கள். அந்த நாளில் கெரசின் வாங்கினால்தான் உண்டு. மறுநாள் போனாலோ அல்லது அன்றே சிறிது தாமதமாகப் போனாலும் 'கெரசின் தீர்ந்து போச்சு' என்று கைவிரித்துவிடுகிறார்கள். ஒரு அட்டைக்கு இத்தனை லிட்டர் என்ற கணக்கில் அந்த வட்டாரத்தில் எத்தனை நுகர்வோர் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டுத்தான் அரசு எண்ணெய் வழங்குகிறது. இப்படி இருக்க, வாங்காத கார்டுதாரர்களின் கெரசின் என்னவாயிற்று? கௌண்டரில் இருப்போர் தனக்குத் தெரிந்த 'கார்டு' இல்லாத நபர்களுக்கும், கார்டு வைத்திருக்கும் தெரிந்த நபர்களுக்கும் கெரசின் அதிகமாக வழங்குவதால்தான் 'தீர்ந்து போச்சு' என்று கைவிரிக்கின்றனர். நடுத்தர மக்களே குறிப்பிட்ட நாளில் கெரசின் வாங்கப் பணமில்லாமல் தவிக்கின்றனர். ஏழ்மையில் வாடுவோரின் நிலை இதைவிடக் கொடுமை! எப்போது வேண்டுமானாலும் கெரசின் நியாய விலைக் கடைகளில் கிடைக்கவும், கௌண்டரில் இருப்போரின் 'முறைகேடு'களைத் தவிர்க்கவும் அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

— ஸ்ரீ க்ருஷ்ணகான ப்ரியன், குடியாத்தம்.

பாங்காக்கிலும் மாரியம்மன் கோயில்

தமிழ்நாட்டைப் போலவே தாய்லாந்தில் எங்கு சென்றாலும் கோவில்கள் தென்படுகின்றன. ஆனால் நம் ஊர் கோவில்களில் இருக்கும் நெரிசலும் சத்தமும் இங்கு இல்லை. ஜனங்கள் அதிகமாக இருக்கும் கோயில்களிலும் எல்லாரும் அமைதியாகவே பிரார்த்தனை செய்கிறார்கள். புத்தர் சிலைகளுக்கு முன் கீழே விரித்திருக்கும் ஜமுக்காளத்தின் மீது உட்கார்ந்து கண்ணை மூடி தியானத்தில் அமர்ந்திருக்கிறார்கள். ஊதுவத்தி ஏற்றுகிறார்கள். பூஜை எதையும் நான் பார்க்கவில்லை. 'தாய்' பாஷையில் கோவிலுக்கு 'வாட்' (WAT) என்று சொல்கிறார்கள்.

மரகத புத்தரின் ஆலயத்தை விட்டுக் கிளம்பி வெளியில் வந்து திரு ரங்கராஜன் சொல்லியிருந்ததுபோல் சற்றுத் தொலைவில் இருந்த வாட்ஃபோ என்கிற சயன புத்தரின் ஆலயத்தை நோக்கி நடந்தேன். நடக்க நடக்கப் பாதை நீண்டது போல் எனக்குப்பட்டது. அதிகக் கூட்டமில்லாத நவீன பஸ்கள் செல்வதைக் கவனித்துக் கோவில் வரை செல்லும் ஏதாவது பஸ்ஸில் ஏறிக் கொள்ளலாம் என்று பல பேர்களை அணுகி ஆங்கிலத்தில் கேட்டேன். யாருக்கும் புரியவில்லை. ''நோ இங்கிலீஷ்'' என்று கையை விரித்தார்கள்.

நடந்தால் எடை குறையும் என்கிற சமாதானத்துடன், காலியாகச் சென்று கொண்டிருந்த பஸ்களின் பக்கம் பார்வையைத் திருப்பாமல் நடந்தேன். கோவில் இருக்கும் தெரு ஒரு சந்து. பாதையோரத்தில் நிறையப் பேர்கள் இளநீர் விற்றுக் கொண்டிருந்தார்கள். மட்டையோடு இல்லை. வெகு கலையழகோடு வெளி மட்டையை ஒட்டச் சீவித் தாழம்பூ நிறத்தில் அடுக்கடுக்காய் இளநீர் காய்களைப் பார்க்கவே மிக ரம்யமாக இருந்தது. ''20 பாத்; வாங்கிக் கொள்'' என்று சொல்லும் அபிநயமுமாய்ச் சிலர் கூறினார்கள். அவசரக் கணக்குப் போட்டு 'அடேயப்பா' பத்து ரூபாய்' என்று நான் நடையைத் தொடர்ந்தேன். எனக்கே சயனித்தால் தேவலாம் என்று தோன்றுமளவுக்குக் கால்கள் கெஞ்சத் தொடங்கியபோது, சயன புத்தரின் கோவில் தென்பட்டது.

இருநூறு ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டதாம். புராதன கோவிலின் சூழல் இருக்கிறது. வெளிப் பிராகாரத்தில் ஏகச் சின்னச் சின்ன சந்நிதிகள். எந்த இடத்திற்குச் சென்றாலும் புத்தரின் சிலைகள். நிறைய புத்த பிட்சுக்கள் அங்குமிங்கும் பரபரப்பாகச் சென்றுகொண்டிருந்தார்கள். ஏழெட்டு வயசே இருக்கும் சில பிள்ளைகள் புத்த பிட்சுக்களாக இருப்பதைப் பார்த்தேன்.


ஒரு மூலையில் இருந்தது சயன புத்தர் சன்னிதி. வெளியில் செருப்பைக் கழற்றி விட்டு உள்ளே நுழைந்ததும் —

பிரமித்துதான் போனேன். சாதாரண பிரமிப்பு இல்லை. சிலிர்ப்பு. பள்ளி கொண்ட அரங்கநாதரின் நினைவு எனக்கு வந்தது. தங்கத் தகடு வேய்ந்த இந்தப் பள்ளி கொண்ட புத்தர் 46 மீட்டர் நீளம்; 15 மீட்டர் உயரம். கீழ் நோக்கிய பார்வையில் காருண்யத்தையும் புன்னகையில் சாந்தத்தையும் வடித்திருந்த சிற்பி தெய்வ தரிசனம் அடைந்தவனாகத்தான் இருக்க வேண்டும்.

அருகில் யாரும் சென்றுவிட முடியாதபடி அரண் கட்டி வைத்திருக்கிறார்கள். பெரிய பெரிய தூணை வேறு பாதுகாப்பாகக் கட்டியிருப்பதால் புகைப்படம் எடுப்பது பிரம்மப் பிரயத்தனம். இந்தக் கோவில் முன்பு பெரிய கல்விக் கூடமாக இருந்ததாம். 'தாய்லாந்தின் முதல் சர்வகலாசாலை' என்று இதைப் பற்றிச் சொல்கிறார்கள்.


சொன்ன நேரத்துக்கு ரங்கராஜன் வந்தார். காரில் ஏறிக் கொண்டதும், 'தமிழர்கள் இங்கே கட்டியிருக்கிற கோவிலைப்

கிழக்கே ஓர் உலகம்





* வாட்ஃபோ சயன புத்தர் கோயில்



● கோவில் பிராகாரம்



● புத்தர் கோவிலும் புத்த பிக்ஷுவும்

பார்க்கிறீர்களா?'' என்றார்.

ஜன சந்தடி மிகுந்த ஒரு பகுதியில், கடைகளும், பூ விற்பவருமாக 'ஜே ஜே' என்கிற ஒரு இடத்தில் இருக்கிறது அந்த மாரியம்மன் கோவில். வெளிப் பிராகாரத்தைத் தாண்டிச் சென்றதும் கோவிலின் உட்பகுதியில் மிக மும்முரமாகக் கட்டிட வேலை நடப்பது தெரிந்தது.

''ரிப்பேர் வேலை நடக்குது'' என்றார் கோவில் பூசாரி கோவிந்தசாமி. தமிழர்களைப் பார்த்த சந்தோஷத்தில் தாமாக வலிய வந்து பேச ஆரம்பித்தார். ''கட்டிடத்தைப் புதுப்பிக்கிறோங்க. இந்த நாட்டுக்கு வந்த தமிழருங்க (அநேகமாய் வியாபாரிகள்) நூற்று அறுபது வருஷத்துக்கு முந்திக் கட்டின கோவில் இது.

முள்ளங்குடி கோவிந்தசாமி பாங்காக்குக்கு வியாபார நிமித்தமாக வந்து நாற்பது வருஷங்கள் ஆகிறதாம். ''இந்தக் கோவிலுக்காக வரவழைக்கப்பட்ட குருக்கள் யாரும் இந்த பாஷை தெரியாத ஊரிலே தங்கப் பிடிக்காம போயிட்டதாலே, இப்ப நான்தான் குருக்கள்.''

தமிழில்தான் பூஜை நடக்கிறது. ஆனால் வரும் பக்தர்கள் பெரும்பாலும் சீனர்கள், தாய்காரர்கள். திருப்பணிகளுக்கு அதிகமாகக் காணிக்கை செலுத்துபவர்களும் அவர்கள்தான். இப்பொழுது செப்பனிடும் செலவெல்லாம் அரசாங்கமே ஏற்றுள்ளது.

ஒரு பக்கம் பழுது வேலை நடந்து கொண்டிருக்க அதைப் பொருட்படுத்தாமல் சீனர்களும் தாய்காரர்களும் வாயே திறக்காமல் மண்டியிட்டோ ஊதுவத்தி கொளுத்தியோ மௌனமாகக் கர்ப்பக்கிருஹத்தைப் பார்த்தபடி பிரார்த்தனையில் இருந்தார்கள். அதிகமாக அங்கு இளைஞர்கள் இருப்பதைக் கண்டேன்.

''இங்கே இளைய தலைமுறைக்கும் கடவுள் பக்தி நிறைய உண்டு'' என்றார் கோவிந்தசாமி.

''இந்தியாவுக்கு மறுபடி போனீர்களா? தாய்நாட்டுடன் தொடர்பு வைத்திருக்கிறீர்களா?'' என்று அவரைக் கேட்டேன்.

''இல்லே. கூடப் பிறந்தவங்க எல்லாரும் இங்கே வந்தாச்சு. இந்தியாவுக்குப் போகணும்கற அவசியம் இல்லாமப் போச்சு. ஊர் ஞாபகமெல்லாம்கூட இல்லே. இங்கேயே கிளை பரப்பிட்டோம்.

''பாஷையை மட்டும் காப்பாத்திக்கிட்டிருக்கீங்க!''

''ஆ, தாய் பாஷை விட்டுப் போகுமா?'' என்ற கோவிந்தசாமி தொடர்ந்தார்: ''நவராத்திரி கிருத்திகைக் கால உத்சவங்களின் போது தாய், மலேசியக்காரர்கள் உற்சாகமாகக் கலந்து கொள்வார்கள். காவடிகூட எடுப்பார்கள்!''

கோவிலிலிருந்து கிளம்பி நாங்கள் கடைத் தெருவுக்குச் சென்றோம். மேற்கத்திய நாடுகளில் இருப்பது போல் பெரிய டிபார்ட்மென்

சிவசங்கரி

அடுத்த இதழில்:

பகைவனுக்கும் அருளிய போப்பாண்டவர்

—அட்டைப் படக் கட்டுரை



டல் ஸ்டோர்ஸ்கள் பாங்காக்கில் இருக்கும் என்று நான் நினைத்திருக்கவில்லை. ஒவ்வொன்றும் குட்டி நகரங்கள் போல் பிரும்மாண்டமானவை. எத்தனை அடுக்கு மாடிகளில் கடைகளோ, அத்தனை அடுக்கு கார் பார்க்கிங் இடமும் உண்டு!

''இங்கு மொத்தம் 35 டிபார்ட்மென்டல் ஸ்டோர்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் கிளைகளும் உண்டு'' என்றார் ரங்கராஜன்.

எல்லா ஸ்டோர்களையும் விடப் பெரியதான சென்ட்ரல் பிளாஸாவிற்குச் சென்றோம். Wedding — Good Living Show 85 என்கிற விழாவிற்காக உலக ரெக்கார்டை முறிக்கும் ஒரு பிரும்மாண்டமான வெட்டிங் கேக் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். கின்னஸ் புத்தகத்தின் அதிகாரிகளுக்கு இதைப் பார்வையிட அழைப்பு விடுத்திருக்கிறார்கள். இது 44 அடி உயரமும் 70 அடுக்குகளும் கொண்டதாம். நான் சென்றபோது இன்னும் இந்தக் கேக்கைப் பற்றின பேச்சுத்தான் எங்கு பார்த்தாலும். இதற்குச் செலவு—10,000 முட்டைகள், 160 லிட்டர் பால், 250 கிலோ வெண்ணெய், 1,375 கிலோ சர்க்கரை, 160 கிலோ மைதா.... 5,000 பவுண்டு எடையுள்ள கேக்கைத் தயாரித்து முடித்ததும் ஊனமுற்றோர் நலன் கேந்திரத்துக்கு நன்கொடையாகக் கொடுக்கப் போவதாகச் சொன்னார்கள்.

அன்று இரவு எங்களுக்கு சாஸ்திரி தம்பதிகளின் வீட்டில் சாப்பாடு. நாலைந்து வருஷங்களாக பாங்காக்கில் இருக்கும் திருமதி சாஸ்திரி, ''குழந்தைகளை இந்தியாவில் படிப்புக்காக விட வேண்டியிருப்பதால் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறதே தவிர மற்றபடி பாங்காக் ரொம்ப வசதியான இடம். வேலைக்காரர்கள் நம்பகமானவர்கள். கொஞ்சம்கூட சோம்பல் இல்லாமல் சுத்தமாக வேலை செய்வார்கள். இங்கு வீட்டு வாடகை அதிகம். அதனால் இருக்க இடம் கொடுத்துவிட்டால் அதிகச் சம்பளம் கூடக் கேட்கமாட்டார்கள். ரொம்ப மரியாதையுடன் இருப்பார்கள்'' என்றார்.

அவர்களுடைய பணிப் பெண்ணுக்குப் பதினைந்து வயதிருக்கும் என்று நினைத்தேன். கல்யாணமாகிக் குழந்தை இருக்கிறதாம்! இவர்களுக்கு உருவமும் சின்னது, முகமும் இளசு! வரவேற்பறையில் எங்களைத் தாண்டிச் செல்லும்போது பணிவுடன் குனிந்து வணங்கிச் சென்றாள்.

''பெண்களின் நிலை இங்கே எப்படி?'' என்று திருமதி சாஸ்திரியிடம் கேட்டேன்.

''நம்ம ஊரை விட மோசம்!'' என்ற அவர் விளக்கினார்: ''நம்ம நாட்டிலே யதார்த்த வாழ்க்கையிலே நமக்குச் சுதந்திரம் இருக்கோ இல்லையோ சட்டப்படி பல சுதந்திரங்கள் உண்டு. இங்கே அதுவும் கிடையாது. பெண்கள் விவாகரத்து கோர முடியாது. சொத்துரிமை கேட்க முடியாது. கணவனுடைய அனுமதியில்லாமல் எந்தக் காரியத்தையும் செய்துவிட முடியாது. ஆனால் தாய் ஆண்களைக் கேட்டால், ''எங்கள் பெண்களுக்கு எந்தக் குறையும் இல்லை. அவர்கள் தான் வீட்டு ராணிகள்'' என்பார்கள்!''

திருமதி சாஸ்திரி குரலைத் தணித்துக் கொண்டு மேலும் சொன்னார்: ''இந்த ஊரில் பெண்களைக் கேவலப்படுத்துகிற மாதிரி வேறு எங்கும் பார்க்க முடியாது. இங்கு நடக்கும் விபசாரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களோ? மகா கேவலம்! பாட் பாங் என்கிற பெரிய தெருவே இருக்கிறது. பெரிய டூரிஸ்ட் அட்ராக்ஷன் அது! அரசிக்கு அடுத்தபடியாக இவர்களுக்கு அந்நியச் செலாவணியை அள்ளிக் கொடுப்பது பாட் பாங்க்தான்!''

அந்தத் தெருவைப் பார்க்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

(தொடரும்)

பாரதி சிலைக்கு இந்த தாமதம் ரகசியமா?



பாரதி நூற்றுண்டு விழா 1982ல் எட்டயபுரத்தில் நடந்தபோது முதல்வர், ''தில்லியில் பாரதியார் சிலை அமைக்கப் படும்'' என்று பலத்தகைத்தட்டலுக்கிடையே அறிவித்தார். இந்தியாவின் தலைநகரத்திலே, தமிழ்நாட்டின் சிறந்த கவிஞனின் சிலை இடம் பெறப் போகிறதே என்று ஒவ்வொரு தமிழ னும் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தான். ஆனல் முதல்வர் சொன்னது சொன்ன படியே இருக்கிறது. ஆண்டுகள் மூன்றுக்கு மேல் ஆகிவிட்டன. அதற்கப்புறம் சிலையைப் பற்றியே பேச்சு கிடையாது. சிலை வைக்கும் திட்டம் என்னதான் ஆயிற்று? துருவி ளேம். அதிர்ச்சியடைந்தோம்! சிலை செய்து ஒன்றரை வருடங்களுக்கு மேலாகிவிட்டது! சிலையைச் சென்று பார்த்தோம். பத்தடி உயரக் கம்பீரமான சிலை. ஒன்றரை வருடங்க ளாகச் சிற்பியின் வீட்டில் தில்லிக்குச் செல் வதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறது! சிற்பி மோகன்தாஸைச் சந்தித்த போது அவர் சொன்னர். ''1983 இறுதி வாக்கில் அப்போது செய்தித்துறை அமைச்சராக இருந்த ஆர். எம். வீ. அவர்கள் சிலையைப் பார்த்து ஓ. கே. சொல்லி விட்டார். 1984ம் வருடமே தில்லியில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். முதலில் சரியான இடம் கிடைப் பது கஷ்டமாக இருந்தது. அப்புறம் பிரதமர் இந்திராவின் மரணம், முதல்வரின் உடல்நிலை ஆகிய காரணங்களால் தள்ளிப் போனது: 1985ம் வருடம் செப்டம்பர் மாதம் திறப்பு விழா நடக்கும் என்ருர்கள். செப்டம்பர்போயிற்று.டிஸம்பரில்கட்டாயம் என்ருர்கள். ஆனல் ஒன்றும் நடக்கவில்லை. எங்கே தாமதம் என்று தெரியவில்லை. தில்லி யில் பீடம் தயாராகிவிட்டது.''

ஒரு டன் எடையுள்ள இந்தப் பாரதி சிலை யைச் செய்ய ஆறு மாதங்கள் ஆனதாம். முற்றிலும் வெண்கலம்.

பாரதியின் பெருமையைப் பரப்புவதைத் தமது லட்சியமாகக் கொண்டு இயங்கும் பாரதி இளைஞர் சங்கத்தலைவர் ராமமூர்த்தி அவர்களிடம் விசாரித்த போது, அவர் சொன்னர்:

''இதுபற்றிப் பிரதமரிடம் இரண்டு முறை கூறினேன். முதல் முறை சொன்ன பிறகு தான் தில்லியில், பீடம் வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சென்றவருடம் டிஸம்பரில் கண்டிப்பாய்த் திறக்கப்படும் என்ருர்கள். எந்த இடத்தில் தாமதம் என்று தெரியவில்லை. சிலை தயார், தில்லியில் பீடம் தயார், எடுத்துக் கொண்டு போய்த் திறக்க ஒன்றரை வரு டமா? தமிழக அரசின் அதிகாரிகள் 'இதோ அதோ' என்கிருர்களே தவிர, காரியம் நடக்க வில்லை. தமிழக அரசு விழித்துக் கொள் ளுமா?''

தில்லியில் முக்கிய இடமான கான் மார்க் கெட் என்ற பகுதியில் சிலை நிறுவப்பட இருக்கிறது. வருடா வருடம் தலைவர்களின் பிறந்தநாளின் போதுதான் அவர்களின் ஞாபகம் அரசுக்கு வரும். இனி பாரதியார் பற்றி இந்த வருடம் டிஸம்பரில்தான் பேசு வார்களா? அதுவரையில் சிலை காத்துக் கொண்டிருக்க வேண்டுமா?

— நமது நிருபர்.

எதிர்ப்பக்கம்:

சொக்கிய சிரிப்பு!

வண்ணப்படம்: திலீப் பானர்ஜி.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543).

Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.



REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Srilanka

